# அம்மா அப்பா

## பாகம் 1

# அம்மா அப்பா

## பாகம் 1

### அருமை தெரிந்தால் நாளெல்லாம் பௌர்ணமிதானே!

✤ ✤ ✤

நிலா இருக்கும்வரை அதன்
அருமை நமக்குத் தெரிவதில்லை.
அருமை தெரிந்து வரும்போது
அன்று அமாவாசையாக இருக்கும்.

பெற்றோர் இருக்கும்போது பலருக்கு
அவர்கள் அருமை தெரிவதில்லை.
காலதாமதமாக அறியும்போது
அவர்கள் இருப்பதில்லை.

யார் வேண்டுமானாலும் எதை வேண்டுமானாலும்
நகல் எடுத்துக் கொள்ளலாம்,
வியாபார நோக்கு இல்லாதவரையில்.
நல்ல விஷயங்கள் பரவட்டுமே !

புத்தகம் அச்சிடுபவர் :
**ராஜ்குமார் பிரிண்டர்ஸ்**
புத்தூர், திருச்சிராப்பள்ளி-620 017.
செல் : 98651 13112

# அம்மா அப்பா - பாகம் 1

திருச்சிராப்பள்ளி – 1
11.12.13

## முன்னுரை

திருச்சி ஐயப்ப சங்க வளாகத்தில் "வாரம் ஒரு நீதிக்கதை" என்ற தலைப்பில் ஒவ்வொரு வாரமும் வெவ்வேறு தலைப்புகளில் கோயிலுக்கு வரும் அன்பர்கள் படித்துப் பயன்பெறும் வகையில் ஏதாவது ஒரு கதையோ, கட்டுரையோ, கவிதையோ, அல்லது அவர்களுக்கு உபயோகப்படும்படியான நிகழ்ச்சி பற்றியோ எழுதி வைப்பது பல ஆண்டுகளாக நடைபெற்று வரும் ஒரு பழக்கமாகும். அப்படிப்பட்ட கருத்துக்களில் "அம்மா அப்பா"வைப் பற்றி எழுதியவைகளை அன்பர்கள் வயது வித்தியாசமின்றி மெய்மறந்து, ஆத்மார்த்தமாக படித்து மெய்யுருகி கண்ணீர் சிந்தும் நிகழ்ச்சி மிகச் சாதாரணமான ஒன்று. படித்த பலர் இக்கதைகளின் தொகுப்பு தமக்கு கிடைக்குமா என்று ஆதங்கத்துடன் அடிக்கடி வினவினார்கள். அவர்களின் விருப்பத்தைப் பூர்த்தி செய்யும் பொருட்டு, அவ்வாறு எழுதிவந்த கதைகள், கவிதைகள், கட்டுரைகள் சிலவற்றை மட்டும் தொகுத்து மக்கள் படித்துப் பயன் பெறும் வகையில் இங்கே வழங்கியுள்ளோம்.

இக்கதைகள் எல்லாம் நம்மால் எழுதப்பட்டவை அன்று. ஆசிரியர்கள் பலரால் எழுதப்பட்டு பல்வேறு இதழ்களில் வெளியானவைகள்தான் இவை. அவர்களது அனுமதி இல்லாமல் படைப்புகளை வெளியிடுவதில் ஆட்சேபம் இருக்காது என நம்புகிறோம். கட்டுரைகள் மிக நெகிழ்வாக உள்ளன, நன்றாக உள்ளன, உபயோகமாக உள்ளன என்று யாராவது நினைத்தால் அப்பெருமைகள் அனைத்தும் அந்தந்த ஆசிரியர்களையும், பத்திரிக்கைகளையும் சேரும். சில படைப்புகளின் ஆசிரியர் பெயர் தெரியாததால் அதைக் குறிப்பிட இயலாதது சற்று வருத்தமே!

இங்கு கொடுத்துள்ளவைகளைப் படித்துவிட்டு, வளரும் தலைமுறையினர் இவைகளை ஒரு நல்ல பாடமாக எடுத்துக்கொண்டாலோ அல்லது தவறு செய்தவர்கள் மனம் திருந்தினாலோ இத்தொகுப்பினை வெளியிட்டதன் தூய நோக்கம் நிறைவேறுகின்றது.

வியாபார நோக்கில் யாம் இதை வெளியிடவில்லை. இத்தொகுப்பை யார் வேண்டுமானாலும் காப்பி எடுத்துக்கொள்ளலாம். நல்ல கருத்துக்கள் எல்லோருக்கும் போய்ச் சேர்ந்தால் அதைவிட வேறு மகிழ்ச்சி என்ன இருக்கமுடியும்!

*தாய் தந்தையை என்றும் வணங்குவோம்*
*அவர்கள் ஆசி என்றும் வேண்டும் நமக்கு*
*எப்பொழுதும் எங்கேயும்*

தொகுப்பு :

**B. கனக சபாபதி**
**94430 43426**
bkvaluer@gmail.com

**S. பாலகுமாரன்**
**89034 63858**

# பொருளடக்கம்


| எண். | தலைப்பு | பக்க எண். |
|---|---|---|
| 1 | தாயின் பாசம் | 1 |
| 2 | அம்மா... | 2 |
| 3 | அம்மாவின் அன்பு | 2 |
| 4 | சரணம் என்று இறுகப் பற்றிக் கொள் | 3 |
| 5 | உனக்கும் எனக்கும் இடையில் ஏன் அந்த இடைவெளி | 4 |
| 6 | உயிரோடு எரித்தது...உன் பார்வைதான் | 4 |
| 7 | அம்மா சொன்ன 6 பொய்கள் | 5 |
| 8 | அம்மாவின் கைகள் | 7 |
| 9 | பிறர் வேதனை அறியும் அம்மா ! | 10 |
| 10 | மகனே! வாயேன், ஒரே ஒரு முறை | 11 |
| 11 | அம்மா என்றழைக்காத உயிரில்லையே | 12 |
| 12 | தாயின் பூரிப்பு | 13 |
| 13 | அன்னையைப் போல் ஒரு தெய்வமுண்டோ? | 13 |
| 14 | உயிர் பிரியும் தருவாயில் என் மடி சாய்ந்து | 14 |
| 15 | தாய் என்றும் வருந்துவதில்லை | 14 |
| 16 | என் அம்மா | 15 |
| 17 | குற்ற உணர்வு | 17 |
| 18 | இன்று நீங்கள் இல்லையே அம்மா! | 18 |
| 19 | கொடுத்து வைத்தவன் | 20 |
| 20 | புதிய வானப்பிரஸ்தம் | 22 |
| 21 | ஒரு தாயின் சக்தி | 27 |
| 22 | சாதிப்பவள் தாய் | 27 |
| 23 | அம்மாவுக்கு சொல்ல வேண்டிய ஸ்ராத்த மந்திரம் | 28 |
| 24 | கயா : மாத்ரு ஷோடஸி ஸ்லோகமும் அர்த்தமும் | 30 |

| எண். | தலைப்பு | பக்க எண். |
|---|---|---|
| 25 | அப்பாவாக வேண்டும் | 32 |
| 26 | எப்போது பறிகொடுத்தேன் மகனே! | 32 |
| 27 | இப்படியும் ஒரு அப்பாவா? | 33 |
| 28 | நீ நல்லா இருக்கணும்பா | 36 |
| 29 | நீ கற்றுக் கொடுக்கிறாய்.... உறவுகள் இதுதானென்று | 38 |
| 30 | நிழலும் நிஜமும் | 39 |
| 31 | தவமாய் தவமிருந்து | 39 |
| 32 | அப்பா என்னை மன்னிப்பீர்களா? | 40 |
| 33 | மா மரமும், நாமும் | 43 |
| 34 | அவர்கள் யாசிப்பது மனித உறவை | 44 |
| 35 | அப்பாவின் சோகங்கள் வெளிவருவதில்லை | 47 |
| 36 | அனுசரணை வேண்டும் மகனே ! | 49 |
| 37 | அப்பா, இன்று நீங்கள் இல்லையே! | 50 |
| 38 | அன்பு அப்பாவுக்கு ஓர் மகளின் அர்ப்பணிப்பு | 51 |
| 39 | பெற்றோர்களைக் கவனித்தல் மகன் கடமையா அல்லது மகள் கடமையா? | 53 |
| 40 | அசட்டுத்தனம் | 54 |
| 41 | இரண்டு தேவதைகள் | 55 |
| 42 | நிலையான வாழ்வு தரும் நீத்தார் வழிபாடு | 56 |
| 43 | DEAR DAD | 57 |
| 44 | WHO IS A FATHER? | 58 |


* * *

# 1. தாயின் பாசம்

சீனாவில் ஏற்பட்ட பூகம்பத்தின் போது நிகழ்ந்த இந்த உண்மை நிகழ்ச்சி எடுத்துக் காட்டுவது ஒரு தாயின் தியாகத்தை.

பூகம்பத்தின் அதிர்வுகள் ஓய்ந்த பிறகு, மீட்புப் பணியாளர்கள் ஒரு இளம் பெண்ணின் வீட்டு இடிபாடுகளை நெருங்கியபோது, அந்தப் பெண்ணின் சடலத்தை இடையில் இருந்த ஓட்டைகளின் வழியாகக் கண்டார்கள். வழிபாடு செய்வதைப் போல, அவளது முழங்கால்கள் மடங்கி ஒரு வினோதமான நிலையில் இருந்தது. உடல் முற்றிலும் முன் குவிந்து, அவளது இரு கைகளும் ஏதோ ஒரு பொருளைப் பாதுகாத்துக் கொண்டு இருப்பதைப்போல இருந்தது. இடிந்த அவளது வீடு அவளது முதுகு மற்றும் தலையில் விழுந்திருந்தது.

மீட்புக் குழுவின் தலைவர், பல இடர்களுக்கு நடுவில் சுவற்றில் இருந்த குறுகிய ஓட்டை வழியே தனது கைகளை நுழைத்து அந்தப் பெண்ணின் உடலைத் தொட்டார். அந்தப் பெண்மணி ஒருவேளை உயிரோடு இருக்கலாமோ என்ற எதிர்பார்ப்பில். ஆனால் விரைத்து, குளிர்ந்து போயிருந்த அவளது உடல் அவள் கண்டிப்பாக இறந்து விட்டாள் என்பதை அவருக்கு உணர்த்தியது.

அவரும், மற்ற மீட்புப் பணிக் குழுவினரும் அந்த வீட்டை விட்டு விட்டு அடுத்த இடிந்து விழுந்திருந்திருந்த கட்டிடத்திற்கு செல்லத் தயாரானார்கள். ஏதோ சில காரணங்களால், அந்தக் குழுத் தலைவர், அந்த இறந்த பெண்மணி இருந்த பாழடைந்து விட்ட அவளது வீட்டிற்குச் செல்ல உந்தப் பட்டார். மறுபடியும், அவர் குனிந்து, அவரது கையை, இடுக்குகள் வழியாக நுழைத்து, அந்த இறந்த உடலின் அடியில் இருந்த இடத்தில் தேடிப் பார்த்தார். திடீரென்று... அவர் உற்சாகத்துடன் கூச்சலிட்டார். “ஒரு குழந்தை! அங்கே ஒரு குழந்தை இருக்கிறது!.” என்று. அந்தக் குழு முழுவதும் இப்போது இணைந்து பணியாற்றினார்கள். வெகு கவனமாக, அந்தப் பெண்ணின் சடலத்தைச் சுற்றியிருந்த இடிந்து விழுந்திருந்த பொருட்களின் குவியல்களை விலக்கினார்கள். அந்த இறந்த தாயின் சடலத்திற்கு அடியில் ஒரு பூப்போடப்பட்டிருந்த போர்வையில் ஒரு மூன்று மாத ஆண் குழந்தை சுற்றப் பட்டு இருந்தது. ஆம்! அந்தத் தாய் தன் மகனைக் காப்பதற்காக தன் உயிரையே தியாகம் செய்திருந்தாள். அவளது வீடு இடிந்து விழுந்து கொண்டு இருந்தபோது, அவள் தன் ஒரு போர்வையாக, தன் மகனைக் காப்பதற்கு தன் உடலையே பயன்படுத்தி இருந்தாள். அந்தக் குழுத்தலைவர் அவனைத் தூக்கும் போது, அந்தக் குழந்தை அமைதியாக உறங்கிக் கொண்டு இருந்தது.

மருத்துவர் அந்தச் சிறு குழந்தையைப் பரிசோதிப்பதற்கு உடனே வந்தார். அந்தப் போர்வையைப் பிரித்த போது அதற்குள் ஒரு செல்போன் இருப்பதைக் கண்டார். அதன் திரையில் ஒரு செய்தி இருந்தது : “உனக்காக எனது உயிரையும் கொடுக்கத் தயங்க மாட்டேன். நீ எனது மகன்’’ என்பதே அந்த வாசகம்! அந்த செல்போன் ஒருவரிடமிருந்து மற்றொருவருக்குக் காண்பிக்கப் பட்டது. அதைப் படித்த ஒவ்வொருவரும் தேம்பித் தேம்பி அழுதார்கள். தன் குழந்தை மேல் அந்தத் தாய் வைத்திருந்த பாசம் அப்படிப்பட்டது!

Provided by : **தியாகு** - REC 72

* * *

## 2. அம்மா....

மழையில் நனைந்துகொண்டே
வீட்டுக்கு வந்தேன்

'குடை எடுத்துட்டுப்
போக வேண்டியது தானே'
என்றான் அண்ணன்

'எங்கேயாச்சும்
ஒதுங்கி நிக்கவேண்டியது தானே'
என்றாள் அக்கா

'சளி பிடிச்சுக்கிட்டு
செலவு வைக்கப்போற பாரு'
என்றார் அப்பா

தன் முந்தானையால்
என் தலையை
துவட்டிக்கொண்டே
திட்டினாள் அம்மா
என்னையல்ல;
**'மழையை!'**

( சத்தியமங்கலம் பன்னாரி அம்மன் பொறியியல் கல்லூரி வெளியிட்டு இருந்த கல்லூரி மலரில் இருந்து எடுத்தது).

✻ ✻ ✻

'சிறகு முளைத்ததும்
பிரிந்துவிடப் போகிற
குஞ்சுக்கு இரைதேடி
இப்படித் தவிக்கிறாயே
பறவையே...'
பரிதாபப்பட்டாள் கிழவி
முதியோர் இல்லத்திலிருந்து....

**- ஆர். சேஷாத்ரி**

## 3. அம்மாவின் அன்பு

பக்கத்து அறையில் அம்மா முனகும் ஓசை கேட்டது. ஈனஸ்வர முனகல்.
படித்தபடி விட்டத்தை வெறித்து, யோசனையோடு புரண்டான் மோகன்.

அம்மா நான்கு மாதங்களாக நோய்வாய்ப் பட்டிருக்கிறாள்.
டாக்டர் கூறிய நோயை உச்சரிப்பதே சிரமம். சென்ற மாதம், ஒருநாள் அம்மா திடீரென நெஞ்சு வலிப்பதாகச் சொன்னாள்.

பதறிப்போய் மருத்துவமனையில் சேர்த்ததில் ஈசிஜி, ஸ்கேன், அந்த டெஸ்ட், இந்த டெஸ்ட் என எட்டாயிரம் ரூபாய்க்கும் மேல் பில் ஆகிவிட்டது. அலுவலக நண்பனிடம் கடன் வாங்கித்தான் செலவு செய்தான் மோகன்.

நடுநிசி தாண்டியதும், அம்மாவின் முனகல் குரல் கேட்டது..... மோகன்........

மறுபடியும் நெஞ்சுவலியா? மறுபடியும் செலவா?
ஐயோ! பணத்துக்கு எங்கே போவேன்?
மோகன் திகைத்தான்.

மோகன்.....
திரும்பவும் அம்மாவின் குரல்
அயர்ந்து தூங்குபவன் போல் நடித்தான் மோகன்.
அம்மா மேலும்
சிலமுறை அவனை அழைத்துவிட்டு ஓய்ந்தாள்.

மறுநாள் காலை, அவன் கண் விழித்ததுமே,
மோ...கன்! இங்க வாப்பா!
என்றாள் அம்மா!

அச்சத்துடன் போனான். எ........என்னம்மா?

நேத்து ராத்திரி நீ ரொம்ப நேரம் புரண்டு படுத்திட்டிருந்தியேப்பா?
அதான் ரெண்டு, மூணு தடவை கூப்பிட்டேன்! ஏன் கண்ணா......

**உடம்பு சரியில்லையா?**

– ?

✻ ✻ ✻

# 4. சரணம் என்று இறுகப் பற்றிக்கொள்

பகவான் புத்தரைத் தரிசித்துவிட வேண்டும் என்கிற வெறியுடன் வீட்டை விட்டுப் புறப்பட்டான் அந்த இளைஞன். தனிமையில் தவிக்கப் போகும் தனது வயதான தாயைப் பற்றிக்கூட அவன் கவலைப்படவில்லை.

அவன் எங்கு போனாலும் புத்தர் அங்கிருந்து கொஞ்சம் முன்பாகத்தான் புறப்பட்டுப் போனார் என்று ஒரே பதில் கிடைத்தது. அவன் மனம் துவண்டு போனது. வழியில் தாம் சந்தித்த மற்றொரு மூத்த புத்த சந்யாஸியிடம் பகவான் புத்தரைத் தரிசிக்காமலே தன் வாழ்வு முடிந்து விடுமோ என்று சொல்லி கதறினான்.

முதிர்ந்த அந்த சந்யாஸி அன்புடன் அவனது கரங்களைப் பற்றி ஆறுதல் கூறினார். "வருத்தப்படாதே மகனே.... உன் வீடு திரும்பு... நீ புத்தரைத் தரிசிக்கும் பாக்யம் உள்ளவன் என்றால் எப்படியும் தரிசிப்பாய். புத்தர் கருணையானவர் " என்றார். அவனோ... "ஐயா... நான் முன்பின்னாகப் புத்தரைப் பார்த்ததே இல்லை. வழியில் எங்காவது திடீர் என்று புத்தரைக் காண நேர்ந்தால் நான் எப்படி அவரை அடையாளம் கண்டுகொள்வேன். தவற விட்டுவிடக் கூடாதே" என்று அழுதான்.

"மகனே! வழி முழுவதும் சந்திப்பவர்கள் கால்களை உற்றுநோக்கியபடி போ... யார் தமது வலது கால் செருப்பை இடது காலிலும், இடதுகால் செருப்பை வலதுகாலிலும் அணிந்திருக்கிறாரோ அவரே புத்தர்... அந்தத் திருவடிகளைச் சரணம் என்று இறுகப் பற்றிக்கொள் " என்று அதிசயமான அடையாளம் ஒன்றைச் சொல்லி அனுப்பினார்.

வழி முழுவதும் அவ்வாறு பார்த்தபடியே தன் ஊர் திரும்பினான். அவனது துரதிருஷ்டம் ஒருவர் கூட அப்படிக் காட்சி அளிக்கவே இல்லை. தனக்கு நல்லருள் கிடைக்க வில்லையே என்று வருந்தியபடி தன் வீடு வந்து கதவைத் தட்டினான். அவனது அழைப்பொலியைக் கேட்டதும், அடிவயிற்றில் பிள்ளை உதைத்த போது உணர்ந்த ஆனந்த உணர்வுகளுடன் அவன் வயது முதிர்ந்த தாய் ஓடோடி வந்து வாசற் கதவுகளைத் திறந்து கண்ணீருடன் மகனை வரவேற்றாள். இனி புத்தரைக் காணவே முடியாது என்று தன் சகல நம்பிக்கையையும் இழந்திருந்த மகன், கதவைத் திறந்த தன் தாயின் கால்களைப் பழக்க தோஷத்தால் கவனித்தான். என்ன ஆச்சர்யம்? அவள் வலது காலில் இடது கால் செருப்பும், இடது காலில் வலது கால் செருப்பும் இருந்தன. கதவைத் தட்டிய மகன் திரும்பிப் போய்விடக் கூடாதே என்ற பதற்றத்தினால் பதறியபடி எழுந்தோடி வந்தவள் காலில் செருப்பு மாறி அணிந்து கொண்டதை அறியப் போகிறாளா என்ன ?

மகனுக்கு மூத்த சந்யாஸியின் சொல் நினைவில் மின்னியது. மெலிந்து மூத்த பாசத்தால் நடுங்கும் தாயின் மெல்லிய பாதங்களைக் கட்டிக்கொண்டு, **"பகவானே"** என்று அழத் தொடங்கினான். **புத்தரை விடவும் கருணையானவர் தாயாக மட்டும் தானே இருக்க முடியும் ?**

— ?

* * *

## 5. உனக்கும் எனக்கும் இடையில் ஏன் அந்த இடைவெளி

மகனே!
நீ ஐந்து மாதக் குழந்தையாய்
இருக்கையில் எனக்கும் உனக்கும்
இடைவெளி என்பதே இல்லை
சதா என் கைகளில்தான்!

ஐந்து வயதினிலோ
என் முந்தானை பிடித்து..
சுற்றிச் சுற்றி வந்தாய்,

பத்து வயதினிலோ
என் விரல் பிடித்து நடந்தாய்!

பதினைந்து வயதினிலோ
பத்தடி தூரத்தில் சினேகமாய்
என் பக்கம் நடக்குமளவுக்கு இருந்த
இடைவெளி
உன் இருபது வயதினிலே
விண்ணுக்கும் மண்ணுக்குமாய்
ஆகிப்போன மர்மம்தான் என்ன?
இன்னும் உன் முப்பது, நாற்பதுகளில்
உனக்கு எனக்குமிடையில் அந்த
இடைவெளியைத் தவிர வேறு ஏதும் இராதோ?
என்ற அச்சத்தில் அம்மா!

**- லட்சுமி. டி.**
செம்மண்டலம், மங்கையர் மலர்
அக்டோபர் 2009

* * *

*மீண்டும் கிடைக்காத சிம்மாசனம்*
*"தாயின் மடி"*

## 6. உயிரோடு எரித்தது... உன் பார்வைதான்

விட்டுவிட்டு வந்த பிறகும்
விடாமல் துரத்துகிறது
உன் நினைவுகள்

வெட்கமாய் இருக்கிறது
ஒரே வீட்டில்
அந்நியர்களாய் வாழ்ந்தது

உன்னிடம்
சிரிக்கக்கூட
தயங்கிய கொடுமை
எந்த மகனுக்கும்
வரவேண்டாம்

உறக்கத்திற்கான
இரவுகள்
அழுவதற்கென்றானது
உனது அகராதியில்
மட்டும்தான்

ஊமைக்காயங்கள்
உண்டென்றாலும்
உயிரோடு எரித்தது
முதியோர் இல்ல
விடைபெறலில்
முதுகில் உணர்ந்த
உன் **பார்வைதான்**

**- மு. மாறன்**
மங்கையர் மலர் 21.8.2005

* * *

# 7. அம்மா சொன்ன 6 பொய்கள்

நான் குழந்தையாக இருந்தபொழுது இந்தக் கதை ஆரம்பமாகிறது. நான் ஒரு ஏழை குடும்பத்தில் பிறந்தவன். பல நேரங்களில் உண்ணுவதற்கு போதுமான உணவு எங்களுக்கு கிடைத்ததில்லை. உணவு கிடைக்கும் நேரங்களில் தனக்குரிய பங்கை அம்மா எனக்குக் கொடுத்து விடுவாள். அவளது உணவை எனது தட்டுக்கு மாற்றும்போது அவள் சொல்வாள் **“ மகனே இதைச் சாப்பிடு, எனக்கு பசியில்லை”.**

*இது அம்மா சொன்ன முதல் பொய்.*

எனது படிப்புச் செலவைச் சமாளிப்பதற்காக பக்கத்திலுள்ள தீப்பெட்டிக் கம்பெனி ஒன்றுக்கு சென்று, உபயோகிக்கப்பட்ட பழைய தீப்பெட்டிகளை கொண்டுவந்து அவற்றில் புதிய தீக்குச்சிகளை அம்மா நிரப்புவாள். அதன் மூலம் கிடைக்கும் சிறிய தொகை எங்கள் தேவைகளுக்குப் பயன்பட்டது. பனி பொழியும் ஒரு இரவில் விழித்த நான் மெழுகுவர்த்தி வெளிச்சத்தில் அம்மா தீப்பெட்டிகளில் குச்சிகளை நிரப்பிக் கொண்டிருப்பதை கண்டேன். நான் சொன்னேன். “அம்மா! இரவு நெடுநேரமாகி விட்டது, போய் படுங்கள், மீதி வேலையை காலையில் பார்த்துக் கொள்ளலாம்”. அம்மா புன்முறுவலுடன் சொன்னாள். **“நீ போய் தூங்கு மகனே, எனக்கு களைப்பாகவும் இல்லை. தூக்கமும் வரவில்லை”**

*இது அம்மாவின் 2வது பொய்*

பள்ளி இறுதி தேர்வு எழுத நான் சென்ற போது அம்மா என்னுடன் வந்தாள். கொளுத்தும் வெயிலில் மணிக்கணக்கில் அம்மா காத்திருந்தாள். தேர்வு முடிந்து மணியடித்தவுடன் அம்மாவிடம் ஆவலுடன் ஓடினேன். என்னை வாரி அணைத்துக் கொண்டவள், பிளாஸ்கில் அவள் வைத்திருந்த தேநீரை எனக்கு ஊற்றிக் கொடுத்தாள். அம்மாவின் அன்போடு ஒப்பிடும்பொழுது அந்த தேநீரின் ருசி அவ்வளவு பெரிதல்ல. வேர்வையில் குளித்திருந்த அம்மாவிடம் தேநீரை கொடுத்து குடிக்கச் சொன்னபோது அவள் சொன்னாள். **“ நீ குடி மகனே, எனக்கு களைப்பு இல்லை. தேநீர் குடிக்க விருப்பமில்லை ”**

*இது அம்மா சொன்ன 3வது பொய்.*

எனக்கு படிப்பு முடிந்து ஒரு வேலை கிடைத்தபின் என் அம்மா முதிய வயதில் ஓய்வெடுக்க வேண்டிய நேரம் வந்தது. ஆனால் ஓய்வெடுக்க மறுத்து பக்கத்து சந்தைக்கு சென்று காய்கறிகளை விற்று பொருளீட்டி வந்தாள். நான் அவளுக்கு பணம் அனுப்புகிறேன் என்று சொன்னபோது அவள் சொன்னாள். **“என்னிடம் நிறைய பணமிருக்கிறது மகனே”**

*இது அம்மா சொன்ன 4வது பொய்*

எனது பகுதி நேர முதுநிலை படிப்பைத் தொடர்ந்தேன். நான் சார்ந்திருந்த அமெரிக்க கம்பெனியின் பொருள் உதவியால் நன்கு படித்து தேர்வில் வெற்றி பெற்றேன். மிக அதிகமான சம்பளம் பெற்ற நான் அம்மாவை கூட்டி வந்து அமெரிக்க சொகுசு வாழ்க்கையை அனுபவிக்க செய்ய முடிவு செய்தேன். எனக்கு தொந்தரவாக இருக்க விரும்பாத அம்மா **"உயர்ந்த அந்தஸ்தான வாழ்க்கை எனக்கு பழக்கமில்லாத ஒன்று மகனே"** என்று சங்கோஜத்துடன் கூறினாள்.

*எளிமையின் சின்னமான அம்மாவின் 5வது பொய்.*

தனது தள்ளாத வயதில் புற்று நோயால் பாதிக்கப்பட்ட அம்மா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டாள். கடல் கடந்து வாழ்ந்து கொண்டிருந்த நான் வீட்டிற்கு வந்து அறுவை சிகிச்சைக்குப் பின் படுத்த படுக்கையாக இருந்த அம்மாவை கண்டேன். எலும்பும் தோலுமாய் கிடந்த அம்மா என்னைக் கண்டதும் புன்முறுவல் பூக்க முயன்று தோற்றுப் போனாள். அதைக் கண்ட நான் மனம் நொறுங்கிப் போய் கதறி அழுதேன். அப்போது அம்மா சொன்னாள். **"அழாதே மகனே, எனக்கு வலியே இல்லை, நலமாக இருக்கிறேன்."**

*இது கல்மனதையும் கரையச் செய்யும் அம்மாவின் 6வது பொய்.*

இதைச் சொல்லி முடிந்ததும் எனக்காவே காத்திருந்ததுபோல் என்னைக் கலங்கடித்து விட்டு தன் கண்களை மூடினாள். இறந்து போனாள்.

- Provided : **போஸ்**
திருச்சிராப்பள்ளி

* * *

தாயை வணங்குவதால் கிடைக்கும் புண்ணியம் யாது?

ஆறுதரம் பூமியை வலம் வருதலும், ஆயிரம் தடவை, காசியில் குளித்தலும், நூறு தடவை சேது ஸ்நானம் செய்தலும் ஆகிய இவற்றால் கிடைக்கும் புண்ணியம் தாயை பக்தி பூர்வமாக ஒரு தரம் வணங்கினாலே கிடைக்கும்.

அம்மா நான் உன்னில் வளர
அன்பாய் கரு தந்தாய்
உணவு தந்து உரு தந்தாய்
உலகில் வளர்ந்திட உனையே தந்தாய்

விழுந்த போது கை தந்தாய்
எழுந்த போது நீ நிமிர்ந்தாய்
உன்னில் நான் வளர்ந்தேன்
என்னில் நீ உயர்ந்(து)**தாய்**

**– அனுராதா பாலாஜி**
மங்கையர் மலர் – செப்டம்பர் 2012

# 8. அம்மாவின் கைகள்

சில வருடங்களுக்கு முன்பு, வெலிங்டனில் உள்ள ராணுவ அதிகாரி ஒருவரின் வீட்டுக்குச் சென்று இருந்தேன். அவரது வரவேற்பறையில் இரண்டு கைகளின் புகைப்படம். ஒரு புனிதரின் கைகளாக இருக்கக்கூடும் என்று நினைத்து, அதைப்பற்றிக் கேட்கவே இல்லை. அவரோடு காரில் பயணம் செய்யும் போது, அதே போன்ற கைகளின் புகைப்படத்தை மறுபடியும் பார்த்தேன். ஆவல் மேலிட, அது யாருடைய கைகள் என்று கேட்டேன். “புகைப்படத்தை கையில் எடுத்து பாருங்கள்”எனச் சொன்னார்.

புகைப்படத்தை அருகில் பார்த்தபோது, அது வயதான மூதாட்டியின் கைகள் என்பதைக் கண்டுகொண்டேன். முதுமையின் ரேகை படிந்த நீண்ட விரல்கள். நகங்கள் சுத்தமாக வெட்டப்பட்டு இருந்தன. நரம்புகள் புடைத்துத் தெரிகின்றன. யாராக இருக்கும் என்று மனது ஏதேதோ துறவிகளை, ஞானிகளை நினைவுபடுத்திக் கொண்டே இருந்தது.

அவர் அந்த கைகளை ஒரு பெருமூச்சுடன் பார்த்து, ஆதங்கமான குரலில், அது என் **அம்மாவின் கைகள்** என்று சொன்னார். ஆச்சர்யமாக இருந்தது. “எதற்காக அம்மாவின் கைகளை மட்டும் புகைப்படமாக வைத்திருக்கிறீர்கள் ” என்று கேட்டேன்.

இந்த கைகள்தான் என்னை வளர்த்தன. என் நினைவில் எப்போதுமே அம்மாவின் கைகள்தான் இருக்கின்றன. அம்மாவின் முகத்தைவிட, அந்தக் கைகளைக் காணும்போது தான் நான் அதிகம் நெகிழ்ந்து போகின்றேன். அம்மா இறப்பதற்கு சில மணி நேரம் முன்பாக இந்தப் புகைப்படத்தை எடுத்தேன். இந்தக் கைகள் இப்போது இல்லை. ஆனால், இந்த கைகளால் வளர்க்கப்பட்டவன் உங்கள் அருகில் உட்கார்ந்திருக்கிறேன்.

என் அம்மா எனக்கு விவரம் தெரிந்த நாளில் இருந்து ஓய்வு எடுத்ததே இல்லை. அப்பா தனது 32 வயதில் இறந்து போனார். அம்மாதான் எங்களை வளர்த்தார். நாங்கள் மூன்று பிள்ளைகள். அம்மா படிக்காதவர். ஒரு வீட்டில் பணிப் பெண்ணாக வேலைக்குச் சேர்ந்தார். பகல் முழுவதும் அவர்கள் வீட்டினைச் சுத்தம் செய்வது, பாத்திரம் கழுவுவது, துணி துவைப்பது, நாய்களைப் பராமரிப்பது போன்ற வேலைகள். மாலையில் இன்னும் இரண்டு வீடுகள். அங்கும் அம்மாவின் கைகள் விளக்கிச் சுத்தம் செய்து இருக்கும் என்று நினைத்துப் பார்க்கவே மனது கஷ்டமாக இருக்கிறது.

இரவு வீடு திரும்பிய பிறகு, சமைத்து எங்களைச் சாப்பிட வைத்து உறங்கச் செய்துவிட்டு அதன் பின்னும் அம்மா இருட்டிலேயே கிணற்றில் தண்ணீர் இறைத்துக் கொண்டு இருப்பார்கள். சமையல் அறையில்தான் உறக்கம். அப்போதும் கைகள் அசைந்தபடியே தான் இருக்கும். எங்கள் மூவரையும் பள்ளிக்கூடம் அழைத்துப் போகையில் யார் அம்மாவின் கைகளைப் பிடித்துக் கொண்டு நடப்பது என்பதில் ஒரு போட்டியே இருக்கும்.

அந்தக் கைகளைப் பிடித்துக்கொள்வதில் அப்படி ஒரு நெருக்கம், நம்பிக்கை கிடைக்கும். அதுபோலவே நாங்கள் உடல்நலம் இல்லாத

நாட்களில் அம்மாவின் கைகள் மாறி மாறி எங்கள் நெற்றியைத் தடவியபடியே இருக்கும். அம்மா நிதானமாகச் சாப்பிட்டு நான் பார்த்ததே இல்லை. தனது சகல சிரமங்களையும் அம்மா தன் கைகள் வழியே முறியடித்து எங்களை வளர்த்தபடியே இருந்தார். வேலை செய்யும் அந்த வீட்டில் அம்மா ஒருநாள் ஊறுகாய் ஜாடியை உடைத்துவிட்டார் என்று அடி வாங்குவதைப் பார்த்தேன்.

அம்மாவின் கன்னத்தில் வீட்டுக்காரரின் மனைவி மாறி மாறி அறைந்துகொண்டு இருந்தார். அம்மா அழவே இல்லை. ஆனால், நாங்கள் பார்த்துக்கொண்டு இருப்பதைத் தாங்க முடியாமல், விடுவிடுவென எங்களை இழுத்துக்கொண்டு அந்த வீட்டில் இருந்து வெளியேறினார், வழியில் பேசவே இல்லை. அம்மாவை எந்தக் கைகளும் ஆறுதல் படுத்தவோ, அணைத்துக்கொள்ளவோ இல்லை. அவருக்கு கடவுள் நம்பிக்கைக்கூட அதிகம் என்று தோன்றவில்லை. வீட்டில் சாமி கும்பிடவோ, கோவிலுக்குப் போய் வழிபடவோ, அதிக ஈடுபாடு காட்டியதே இல்லை. வேலை..வேலை... அது மட்டுமே தன் பிள்ளைகளை முன்னேற்றும் என்று அலுப்பின்றி இயங்கிக்கொண்டு இருந்தார்.

சிறுவயதில் அந்தக் கைகளின் முக்கியத் துவத்தை நான் புரிந்துகொள்ளவே இல்லை. ஆசையாகச் சமைத்து தந்த உணவைப் பிடிக்கவில்லை என்று தூக்கி வீசி இருக்கிறேன். கஷ்டப்பட்டுப் பள்ளியில் இடம் வாங்கித் தந்தபோது படிக்கப் பிடிக்கவில்லை என்று போகாமல் இருந்திருக்கிறேன். மற்ற சிறுவர்களைப் போல சைக்கிள் வாங்கித் தரமாட்டேன் என்கிறாள் என்று வசைபாடி இருக்கிறேன். அம்மா எதற்கும் கோபித்துக் கொண்டதே இல்லை. அம்மா கஷ்டப் படுகிறாள் என்று தெரிந்தபோதும் யார் அவளை இப்படிக் கஷ்டப்படச் சொன்னது என்று தான் அந்த நாளில் தோன்றியது.

கல்லூரி வயதில் நண்பர்களோடு சேர்ந்து சுற்றவும், புதுப்புது ஆடைகள் வாங்கவும் எத்தனையோ பொய்கள் சொல்லி இருக்கிறேன். என் தம்பியும், தங்கையும்கூட இப்படித்தான் செய்திருக்கிறார்கள். ஆனால், அம்மா அதற்காக எவரையும் கோபித்துக் கொள்ளவே இல்லை. என் கல்லூரி இறுதி ஆண்டில் மஞ்சள் காமாலை வந்து, நோயாளியாக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு இருந்தார் அம்மா. அப்போதுதான் அவர் எங்களை எவ்வளவு அக்கறையோடு, ஆதரவோடு காப்பாற்றி வந்திருக்கிறார் என்று புரிந்தது.

அதன் பிறகு, என்னைத் திருத்திக்கொண்டு தீவிரமாக படிக்கத் துவங்கி ராணுவத்தில் வேலைக்குச் சேர்ந்து கடுமையாக உழைத்துப் பதவி உயர்வு பெற்றேன். அம்மாவை என்னுடனேயே வைத்துக் கொண்டேன். நான் சம்பாதிக்கத் துவங்கியபின், அம்மா ஒருபோதும் எதையும் கேட்டதே இல்லை. நானாக அவருக்கு எதையாவது வாங்கித் தரவேண்டும் என்று நினைத்து, தங்க வளையல் வாங்கித் தருகிறேன் என்று அழைத்துப் போனேன்.

முதிய வயதில் அம்மா மிகுந்த கூச்சத்துடன், எனக்கு ஒரு வாட்ச் வேண்டும். சின்ன வயதில் வாட்ச் கட்டிக்கொண்டு வேலைக்குப் போக வேண்டும் என்று ஆசைப்பட்டேன். ஆனால் அது நடக்கவே இல்லை. அதன் பிறகு, எனக்குள் இருந்த கடிகாரம் ஓடு....ஓடு..... என்று என்னை விரட்ட துவங்கியது. அலாரம்

இல்லாமலேயே எழுந்து கொள்ளப் பழகி விட்டேன். இப்போது வயதாகிவிட்டது. சில நாட்கள் என்னை அறியாமல் ஆறு மணி வரை உறங்கி விடுகிறேன். இரவு உணவை ஏழு மணிக்கே சாப்பிட்டு விடுகிறேன். ஒரு வாட்ச் வாங்கி தருவாயா? என்று கேட்டார்.

அம்மா விரும்பியபடி ஒரு வாட்ச் வாங்கித் தந்தேன். ஒரு பள்ளிச்சிறுமியைப் போல் ஆசை ஆசையாக அம்மா எல்லோரிடமும் காட்டினாள். அதை அணிந்துகொள்வதில் அம்மா காட்டிய ஆர்வம் என்னை நெகிழ்வூட்டியது. அதன் பிறகு அம்மா, நான் திருமணம் செய்து டெல்லி, பெங்களூரு என்று வேலையாக அலைந்தபோது கூடவே இருந்தார். டெல்லியில் இருக்கும்போது நெஞ்சுவலி ஏற்பட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு இருந்தார். நான் கூடவே இருந்தேன். அப்போது ஒருநாள் கேட்டேன் : நாங்கள் ஏமாற்றியபோது எல்லாம் ஏன் அம்மா எங்களை ஒருவார்த்தைகூடத் திட்டவே இல்லை?

அம்மா, "அதற்காக நான் எவ்வளவு அழுதிருக்கிறேன் என்று உங்களுக்குத் தெரியாது. ஆனால், அன்று நான் கோபப்பட்டு இருந்தால் என்பிள்ளைகள் என்னைவிட்டுப் போயிருப்பார்கள்" என்று சொல்லி, என் கையை தன்னுடன் சேர்த்து வைத்துக் கொண்டார்.

அப்போதுதான் அந்த முதிய கைகளைப் பார்த்தேன். அவை எவ்வளவு உழைத் திருக்கின்றன. எவ்வளவு தூய்மைப்படுத்தி இருக்கின்றன. எவ்வளவு அன்பைப் பகிர்ந்து தந்திருக்கின்றன. அதை ஒரு புகைப்படம் எடுத்துக் கொள்ள வேண்டும் என்று தோன்றியது. எனது கேமராவை எடுத்துவந்து, புகைப்படம் எடுத்துக் கொண்டேன்.

இன்று அம்மா என்னோடு இல்லை. ஆனால், இந்தக் கைகள் என்னை வழி நடத்துகின்றன. ஒவ்வொரு நாளும் நான் எப்படி வளர்க்கப் பட்டேன் என்பதை இந்தக் கைகள் நினைவுப் படுத்துகின்றன. இதை வணங்குவதைத் தவிர, வேறு நான் என்ன செய்துவிட முடியும்? என்றார்.

ராணுவ அதிகாரியினுடைய முகம் தெரியாத அந்தத் தாயின் கைகளை நானும் தொட்டு வணங்கினேன். அந்த கைகள் யாரோ ஒருவரின் தாயின் கைகள் மட்டும் இல்லை. உலகெங்கும் உழைத்து ஓய்ந்து போன தாயின் கைகள் யாவும் ஒன்று போலத்தான் இருக்கின்றன. அவை எதையும் யாசிக்க வில்லை. அணைத்துக் கொள்ளவும், ஆதரவு தரவும், அன்பு காட்டவும் நீளுகின்றன. அதை நாம் புறக்கணித்துப் போயிருக்கிறோம். அலட்சியமாகத் தவிர்த்து இருக்கிறோம்.

இலக்கு இல்லாத எனது பயணத்தில் யார் யார் வீடுகளிலோ தங்கியிருக்கிறேன். சாப்பிட்டு இருக்கிறேன். எனது உடைகளைத் துவைத்து வாங்கி அணிந்து இருக்கிறேன். அந்த கைகளுக்கு நான் என்ன நன்றி செய்து இருக்கிறேன். ஒரு நிமிடம் என் மனம் அத்தனை கைகளையும் வணங்கி, தீராத நன்றி சொன்னது.

கைவிரல்களுக்கு இடையில் இடைவெளி இருப்பது இன்னொரு கைகள் நம்மோடு சேர்ந்து கொள்ளத்தான் என்று எங்கோ படித்தேன். அதை நிறைய நேரங்களில் நாம் உணர்வதே இல்லை. நம் மீது அன்பு காட்டும் கைகளுக்கு நாம் என்ன செய்யப் போகிறோம்?

Provided by : **V.S. வேலாயுதன்**
திருச்சிராப்பள்ளி

* * *

# ௯. பிறர் வேதனை அறியும் அம்மா!

கல்கத்தாவில் ஒரு குடும்பத்தில் அம்மாவும், மூன்று குழந்தைகளும் இருந்தார்கள். குழந்தை களின் அப்பா எப்போதோ இறந்துவிட்டார். அம்மா ஒரு நோயாளி. எனவே அவளால் எந்த வேலைக்கும் செல்ல முடியவில்லை. நாட்கணக்காக எல்லோரும் முழுப்பட்டினி. அழுவதற்குக்கூட சக்தியில்லாமல் சோர்ந்து கிடக்கின்றன, சின்னஞ்சிறு குழந்தைகள். என்ன செய்வதென்று தெரியாமல் அம்மா அளவற்ற துயரத்தில் தவித்தாள். பட்டினியால் குழந்தைகள் இறந்துவிடுவார்களோ என்று கூட அவளுக்குப் பயமாக இருந்தது.

இந்தக் குடும்பத்தின் கஷ்டநிலையை யாரோ அன்னை தெரேசாவிடம் சொன்னார்கள். இதைக் கேட்டு மனம் வருந்திய அன்னை தெரேசா, உடனே கொஞ்சம் அரிசியையும், அத்தியாவசியப் பொருட்களையும் எடுத்துக் கொண்டு அந்த வீட்டிற்குச் சென்றார். அந்த நோயாளித் தாயிடம் அரிசியையும், பொருட்களையும் கொடுத்தார்.

உடனே அந்தப் பெண்மணி, அன்னை தெரேசா கொடுத்த பொருட்களையெல்லாம் இரண்டாகப் பங்கு பிரித்தாள். மூத்தக் குழந்தையிடம் ஒரு பங்கு அரிசியை எடுத்து சோறு சமைக்கச் சொல்லிவிட்டு, இன்னொரு பங்கு பொருட்களை எடுத்துக்கொண்டு வெளியே சென்றாள்.

அவள் திரும்பி வருவதற்குச் சிறிது நேரமானது. அதுவரை காத்திருந்த அன்னை தெரேசா, அவள் வந்ததும் கேட்டார். " எங்கே சென்றிருந்தீர்கள்? நாங்கள் உங்களுக்காக காத்திருந்தோம்."

அந்த அம்மா சொன்னாள். "பக்கத்து வீட்டிலும் வறுமைதான். அங்கும் பசியுடன் இருக்கிறார்கள். பாதி அரிசியையும், பொருட்களையும் அங்கே கொடுப்பதற் காகத்தான் சென்றிருந்தேன்." இதைச் சொல்லும்போது அவளது குழி விழுந்த கண்கள் மின்னின. அது கடவுளின் ஒளிபோன்றே தெரேசாவிற்குத் தோன்றியது. அந்த அம்மாவின் கண்கள் மூலம் கடவுளே தன்னைப் பார்ப்பதாக அவர் உணர்ந்தார்.

தன் குடும்பமே கொடும் பட்டினியில் துடிக்கும்போதும், பக்கத்து வீட்டு வறுமையை மறக்காத அந்த அம்மாவின் உள்ளம் இருக்கிறதே, அதுதான் இந்த உலகத்திலேயே மிக உயர்ந்தது. பிறர் வேதனை கண்டு துன்புறும் அந்த அன்பிற்கு இணையாக எதுவுமில்லை!

தினமணி - சிறுவர் மணி - 7.8.2010

* * *

எனக்கு காய்ச்சல்
நெருப்பாய்க் கொதிக்கும்
அம்மாவின் மனசு

**- முகவை முனிஸ்**
இராமேஸ்வரம்

குஞ்சுகளால் மிதிபட்டு
முடமான கோழிகள்
முதியோர் இல்லம்

**- கிரிஜா மணாளன்**
திருச்சி-21.

# 10. மகனே! வாயேன், ஒரே ஒரு முறை

என் வயிற்றின்
பூர்வீகக் குடிமகனே!
நினைவிருக்கிறதா என்னை?
அகதியாய் அலையும்
அம்மா எழுதுகிறேன்.

அடிவயிற்றுத் தழும்புகளில்
விரலை ஓட்டுகிறேன்
பனிக்குடம் உடைத்த
பச்சிளம் தளிராய்
உன்னையே ஸ்பரிசித்த
கர்ப்ப சுகம்

வெற்றுப் பானையின்
கடைசி அரிசியையும்
கண்ணீரில் வேகவைத்து ஊட்டினேன்.
வாய்க்கரிசி போட வருவாயா?

கைப்போர்வைக் கதகதப்பில்
கண் வளர்ந்தவனே!
பால் கணக்கு
இன்னமும் பாக்கியிருக்கிறது.
பால் கடனை கழிக்கப்
பாலூற்ற வருவாயா?

புறாக்கூண்டு
இருக்க இடமில்லை என்றாய்!
இடமில்லாதது
மனசில்தானே!

இது
எழுபது எண்பதுகளின்
உயிர்க் கிடங்கு.
எல்லார் பார்வையும்
வாசலின் மீதே.
உறவுக்காகவா?
உறவு அறுப்பவனுக்காகவா?
யார் வருகை முதலில்?

மணியார்டரில் வரும்
அவசரக் கையெழுத்தைவிட
உன் –
கைவிரல் ஸ்பரிசம் வேண்டும்.
கடைசி முழி வேண்டும்.
உன் முகதரிசனம் வேண்டும்.

ஆறடிக்குப் போகும் முன்
ஒரடி வயிறு துடிக்கிறது.
**வாயேன்**
**ஒரே ஒரு முறை.**

உயிர் முடிச்சை
உனக்காகப் பிடித்திருக்கும்
உன் அம்மா....

✻ ✻ ✻

– ?

## 11. அம்மா என்றழைக்காத உயிரில்லையே

**ராகம் : கல்யாணி**

அம்மா என்றழைக்காத உயிரில்லையே
அம்மாவை வணங்காது உயர்வில்லையே
நேரில் நின்று பேசும் தெய்வம்
பெற்ற தாயன்றி வேறொன்று ஏது? (அம்மா....)

அபிராமி சிவகாமி கருமாரி மகமாயி
திருக்கோயில் தெய்வங்கள் நீதானம்மா!
அன்னைக்கு அன்றாடம் அபிஷேகம் அலங்காரம்
புரிகின்ற சிறுத்தொண்டன் நான்தானம்மா
பொருளோடு புகழ் வேண்டும் மகனல்ல தாயே உன்
அருள் வேண்டும் எனக்கென்றும் அது போதுமே
அடுத்திங்கு பிறப்பொன்று அமைந்தாலும் நான் உந்தன்
மகனாகப் பிறக்கின்ற வரம் வேண்டுமே
அதை நீயே தருவாயே! (அம்மா....)

பசுந்தங்கம் புதுவெள்ளி மாணிக்கம் மணிவைரம்
அவை யாவும் ஒரு தாய்க்கு ஈடாகுமா?
விலைமீது விலை வைத்துக் கேட்டாலும் கொடுத்தாலும்
கடைதன்னில் தாயன்பு கிடைக்காதம்மா!
ஈரைந்து மாதங்கள் கருவோடு எனைத்தாங்கி
நீ பட்ட பெரும்பாடு அறிவேனம்மா!
ஈரேழு ஜென்மங்கள் எடுத்தாலும் உழைத்தாலும்
உனக்கிங்கு நான் பட்ட கடன் தீருமா?
உன்னாலே பிறந்தேனே! (அம்மா....)

– கவிஞர் **வாலி**

* * *

## 12. தாயின் பூரிப்பு

சம்பளக் கவர்
நிறைய
பணம்...
மனைவிக்கு பூரிப்பு!

தங்கமாய்
வழிந்தது
நகைப்பெட்டி...
மகளுக்கு பூரிப்பு!

எதுவுமே
கொடுக்கவில்லை....
ஆனாலும்,
தாய்க்கு
பூரிப்பு....
முதியோர் இல்லத்தில்
அவளைப் பார்க்கும்
நாள் இன்று!

– தரங்கை செ. **அப்துல்லா**
சென்னை

* * *

### தாயினும் சிறந்த தெய்வம் இல்லையாமே தைப் போல?

உணவும், நீரும் தருகின்ற தானத்துக்குச் சமமான தானமும் இல்லை, ஏகாதசி விரதத்தைக் காட்டிலும் சிறந்த விரதமும் இல்லை, காயத்திரியை விடச் சிறந்த மந்திரமும் இல்லை, தாயினும் சிறந்த தெய்வமும் இல்லை.

## 13. அன்னையைப் போல் ஒரு தெய்வமுண்டோ ?

பச்சிளம் குழந்தையாய் நீ அழுதபோதெல்லாம்
பால் நினைந்து உனை ஊட்டுவித்தாள்.

நாளொரு மேனி பொழுதொரு வண்ணமாய் நீ
வளர்ந்தபோது பெருமகிழ்ச்சி அடைந்திட்டாள்.

பிஞ்சு கால்களால் முதலில் நீ நடந்த போது
நெஞ்சம் பூரித்துத் துள்ளிக் குதித்திட்டாள்.

உன்முதல் பிறந்த நாளன்று அவள் ஊட்டிய இனிப்பு
ஆஹா என்ன சுவை! என்ன சுவை!

நீ முதன் முதலாகப் பள்ளிக்கூடம் சென்றபோது
அவள் உனக்குக் கொடுத்த இனிப்பு நினைவிருக்குமே!

தனக்கென புடவை வாங்கி கொள்ளாமல்
உனக்காகப் புத்தாடை வாங்கிக் கொடுத்தாள்.

நீ கம்பீரமாக ஓட்டிய சைக்கிள்
அவள் சேமிப்பில் வாங்கியதுதானே!

முதல்நாள் அலுவலகம் நீ சென்ற போது
நாவிற்கினிய சிற்றுண்டி செய்து கொடுத்தாள்.

வழிமேல் விழிவைத்துக் காத்திருந்தாள் வாசலில் –
நீ நல்லபடியாகத் திரும்பி வரவேண்டும்
என்பதற்காகத்தானே?

உனக்கு காய்ச்சல் வந்தபோதெல்லாம், கண்ணயராது
உன்னை கவனித்தாள். நீ நலம் பெற பிரார்த்தித்தாள்.

எத்தனை தியாகங்கள்? எத்தனை வேதனைகள்?
அத்தனையும் தாங்கி
இன்னமும் காத்திருக்கிறாள் – **உன் அன்புக்காக.**

எங்கிருந்தாலும் அன்னையிடம் அன்பு காட்டு.
அரவணைத்துப் பாசம் காட்டு.

அன்னையைப் போல் ஒரு தெய்வமுண்டோ!
அவளிடம் அன்பு காட்டாத மனிதருண்டோ?

- Provided by : **V.S. ராஜா**
திருச்சிராப்பள்ளி

* * *

## 14. உயிர் பிரியும் தருவாயில் என் மடி சாய்ந்து

விடியற்காலையே தவறிட்டாங்க
பத்து மணிக்குத்தான் தகவல் வருது,
என்னப்பா நீ....
கோபித்துக் கொண்டார் ஒருவர்.

வெயில் ஏறிப்போச்சு
பந்தல் போடலையே இன்னும்,
என்னப்பா நீ...
கோபித்துக் கொண்டார் இன்னொருவர்.

கோடி போடும் பங்காளிகளுக்குக் கொடுக்க
தண்ணீர் சொம்புகள் வாங்க வேண்டாமா,
என்னப்பா நீ....
கோபித்துக் கொண்டார் மற்றொருவர்.

பட்டுப் போர்த்தும் தாய்மாமன் வகையறாவுக்கு
பேண்ட், சட்டை எடுக்க வேண்டாமா,
என்னப்பா நீ....
கோபித்துக் கொண்டார் வேறொருவர்.

தாய் இறந்த சோகமென்றாலும்
சீரை மதிக்க வேண்டாமா என்று
அனைவரும் ஒருமித்துக் கேட்க
யோசித்துப் பார்த்தேன்....

என் அருகிலிருந்து,
பேரன் பேத்தியோடு இயல்பாய் வாழ்ந்து,
முதிர்ந்து கனிந்து, உடல் வற்றி,
**உயிர் பிரியும் தருவாயில்**
**என் மடி சாய்ந்து,**
இயற்கையாய் மரணித்தவளின்
ஈமச் சடங்குகளில்
ஆயிரம் குறைகள் இருந்தாலும்,
எனை ஏதும் பாதிக்காதென்று
உன்னில் உணர்ந்து தெளிந்தேன்!

- **G. சுவாமிநாதன்,** மொடக்குறிச்சி
தினமலர் வாரமலர் - 1.12.2013

* * *

## 15. தாய் என்றும் வருந்துவதில்லை

தன் குழந்தையின் கருவை
தன் வயிற்றில்
பத்து மாதங்கள் சுமக்கும் போதும்
*தாய் வருந்துவதில்லை !*

தனது பிரசவத்தின் போது
தனக்கு ஏற்படும் வலியின்போதும்
*தாய் வருந்துவதில்லை !*

தன் குழந்தை
தன்மேல் அசுத்தம் செய்தபோதும்
*தாய் வருந்துவதில்லை !*

தன்பிள்ளையை பள்ளிக்கு அனுப்பி
அவன் வீட்டுக்கு வந்து சேரும் வரை
பாசத்துடன் காத்திருக்கும் போதும்
*தாய் வருந்துவதில்லை !*

தன் பிள்ளை, பள்ளிப் பாடங்களை
படித்து முடித்து, படுக்கைக்குச் செல்லும் வரை
கண்விழித்திருக்கும் போதும்
*தாய் வருந்துவதில்லை !*

தன்பிள்ளை உடல்நலமின்றி வாடும்போது
அவனுக்காக பணிவிடை செய்யும் வேலையிலும்
*தாய் வருந்துவதில்லை !*

தன் பிள்ளைக்கு நல்லதொரு வாழ்க்கை
அமைந்திட
இறைவனிடம் வேண்டி தன்னை வருத்திக்
கொண்ட போதும்
*தாய் வருந்துவதில்லை !*

தாய் தன் உடல்நிலை தளரும் வேளையிலே
தன்பிள்ளைகள், தன்னை முதியோர் இல்லத்தில்
சேர்க்க நினைக்கும் போதுதான் - கண்
கலங்குகிறாள்
ஆனாலும், தன்பிள்ளையின் குடும்பம் வாழ
வாழ்த்துகிறாள்!
தன் பேரக்குழந்தைகளுக்காக.....
தாய் அவள் என்றும் தாய்தான்
அதனால்
***தாய் வருந்துவதில்லை !***

- **V. பாலகிருஷ்ணன்**
கல்கண்டார்கோட்டை

* * *

# 16. என் அம்மா

என் அம்மாவிற்கு ஒரு கண் தான் இருந்தது. அவளைப் பார்த்தாலே எனக்கு வெறுப்புத்தான். அவளால் எப்போதும் எனக்கு அவமானம்தான். அவள், சமையல் வேலை செய்து தான் குடும்பத்தை நடத்தி வந்தாள். ஒருநாள் நான் எலிமெண்டரி பள்ளியில் படிக்கும்போது, என் அம்மா என்னைப் பார்க்க பள்ளிக்கு வந்துவிட்டாள். எனக்கு ஒரே அவமானமாகப் போய்விட்டது. அவள் எப்படி இங்கு வரலாம்? அவளை நான் கண்டுகொள்ளவே இல்லை. மாறாக வெறுப்போடு அவளைப் பார்த்துவிட்டு வெளியில் ஓடிவிட்டேன். மறுநாள் பள்ளியில் என்னோடு படிக்கும் சக மாணவன், அய்யே! இவன் அம்மாவுக்கு ஒரு கண் தானே! எனக் கேலி செய்தான்.

என் அம்மா அப்போதே தொலைந்து ஒழிந்தால் நன்றாக இருக்கும் எனத் தோன்றியது. அன்று வீட்டில் பார்த்ததும் அவளைப் பார்த்த போது நான் கத்தினேன். என்னை இவ்வளவு அவமானப் படுத்துவதற்கு பதில் நீ செத்துத் தொலையக் கூடாதா? என் அம்மா பதிலே பேசவில்லை. எனக்கு இருந்த கோபத்தில் நான் என்ன பேசுகிறேன் என்பதைப் பற்றி ஒரு நொடி கூட யோசிக்கவில்லை. என் அம்மாவின் உணர்வுகளைப் பற்றி நான் கவலைப்படவே இல்லை.

அந்த வீட்டை விட்டே போய் விட வேண்டும், என் அம்மாவின் சம்பந்தமே இருக்கக் கூடாது என நினைத்தேன். மிகவும் முனைந்து படித்தேன். பின்னர் சிங்கப்பூரில் படிப்பதற்கு வாய்ப்பும் கிடைத்தது. பிறகு எனக்குத் திருமணம் நடந்தது. எனக்கென்று தனி வீடு வாங்கினேன். எனக்கும் குழந்தைகள் பிறந்தன. நான் வாழ்வில் சௌகரியங்களுடனும், குழந்தைகளுடனும் மகிழ்ச்சியாக இருந்தேன்.

ஒரு நாள் அம்மா என்னைப் பார்க்க வந்தாள். பல வருடங்களாக அவள் என்னைப் பார்க்கவில்லை. தன் பேரக் குழந்தைகளையும் அவள் பார்த்ததில்லை. அவள் வாசல் படியில் நிற்பதைக் கண்டு என் குழந்தைகள் திகைத்துப் போய்விட்டனர். அவளைப் பார்த்து நான் கத்தினேன், “எவ்வளவு தைரியம் இருந்தால் என் வீட்டிற்கு வந்து என் குழந்தைகளைப் பயமுறுத்துவாய்? உடனே இங்கிருந்து போய்த் தொலை!” இதற்கு என் அம்மா, அமைதியாக, “மன்னிக்க வேண்டும். ஏதோ வீடு தவறி வந்துவிட்டேன் போல் இருக்கிறது” என்று சொல்லி உடனே அங்கிருந்து போய்விட்டாள்.

ஒரு நாள் நான் படித்த கிராமத்துப் பள்ளியின் பழைய மாணவர்கள் சந்திக்கும் விழாவிற்கான அழைப்பிதழ் என் வீட்டிற்கு

வந்தது. வியாபார சம்பந்தமாக வெளியூர் போவதாக மனைவியிடம் பொய் சொல்லி விட்டு என் கிராமத்திற்கு வந்தேன். விழா முடிந்த பின் நாங்கள் இருந்த ஒட்டைக் குடிசை இருக்கிறதா என்று பார்க்கப் போனேன். பக்கத்து வீட்டில் இருந்தவர்கள் என் அம்மா இறந்துவிட்டாள் என்று சொன்னார்கள். என் கண்களில் ஒரு சொட்டுக் கண்ணீர் கூட வரவில்லை.

என்னிடம் கொடுக்கும்படி அவள் கொடுத்த ஒரு கடிதத்தைக் கொடுத்தார்கள்.

அதில், "என் அன்பு மகனே! நான் உன்னைப் பற்றியே எப்போதும் நினைத்துக் கொண்டிருந்தேன். உன் வீட்டிற்கு வந்து உன் குழந்தைகளைத் திடுக்கிட வைத்ததற்காக என்னை மன்னித்து விடு. நீ கிராமத்து பழைய மாணவர் கூடும் விழாவிற்கு வரப்போகிறாய் என்பதைக் கேட்டு மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது. ஆனால், நீ வரும்போது உன்னைப் பார்க்க என்னால் படுக்கையை விட்டுக்கூட எழுந்திருக்க முடியுமா என்று தெரியவில்லை. நீ வளரும் காலங்களில் எல்லாம் உனக்கு அவமானம் ஏற்படுமாறு எப்போதும் நான் இருந்ததற்காக என்னை மன்னித்து விடு. எனது கடைசி காலத்தில் ஒரு ரகசியத்தை உனக்கு சொல்ல விரும்புகின்றேன்.

அதாவது....நீ மிகவும் சின்னப் பிள்ளையாக இருந்த போது ஒரு விபத்தில் உன் ஒரு கண்ணை இழந்து விட்டாய். ஒரு அம்மாவாக, வாழ்நாள் முழுவதும் நீ ஒரு கண்ணோடு வளர்வதை என்னால் பார்க்க சகிக்க முடியவில்லை. அதனால் என் ஒரு கண்ணை உனக்கு அளித்து விட்டேன். இந்த விஷயம் உனக்குத் தெரியக் கூடாது என்பதில் வெகு ஜாக்கிரதையாக இருந்தேன்.

என் மகன் ஒரு ஸ்தானத்தில், எனக்காக அந்தக் கண்ணுடன் ஒரு புதிய உலகத்தை பார்த்துக் கொண்டு இருக்கிறான் என்பதை நினைத்துப் பெருமைப் படுகிறேன்."

மிகுந்த அன்புடன்

உன் அம்மா.

– ?

* * *

## மேலான தவம் ஏது?

தாய், தந்தை, குரு ஆகிய மூவரையும் மரியாதையுடனும், மகிழ்வுடனும் நடத்துவதை விட ஒருவனுக்கு மேலான தவம் எதுவும் இல்லை. இவர்களை மீறிச் செய்யும் செயல்கள் பலன் அளிப்பதில்லை.

# 17. குற்ற உணர்வு

அம்மாவை பிரதிபலன் பார்க்காமல் கவனிக்க வேண்டும். அப்படி கவனிக்காமல் விட்டதால், நான் படும் மன உளைச்சலைத்தான் இங்கே கொட்டுகிறேன்.

எங்கள் குடும்பத்தில் அப்பா, அம்மா, நான், தங்கை, தம்பி என ஐந்து பேர். எனக்கும் தங்கைக்கும் திருமணம் ஆனதும் அப்பா இறந்து விட்டார். என் தம்பிக்கு வசதியான குடும்பத்துப் பெண்ணை திருமணம் செய்து வைத்தார்கள். கல்யாணம் முடிந்த கையோடு தனிக் குடித்தனம் சென்று விட்டான். அம்மா மட்டும் வீட்டில். உடல்நிலை சரியில்லாதவர். தனிமை இன்னும் அதிகம் வாட்டியது. அதை தாங்க முடியாமல், என் வீட்டில் சிறிது காலமும், தங்கை வீட்டில் சிறிது காலமும் இருக்கலாம் என்று நினைத்து இருக்கிறார்கள்.

தங்கை வசதியானவள். அவள் அம்மாவை கூட்டி வந்து வைத்து இருக்கட்டும் என்று நான் நினைத்தேன். என் தங்கையோ, அம்மாவை நம்மோடு வைத்துக் கொண்டால் மாமியார் ஏதாவது சொல்லுவார்கள், அண்ணனே அம்மாவை கூட்டிப்போய் கவனிக்கட்டும் என்று இருந்துவிட்டாள்.

எங்களோடு வந்து கொஞ்சநாள் இருங்கள் என்று ஒருமுறைகூட நாங்கள் சொன்னதோ லெட்டர் போட்டதோ இல்லை. வருகிறேன் என்று சொல்லிவிடுவார்களோ என்ற பயம்தான் காரணம். இப்படிப்பட்ட பிள்ளைகளை பெற்றுவிட்டோமே என்று நினைத்தார்களோ, இல்லை யாருக்கும் சிரமம் கொடுக்க வேண்டாம் என்று நினைத்தார்களோ தெரியவில்லை. திடீரென ஒருநாள் காணாமல் போய் விட்டார்கள். அதற்கு முன் ஆசிரமங்களைப் பற்றி விசாரித்தார் என்பது பின்னர்தான் தெரிந்தது. ஒவ்வொரு ஆசிரமமாகச் சென்று பார்த்தோம். அம்மாவைப் பற்றி தகவலே இல்லை. என் அம்மா வைராக்கியம் உள்ளவர். செத்தால்கூட நம் முகத்தில் முழிக்க இவர்கள் தகுதியற்றவர்கள் என்று நினைத்துவிட்டார்கள் போலும்.

மூன்று குழந்தைகளைப் பெற்று வளர்க்க அம்மா என்ன கஷ்டப்பட்டு இருப்பார்கள்? யாராவது பத்து நாட்களாவது வைத்து கவனித்தால் செலவாகும் என்ற மனப்பான்மையில் விட்டுவிட்டோமே என்று இப்போது பாடாய்ப்படுத்தும் குற்ற உணர்விலிருந்து தப்பிக்க வழி தெரியாமல் தவிக்கிறோம் நாங்கள் எல்லோரும்.

**– வேதனைப்படும் ஒரு மகன்**

* * *

**உலகிலேயே மிக அமைதியான இடம் தாயின் மடி**

# 18. இன்று நீங்கள் இல்லையே அம்மா!

அம்மாவுக்கு இறுதி விடை கொடுத்து வீடு திரும்பியாச்சு!

பாசம், பரிவு, அன்பு என்று இளகிய மனமும், இரும்பு போன்ற மன உறுதி, வைராக்கியம், பிடிவாதம், தான் கொண்ட கொள்கையில் பிடிப்பு என்ற இறுக்கமும், கண் பார்த்தால் கைசெய்யும் என்ற அளவில் எந்த ஒரு கைவினையையும் சுலபமாகக் கற்றுத்தேறும் ஆர்வமும் – ஓர் அபூர்வக் கலவை அம்மா!

பொருளாதார வசதி குறைவாய் இருந்த காலகட்டங்களிலும், எப்போதும், வீட்டுக்கு எத்தனை விருந்தினர் வந்தாலும், அத்தனை பேருக்கும் சுவையான உணவு இருக்கும். பண்டிகை நாட்களிலோ குறையொன்றும் இல்லை. தீபாவளி என்றால் உள்ளாடை முதல் கர்சீப் வரை எல்லாருக்கும் புதிதாக அடுக்கப்பட்டிருக்கும். 2 ஸ்வீட், 4 காரம், லேகியம் என்று அனைத்தும் வீட்டிலேயே தயாராகும். உழைப்புக்கு அஞ்சாத அம்மா!

தையல் கலையில் தேர்ச்சி பெற்று, மயிலையில் ஒரு மாதர் சங்கக் கூட்டுறவு அமைப்பில் சேர்ந்து, ஸ்கூல் யூனிஃபார்ம் போன்ற ஆர்டர் எடுத்து, வீட்டில் தைத்துக் கொடுத்து அந்த சிறு வருமானத்தையும் வீட்டுப் பொருளாதாரத்திற்கு முட்டுக் கொடுத்து தன் நேரத்தை வீணாக்காத அம்மா!

அக்கம் பக்கத்து வீட்டு குழந்தைகளையும், எங்கள் நண்பர்களையும் தன் மக்களாகப் பாவித்து அன்பு காட்டும் மனம். ஒரு முறை பக்கத்து வீட்டு 3 வயது பெண் குழந்தை வீட்டிலிருந்த தூக்க மாத்திரைகளை மிட்டாயென்று எண்ணித் தின்றுவிட்டுத் துவண்டு தலைதொங்க, அத்தனை பேரும் செய்வதறியாது திகைத்தபோது, போட்டது போட்டபடி விட்டு, குழந்தையை அள்ளிக்கொண்டு ஆஸ்பத்திரிக்கு ஓடி, அவள் உயிரை மீட்டு வந்த செயல் வீராங்கனை அம்மா !

எந்த ராஜா எந்தப் பட்டினம் போனாலும், அப்பாவோடு சேர்ந்து காலை அலுவல்களுக் கிடையே லலிதா ஸஹஸ்ரநாமம் தினசரி பாராயணம் செய்யும் அம்மா! கோவிலின் மாத முக்கியத் திருவிழாக்களுக்கு வருடம் தவறாமல் அழைத்துச் செல்லும் அம்மா!

வீட்டுப் பொருளாதாரச் சிக்கல்களுக்கு நடுவே எங்கள் வாழ்க்கைத்தரத்தை மெல்லமெல்ல முன்னேற்றி, ஒரு சொந்த வீடு என்ற கனவைத் திட்டமிட்டு நனவாக்கிய அம்மா!

1973 ஆம் வருடம், பிள்ளைகள் நாங்கள் வாழ்க்கையில் காலூன்றாத நிலையில் அப்பா திடீரென்று காலமானபோது, எங்கள் வாழ்க்கைப் படகு தத்தளிக்காமல், தேர்ந்த

மாலுமியாகச் செயல்பட்டு எங்களைக் கரை சேர்த்த அம்மா!

தனக்குக் கிடைத்த குடும்ப ஓய்வூதியத் தொகையை, சேமித்து வைத்து அதைக் கண்ணும் கருத்துமாகத் துல்லியமாகக் கணக்கிட்டுத் தன் பிள்ளைகளுக்கும், பேரன், பேத்திகளுக்கும், அவ்வப்போது தவறாமல் பங்கீடு செய்யத் தவறாத அம்மா!

தன் மக்கள் நலம் வேண்டி, தன் உடல் வருத்தி, உப்பில்லாத உணவும், உணவே இல்லாத நோன்புமாகத் தன் வாழ்வைத் தியாக வேள்வியாக வாழ்ந்த அம்மா!

நான் உடல்நலம் குன்றி மருத்துவமனையில் அறுவை சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட நாட்களிலும், என் ஐம்பது வயதில் அம்மையின் வெம்மையால் வீழ்ந்தபோதும், இரவு பகல் பாராமல் என்னை அங்கிருந்து அகலாமல் காப்பாற்றிய அம்மா!

கால்மூட்டுகள் தேய்ந்தபோதும், 75 வயதில் அதற்குப் பயிற்சி கொடுக்க, எக்ஸர்சைஸ் சைக்கிள் வாங்கிப் பயிற்சி செய்த அம்மா! தன் கடைசி காலங்கள் வரை தன் வேலையைத் தானே பார்த்துக் கொள்வதென்ற பிடிவாத அம்மா!

“என்னை எமன் அழைக்கிறான், ஆனால் நான் வரமாட்டேன் என்று சொல்லிவிட்டேன்” என்று திடமாக எமனை எதிர்த்துப் போராடிய அம்மா!

அம்மாவைப் பற்றிய நினைவுப் பதிவுகளுக்கு ஏது எல்லை!

அம்மா,

சிறுவனாக இருந்த நாட்களில், எங்களை வீட்டில் விட்டுவிட்டு, அப்பாவோடு மாலையில் வெளியில் செல்லும் நீங்கள் வீடு திரும்ப நேரமானால், தவித்துத் தவித்து, வந்தவுடன் தாவி அணைத்து ஆறுதல் பெறுவேனே. அம்மா–

இன்றைக்கு....?

– ரவி

✻ ✻ ✻




அம்மாவின்
பாசவெள்ளத்திற்கு
முன்னால்
ஆற்று வெள்ளம்
எம்மாத்திரம்?

# 19. கொடுத்து வைத்தவன்

வாசுவும், சுரேஷும் நண்பர்கள். வாசு ஒவ்வொரு வருடமும் கோடை விடுமுறையில் மகளையும், மனைவியையும் ஏதாவது மலைவாச ஸ்தலத்துக்கு அழைத்துச் சென்று விடுவான்.

வாசு காதல் திருமணம் புரிந்தவன். விதவைத் தாயின் மறுப்பு, கெஞ்சல் எல்லாவற்றையும் மீறி ரேவதியைக் கைப்பிடித்தான். ரேவதி சாமர்த்திய சாலி. மாமியாருக்கு தன்னைப் பிடிக்கவில்லை என்று தெரிந்ததும் அழகாக நாடகமாடி, திருமணமான மூன்றாவது மாதமே தாய்க்கும் மகனுக்கும் இடையில் பெரிய விரிசலை உண்டு பண்ணி, அவன் தாயை கிராமத்துக்கு அனுப்பி விட ஏற்பாடு செய்துவிட்டாள். வாசு ஆரம்பத்தில் மாதாமாதம் பணம் மணியார்டர் செய்து வந்தான். ஆனால் வைராக்கியம் மிக்க அவன் தாய் பணத்தை வாங்காமல் திருப்பி அனுப்பி விட்டதால், தாய்க்கும் மகனுக்கும் இடையே பேச்சு வார்த்தை கூட இல்லை. இதனால் வாசுவுக்கு பெரிய கவலை ஏதும் கிடையாது.

ரேவதியும் வேலைக்குப் போவதால் பணத்துக்கு ஒன்றும் குறைச்சல் இல்லை. ஒரே மகள் பூஜா. வீட்டில் இருந்து படித்தால் அதிக மதிப்பெண் பெற முடியாது என்பதற்காக ஐந்தாம் வகுப்பு படிக்கும் தன் மகளை உண்டு, உறைவிடப்பள்ளியில் சேர்த்து படிக்க வைக்கிறான்.

நம்மைப் போலவா? வயதான பெற்றோர்களைப் பராமரிக்கவே வருமானமும், விடுமுறையும் போய் விடுகிறது. தன் மனைவியையும், மகளையும் எங்கும் ஜாலியாக வெளியூர் அழைத்துச் செல்ல முடியவில்லை என்ற ஆதங்கம் எப்போதுமே சுரேஷுக்கு உண்டு.

தன்னை வளர்த்து ஆளாக்க தன்னுடைய பெற்றோர் பட்ட கஷ்டத்தை ஒவ்வொரு நொடியும் உடனிருந்து பார்த்தவன் என்பதால், தன் பெற்றோருக்கு முக்கியத்துவம் கொடுத்து தன் தனிப்பட்ட ஆசைகளை தள்ளிப் போட்டுக் கொண்டு வந்தான் சுரேஷ்.

சுரேஷின் மனைவி விமலாவும் சொக்கத் தங்கம். கணவனுக்கு ஒரு படி மேலாக தன் மாமனார், மாமியாரைக் கவனித்து வந்தாள்.

இப்படி ஏதேதோ நினைவில் மூழ்கி விட்ட சுரேஷை, வாசுவின் குரல்தான் சுய நினைவுக்கு கொண்டு வந்தது.

“என்னடா என்ன ஒரே சிந்தனை. நான் ஹாஸ்டலுக்குப் போய் பூஜாவை கூட்டிக்கிட்டு வரணும். என்னோட டூர் பிளான் பத்தி பூஜாவுக்கு இன்னும் தெரியாது. தெரிஞ்சதும் சந்தோஷத்தில் குதிக்கப்போறா. நான் இப்பவே கிளம்புறேன். அடுத்த திங்கள் சந்திக்கலாம். ஓகே?” என்று கிளம்பியவனுக்கு பதில் சொல்லக்கூடத் தோன்றவில்லை சுரேஷுக்கு.

சனி, ஞாயிறு விடுமுறை முடிந்து திங்களன்று சற்றே தாமதமாக ஆபீஸ் வந்த சுரேஷுக்கு, தன் சீட்டில் அமர்ந்து வேலை பார்த்துக் கொண்டிருந்த வாசுவைப் பார்த்து அதிர்ச்சிதான் ஏற்பட்டது. அருகில் சென்று, “என்னடா டூர்ல இருப்பேன்னு பார்த்தா, இங்க இருக்கே, என்னாச்சு....?” என்றவனை, “வாடா கேண்டீனுக்கு போய் பேசலாம்” என்று அழைத்துக் கொண்டு வந்த வாசுவின் கண்கள் கலங்கி இருக்க, சுரேஷுக்கு மனம் சற்று கலங்கத்தான் செய்தது.

வாசு மெல்லிய குரலில் சொன்னது:

ஹாஸ்டலுக்குப் போய் பூஜாவை வீட்டுக்கு கூட்டிட்டு வந்து டூர் பத்தி சொன்னதும், அவ சந்தோஷத்தில் துள்ளிக் குதிப்பான்னு பார்த்தா, அவ "நான் டூர் எங்கேயும் வர மாட்டேன். என்னோட பிரெண்ட்ஸ் எல்லாம் அவங்க தாத்தா, பாட்டி ஊருக்குப் போய் ஜாலியா லீவை என்ஜாய் பண்ணிட்டு வராங்க. அந்த ஊருலயும் அவங்களுக்கு நெறைய பிரெண்ட்ஸ் இருக்காங்களாம். எப்பப் பார்த்தாலும் உங்க ரெண்டு பேர் மூஞ்சியவே பார்த்துக்கிட்டு உங்களோட டூர் வர எனக்குப் பிடிக்கலை. என்னை பாட்டியோட கிராமத்துல விட்டுட்டு நீங்க ரெண்டு பேரும் எங்க வேணாலும் போங்க" என்று சொல்லி அழுது ஆர்ப்பாட்டம் பண்ணிட்டா! ஒரு வழியா அவளை சமாதானப்படுத்தி, ரேவதி கிட்ட பெர்மிஷன் வாங்கிட்டு கிராமத்துக்குப் பூஜாவை அழைச்சுகிட்டுப் போனேண்டா. அங்க.....அங்க... மேற்கொண்டு பேசமுடியாமல் வாசுவுக்கு கண்களில் இருந்து கண்ணீர் பெருக்கெடுத்து நா தழுதழுத்தது.

சமாளித்துக்கொண்டு, அம்மா, ரொம்ப நாளா உடம்பு சரியில்லாம இருந்து இப்போ கோமாவில இருக்காங்க. உள்ளூர் டாக்டர் ஏதோ மருந்து கொடுத்து இப்போ உயிர் ஊசலாடிகிட்டு இருக்கு. பக்கத்து வீட்டுக்காரங்ககிட்ட போயி எனக்கு தகவல் சொல்லி இருக்கலாமேன்னு கேட்டதுக்கு, "என்னோட உயிர் போனாக்கூட அவனுக்கு தகவல் சொல்ல வேண்டாம். நீங்களே எனக்கு காரியம் செஞ்சுடுங்கன்னு" அவங்க கிட்ட சத்தியம் வேற வாங்கிட்டதா சொன்னாங்க. "அப்படி நான் என்ன தப்பு செய்துட்டேன், ஊரு உலகத்துல நடக்காதது என்ன நடந்துடுச்சுன்னு என்றவனிடம், " ரேவதி கிட்ட கேட்க வேண்டியது தானே என்ன நடந்ததுன்னு....?" என்று சுரேஷ் கோபத்துடன் கேட்க, "அவ எங்கே வாயத் திறக்குறா, எனக்கு வந்த கோபத்துக்கு நாலு அறை விடலாமான்னு இருந்தது" என்றவனை வியப்புடன் நோக்கினான் சுரேஷ்.

"சரி, இப்ப என்ன செய்யலாம்னு இருக்கே" என்று கேட்க, இந்த சம்பவத்துனால பூஜாவுக்கு எல்லா விஷயமும் தெரிஞ்சு போய் எங்களை புழு, பூச்சி போலப் பாக்குறாடா. நான் பாட்டி கூட இருந்து அவங்களை பார்த்துக்கிறேன், எனக்கு லீவு தானே அப்படிங்கிறா, பத்து வயதுப் பொண்ணை அப்படி விட்டுட்டு வர முடியுமா? கூட்டிட்டு வந்துட்டேன். இப்போ எங்க கூட பேசுறதில்லை, சாப்பிடறதில்லை. பாட்டி நினைவாவே இருக்கா. எனக்கு என்ன பண்றதுன்னே தெரியலடா. அம்மாவை எப்படி குணப்படுத்துறதுன்னு புரியலை. உன்கிட்ட ஏதாவது ஆலோசனை கேக்கலாம்னுதான் இன்னைக்கு ஆபீசுக்கே வந்தேன்"என்று சொல்லிக் கொண்டிருக் கையில் போன் வந்தது.

போனில் பேசியவன் முகம் இருளடைந்து போக, "எல்லாமே முடிஞ்சிடுச்சுடா. எங்கம்மா எனக்கு எந்தத் தொந்தரவும் தரக் கூடாதுன்னு போய் சேர்ந்துட்டாங்க. எல்லாக் காரியத்தையும் எங்கம்மா விருப்பப்படி பக்கத்து வீட்டுக்காரங்க பண்றதானு கேட்கிறாங்க. அம்மா இருக்கிற வரைக்கும்தான் அவங்க சொல் பேச்சைக் கேக்கல. அவங்க சாவுக்கப்புறமாவது அவங்க பேச்சைக் கேப்போமேனுதான் அவங்களையே எல்லாக் காரியமும் செய்யச் சொல்லிட்டேன். இப்போ என் மனசாட்சியும், பூஜாவும் கேட்கிற கேள்விகளுக்கு நான் என்ன பதில் சொல்லப் போறேன்னு தெரியலடா" என்று அப்படியே இரண்டாக மடிந்து உட்கார்ந்து கதறியவனுக்கு எப்படி ஆறுதல் சொல்வதென்றே தெரியவில்லை சுரேஷ்க்கு.

**உண்மையிலேயே கொடுத்து வைத்தவன் தான் தான். பெற்றோரின் ஆசீர்வாதம் தனக்கு எப்போதும் இருக்கிறது என்று அவன் மனம் சொன்னது.**

– ?

* * *

# 20. புதிய வானப்பிரஸ்தம்

முதியோர் அநாதை இல்லத்தில் பாட்டியை முதல் தடவை பார்த்த அதிர்ச்சி இன்னமும் இருந்தது வித்யாவுக்கு.

பாட்டியின் தோற்றம்…மாறியிருந்தாள், தலைகீழ் மாற்றம்….!

பதினெட்டு முழப் புடவை போய் விட்டிருந்தது. மடிசார் இல்லை. மாறாக, வெளிர் நிறத்தில் சாயம் போன நைலக்ஸ் சேலை! பாந்தமாக இல்லை. உடம்போடு ஒட்டாமல் 'புஸ்'ஸென்று நின்றது.

கூந்தல் அவிழ்ந்தால் முதுகெல்லாம் புரளும்! அத்தனை அடர்த்தி ! நீளம்.! இப்போது..? முழுவதும் வெட்டியெறிப்பட்டு, சம்மர் கிராப் அடித்தது போல்…..

முதியோர் இல்லங்களுக்கும் சீருடை வந்து விட்டதா? தெரியவில்லை! எல்லாருமே கிட்டத்தட்ட இதேபோல்…

"பாட்டி, என்னது இது…? " என்று புடவையைக் காட்ட….

இதுவா…? உலகத்திலே இன்னும் நல்லவா இருக்கா! எங்களைப் பார்த்து, மனசு இரக்கப்பட்டு புடவையை கொண்டுவந்து கொடுக்கிறா. பழசு – புதுசுன்னு கிடைக்கிறதெல்லாமே ஆறு கஜமா இருக்கு! எனக்கு மாத்திரம் ஒன்பது கஜம் கொடுங்கோ, அதைத்தான் நான் கட்டிக்கிறது'னு அவாளைக் கேட்க முடியுமா? அதான், விட்டுட்டேன். எதையெல்லாமோ விட்டாச்சு. புடவையிலே என்ன வந்தது..? காலம் மார்றதும்மா…! புரிஞ்சுக்கணும்! சிரித்தாள். வேதனையை வெளிப்படுத்தும் விரக்திச் சிரிப்பாக அது இருந்தது.

"பார்த்தியா, இங்கே இருக்கிற கூட்டத்தை. நூறு பேர்…! இத்தனை தலைக்கும் எண்ணெய் வாங்கி கட்டுப்படியாகுமா? சொல்லு! ரெண்டு வேளை சாப்பாடு போடறா….தர்மத்துக்கு அதுவே பெரிசு! அதுக்கும் மேலே எண்ணெய் பிண்ணாக்குன்னு ஒவ்வொண்ணா கேட்டுண்டு இருக்க முடியுமா? சரின்னு அப்படியே எண்ணெய் வாங்கிக் கொடுத்தான்னு வைச்சுக்கோ, தலையை அமுத்தி வார இங்கே எந்த கிழம்கட்டைக்கு தெம்பு இருக்கு! கிடக்கட்டும்னு விட்டா சிக்குப் பிடிச்சு, பேன் – ஈருன்னு அடைஞ்சிடும். அதனாலே, ரெண்டு மாசத்துக்கு ஒருதடவை, சுமங்கலியோ, அமங்கலியோ… எல்லோருக்கும் ஒரே மாதிரி சுத்தமா கிராப் பண்ணிடறா..! "

பாட்டி சொன்ன கணக்கு சரியாக இருக்கும் என்று தோன்றியது! ஆணும், பெண்ணுமாக அங்கே அடைந்திருக்கும் அந்த நாதியற்றவர்கள்…. ஏதோ யோசனையில், கவலையில்… துக்கத்தில்… முணுமுணிப்பில்… வெறித்த பார்வையில் சோகத்தில்..

●

"ஏண்டா சந்துரு, புலி, சிங்கம் இதெல்லாம் எப்படி இருக்கும்னு வண்டலூருக்குக் குழந்தைகளைக் கொண்டு போய்க் காட்டற மாதிரி, தாத்தா பாட்டின்னா இப்படித்தான்

இருப்பானு அழைச்சிண்டு வந்து புரிய வைக்கிற காலம் வந்துடுச்சு பார்த்தியா!"

பாட்டி இப்படித்தான் பேசுவாள். "பளார் – பளார்" என்று செவிட்டில் அறைகிற மாதிரி இருக்கும்! எதையும் பூசிமெழுகிப் பேசத் தெரியாது.

அப்பா பாட்டியின் பார்வையைத் தவிர்த்தார். வேறு பக்கம் திரும்பிக் கொண்டார்.

"ஏண்டா, கோபமா...? அசடு! சரி, ரம்யா எப்படி இருக்கா? அமெரிக்காலேர்ந்து போன் வருதா? ம்...இங்கே ஒரு தாத்தா இருக்கார்...அவர் பேரன்கூட அங்கேதான் இருக்கானாம். ஏதோ ஊர் சொன்னார்...நம்ம மாம்பலம், மயிலாப்பூர் மாதிரி! பேரன் பேரன்னு எப்பப் பாரு அவன் பேச்சுத்தான்! ஆரம்பிச்சா ஓயமாட்டார். பாவம்! இங்கே எல்லாரும் மனுஷாளுக்கு ஏங்கிக் கிடக்கா..என்ன பண்றது..?

●

தாத்தா மறைந்து போனதுக்கப்புறம் கிராமத்தில் இருந்த பாட்டி தன் மகன் வீட்டிற்கு வந்த சமயம்....அப்போதுதான் ரம்யா அக்காவுக்கும் தீவிரமாக வரன் தேடிக் கொண்டிருந்தார்கள்.

வயதான மாமியாரை தன்னோடு வைத்துக் கொள்ள அம்மாவுக்கு சற்றும் இஷ்டமில்லை. அவர்களை வைத்து பணிவிடை செய்யவோ, பராமரிக்கவோ பிரியமில்லை. சரியான சுயநலவாதியான அம்மா கொஞ்சம் கொஞ்சமாக அப்பாவை கரைக்க ஆரம்பித்தாள், பாட்டியை எங்காவது வெளியில் கொண்டுவிடலாமென்று.

" கோமதி....அம்மா உடம்பு முடியாம போய் நம்மகிட்டே வந்துட்டா. போகச் சொன்னா அவ எங்கே போவா? "

"எத்தனையோ இடம் இருக்கு! ரொம்ப நல்லா பார்த்துக்கறா, அங்கே கொண்டு போய்ச் சேர்த்துடலாம்"

"இதப் பாரு...உன்கிட்டே ஏற்கெனவே சொல்லியிருக்கேன்...என்னை ஆளாக்க அம்மா எவ்வளவு சிரமப்பட்டிருக்கா தெரியுமா! சாதாரண மனுஷா படற கஷ்டம் இல்லே அது...!"

"சரி, எந்த அம்மாதான் கஷ்டப்படலே? குழந்தைகளை வளர்த்து முன்னுக்குக் கொண்டுவர எல்லா அம்மாவும்தான் பாடுபடறா...! உங்களுக்கு உங்க அம்மா சிரமப்பட்டது மாத்திரம்தான் கண்ணுக்குத் தெரியுது. ஏன், நான் கஷ்டப்படலியா? என்னோட சிரமம் இங்கே யாருக்குத் தெரியுது!"

"இல்லே....அந்த நாள்லே இவ்வளவு பணம் காசு கிடையாது. சம்பாதிக்க வழி கிடையாது...! வீடுவீடா போய் அலைஞ்சு உழைச்சு தேய்ஞ்சு... என்னைத் தவிர வேற எந்த நினைப்பும் இல்லாம.."

"போறும்...இதை நிறைய தடவை கேட்டாச்சு! இந்த துக்கணியூண்டு ஃப்ளாட்ல ஏற்கெனவே நாலும் ஒண்ணும் அஞ்சு பேர் ஆச்சு! நாளைக்கே மாப்பிள்ளை சம்பந்தின்னு வந்தா வாசக் கதவோட பேசி அனுப்பிடறதா..? இந்தக் கல்யாணம் நடக்கிற வரையிலுமாவது அம்மாவை எங்கேயாவது கொண்டு சேர்த்துடலாம்."

அப்பா ஏதோ சொல்ல வாயெடுத்தார். நிறுத்தி விட்டார். அனாவசியமாக வளர்த்த வேண்டாம் என்ற எண்ணமாக இருக்கலாம்.

கோயிலிலிருந்து பாட்டி திரும்பினாள். சாப்பாடெல்லாம் ஆனதும், மெதுவாக ஆரம்பித்தார் அப்பா...

"அம்மா...உன்னை ஒண்ணு கேட்கணும்! இந்தச் சந்தடி, புகை, இரைச்சல், இதெல்லாம் உனக்கு ஒத்துக்கறதா? கிராமத்திலேயே இத்தனை நாள் இருந்துட்டு....அந்த சௌகரியம் இங்கே உனக்கு இருக்காது! வராது!"

"சௌகரியம் என்னடா சௌகரியம் இனி மேலே! சௌகரியமா போய்ச் சேர்ந்துட்டா போறும்! அப்படித்தான் வேண்டிக்கிறேன்! வியாதி வெக்கைன்னு விழுந்து கிடக்காம, போகலியே... போகலியே'னு நாலு பேர் சொல்லாம சட்டுனு போயிடணும். பிள்ளை மடியிலே பிராணனை விடனும்! அதுதான் விசேஷம்னு சொல்றா! உன் மடியிலே படுத்துண்டு ஒரு சொட்டு கங்கா தீர்த்தம் நாக்கிலே விழ... அப்படியே சிவ சிவானு..."

சட்டென்று அப்பா கண் கலங்கினார். "அது வந்தும்மா, ஒரு சந்தேகம். இங்கே நீ நிம்மதியா இருக்கியானு..."

பாட்டிக்குக் கற்பூர புத்தி. சுற்றி வளைத்து மகன் எதையோ சொல்ல வருவது புரிந்துவிட்டது.

"நேரே சொல்லிடேன்! இந்த ஜாடை மாடை பேச்செல்லாம எதுக்கு? என்கிட்டே பேசறதுக்குக் கூட என்ன பயம்? பழைய காலத்திலே வயசானா பிள்ளைகள்கிட்டே பொறுப்பை விட்டுட்டு, மாவுரி உடுத்திண்டு காட்டுக்குப் போயிடுவாளாம்! **வானப்பிரஸ்தம்!** காலம் மார்றதோல்லியோ... இப்ப, பிள்ளைகளே அனுப்பி வெச்சுடறா! இதுவும் வானப்பிரஸ்தம்தான்! காலத்துக்கு ஏத்த மாதிரி.."

"இல்லேம்மா....வந்து"

"விடுறா...! மேலே மேலே பேசிண்டு...என்னை எங்கேயாவது கொண்டு சேர்த்துடு. காசு, பணம் அதிகம் கேட்காத இடமா பாரு! உனக்குச் செலவு வைக்கக் கூடாது! உனக்கு ரெண்டும் பொண்ணு! ஜாக்கிரதையா இரு! உடம்பைப் பார்த்துக்கோ!"

அதன் பிறகு பேச்சு இல்லை. தயாராகிவிட்டாள்!

●

வாரம் ஒருமுறை ரம்யா போன் செய்வாள்! ஞாயிற்றுக்கிழமை ஒன்பது மணி சுமாருக்கு போன் வரும். இன்றும் வந்தது.

"அம்மா....இப்பவே சொல்லிடறேன். நீங்க ரெண்டு பேரும் இங்கே வர வேண்டியிருக்கும். விசா பேப்பரை இவர் அனுப்புறார். எதுக்கும் நல்ல நாள் ஒண்ணு பார்த்து வெச்சுக்கோ!"

"எதுக்கு?"

"என்ன கேள்வி இது....என் பிரசவத்துக்கு தான்! வரேன்...வரேன்னு இத்தனை நாள் இழுக்கடிச்ச என் மாமியார் இப்ப முடியாதுன்னுட்டா! உன் அம்மாவை வரச்சொல்லுன்னு கூலா சொல்றா! ஏதாவது கேட்க முடியுமா? வாயேன். எனக்கும் உன்னைப் பார்க்கணும்போல இருக்கு, வேற யார் இருக்கா உன்னை விட்டா எனக்கு"

"வரேன்! ஆனா, இங்கே உன் தங்கை வித்யாவுக்கு காலேஜ் இருக்கேடி...கடைசி வருஷமா வேற இருக்கு. அவளை எங்கே விடறது..? அவளுக்கு ஒரு ஏற்பாடு செய்யாம கிளம்ப முடியாதே!"

"போம்மா...அதெல்லாம் எனக்குத் தெரியாது. எப்படியாவது நீ அமெரிக்காவுக்கு வரே!"

அன்று முழுவதும் அம்மா அலை பாய்ந்தாள். சாம்பாருக்கு உப்பு போட்டோமோ, புளி போட்டோமா என்று புரியாமல் குழம்பினாள்! நினைத்து நினைத்து அப்பாவிடம் வந்து பேசினாள்.

"குழந்தை ஆசை ஆசையாக கூப்பிடறா, தலைப்பிரசவம்! நான் கூட இருக்கிறதுதான் முறை! ம்...என்ன செய்யலாம்? வித்யாவை எங்கே விடறது! இவ காலேஜ்லே ஹாஸ்டல் கிடையாதாம்! யாராவது தெரிஞ்சவா கிட்ட விடலாம்னா.... அதுக்கும் வழியில்லாம.."

"ஏன்...நான் தான் ஒரே பிள்ளையா போயிட்டேன்! உனக்குத்தான் உடன் பிறந்தவன், ஒண்ணுவிட்ட சித்தப்பா பையன்னு ஆயிரம் உறவு இருக்கே! அவாகிட்டே பேசறது! கொஞ்ச நாள் பார்த்துக்கச் சொல்றது!"

"அதெல்லாம் சரிப்படாது" என்றாள் அம்மா ஒற்றை வார்த்தையில். "எல்லாருக்கும் வயித்தெரிச்சல், எம் பொண்ணு அமெரிக்காலே இருக்காளேனு!"என்றவள்,

"எனக்கு ஒண்ணு தோண்றது. அம்மாவை அழைச்சிண்டு வந்துடலாம். இவளுக்குத் துணையா இங்கே கொண்டு வெச்சுடலாம். துணைக்குத் துணை.. காவலுக்கு காவல்! நாம திரும்பி வரவரைக்கும் இருக்கட்டுமே... என்ன சொல்றீங்க!

"எந்த அம்மா...!"

"எத்தனை அம்மா இருக்கா? இந்த நக்கல் பேச்சுதானே வேண்டாங்கறது! நம்ம அம்மாதான்...முதியோர் இல்லத்திலிருந்து அழைச்சிண்டு வரலாம்.! அங்கே இருக்கிறதை இங்கே இருந்துட்டுப் போறா.."

"இதப் பாரு... நீ வான்னா வந்துட்டு, போன்னா போறதுக்கு எங்க அம்மா ஒண்ணும் நலங்கிலே உருட்டற தேங்காய் இல்லே, தெரிஞ்சுக்கோ! அவ அங்கேயே இருந்துட்டுப் போகட்டும் நிம்மதியா.."

"சொல்றதைக் கேளுங்கோ, கொஞ்சமா மைசூர்பாகு கிளறி எடுத்துக்கறேன். போய்ச் சொல்லுவோம்...உங்களுக்குக் கொள்ளுப் பேத்தி பிறக்கப் போறா, இந்தாங்கோன்னு கொடுப்போம். அதுக்கப்புறமும் அம்மா வராத இருந்துடுவாளா, என்ன? ஆசை இல்லாம போயிடுமா...?"

அப்பா முகத்தில் அரை நம்பிக்கை. பாட்டி 'சரி' என்று கிளம்பி வந்தாலும் வரலாம். அல்லது நாக்கைப் பிடுங்கிக் கொள்கிற மாதிரி ஏதாவது கேட்டாலும் கேட்கலாம்.

●

இரண்டு மூன்று முறை வந்த இடம்தான். சற்றுச் சிதிலமடைந்த கட்டடம். திண்ணையிலும் மேடையிலும் அழுக்கு....வியாதி...மூப்பு... என்றிருந்த அந்த மனிதப் பிராணிகளில்....

பாட்டியைத் தேடினோம்.

வழக்கமாக உட்காரும் வேப்பமரத்து மேடை...! சிமெண்ட் பெஞ்ச் எங்கேயும் தென்படாமல், உள்ளே நுழைந்து சுற்றிச்சுற்றி வந்து...முகத்தை முகத்தைப் பார்த்து....ஏமாந்து....ச்சு....காணோம்!

"யாரையாவது தேடறீங்களா?"

காவலாளி போல் தோன்றியது. லுங்கியும் பனியனுமாக இருந்தார்.

"வயசான ஒரு அம்மா...."காவேரின்னு பேரு..

"இங்கே எல்லாம் வயசாளிகள்தான்!"

"இவங்க சிகப்பா...உசரமா...ரெண்டு மூணு வருஷமா இங்கேயேதான் இருக்காங்க! பாட்டெல்லாம் பாடுவாங்க. எப்பவும் இந்த வேப்பமரத்து கீழேதான் உட்கார்ந்து ஜபம் பண்ணிட்டு இருப்பாங்க...!"

"அட... அவங்களா! செத்துட்டாங்களே! சர்வ சாதாரணமாக, எந்தவித உணர்ச்சியும் அற்ற குரலில் பதில் வந்தது.

"என்னது...!"

அப்பாவின் கை நடுங்கியது. அந்த நடுக்கத்தில் கையிலிருந்த பாத்திரம் கீழே விழுந்து மைசூர்பாகுகள் மண்ணில் சிதறின.

"கொஞ்ச நாள் முன்னாடி படிக்கட்டிலே உட்கார்ந்திருந்தப்ப, அப்படியே சரிஞ்சு விழுந்துட்டாங்க. நடமாட்டம் இல்லாம போய் ரொம்ப அவஸ்தைப்பட்டாங்க. பாவம்! டாக்டர் வந்து பார்த்தும் ஒண்ணும் புண்ணியமில்லே..."

"ஏம்பா...எதுவுமே எங்களுக்குத் தெரியாதே...?"

பேச முடியாமல் தொண்டை அடைத்தது. துக்கத்தை அப்படியே விழுங்க அப்பா முயற்சித்தார்.

"வேண்டாம்னுட்டாங்க. பத்து மாசம் என் வயத்திலே இருந்ததனாலே என் பையனுக்குப் பத்து நாள் தீட்டு இருக்கு. அந்தத் தீட்டு கழிஞ்சப்புறம் அவனுக்கு விஷயம் தெரிஞ்சா போதும். காலம் மாறுது... இனிமே இந்த மாதிரிதான்... பிள்ளைகளுக்கு பெத்தவங்களைப் பத்தி இந்தக் கடைசி தகவல் மட்டும் தெரிஞ்சா போதும். ஒருவழியா இல்லேன்னு ஆயிடுச்சுன்னா நிம்மதியா போயிடும் அவங்களுக்கு"னு பெத்த மகனுக்குக்கூட தகவல் தரவேண்டாம்னுட்டாங்க. நேத்தோட பத்து நாள் ஆச்சு. இன்னிக்குத்தான் எல்லாருக்கும் கார்டு போட்டிருப்பாங்க! ஆமாம்...நீங்க யாரு? அவங்களுக்கு ஏதாவது உறவா...?"

அம்மா ஏனோ அழ ஆரம்பித்தாள்.

**- ஜி. நாராயணன்**

ஆனந்த விகடன் 15.6.2003

* * *

## 21. ஒரு தாயின் சக்தி

வில்மா ரூடால்ஃப் என்ற சிறுமிக்கு நான்கு வயதில் நிமோனியா வந்து இடது கால் செயலிழந்து விட்டது. டாக்டர்கள் இனி "வாழ்நாள் பூராவும் அந்தக் காலை பயன்படுத்த முடியாது" என்று கூறி விட்டனர். பிறகு ஒரு நாள் இரவு கண்கலங்கத் தன் தாயிடம் சென்று "இனி என்னால் நடக்க முடியாதாம்மா?" என்றாள் வில்மா. நெகிழ்ச்சியுடன் அவளை இறுக அணைத்துக் கொண்ட தாய், "அதையெல்லாம் நீ நம்பாதே. நான் சொல்கிறேன். நிச்சயமா உன்னால் நல்லா நடக்க முடியும். ஏன்? ரன்னிங் ரேஸ்கூட ஓடுவே" என்றாள். தாயை முழுக்க நம்பிய வில்மா தன் கால் சிகிச்சைக்காகப் பிணைக்கப்பட்டிருந்த இரும்பு வளையத்தைக் கழற்றி எறிந்து விட்டு தினம் நடந்து பழகினாள். பள்ளியின் ஸ்போர்ட்ஸ் டேயில் கலந்து கொண்டு ஓடி கடைசியாகத்தான் வந்தாள். அம்மா பக்கம் திரும்பிப் பார்த்தால் கவலைப்படாதே! தொடர்ந்து ஓடு! ஃபர்ஸ்ட் வருவே! என்றே வார்த்தைகள் வருகிறது. வில்மா தன் தாயை பிடிவாதமாக நம்பி மறுபடியும் தொடர்ந்து ப்ராக்டிஸ்!

1960 ஒலிம்பிக்ஸில் நூறு மீட்டர், இருநூறு மீட்டரிலும், நானூறு மீட்டரிலும், ரிலே ஓட்டப் பந்தயத்திலும் தங்க மெடல்கள் வாங்கும் வரை வில்மா விடவில்லை. தாய் என்கிற அந்த இரண்டெழுத்துக்கு ஒலிம்பிக்ஸ் சக்தி உண்டு!

* * *

## 22. சாதிப்பவள் தாய்

ஒரு நாள் காது சற்று கேளாத நான்கு வயது சிறுவன் ஒருவன் தனது ஆசிரியர் எழுதிக் கொடுத்த குறிப்புடன் வீடு திரும்பினான். அவனது தாய்க்காக எழுதப்பட்ட அந்தக் குறிப்பில், "உங்கள் மகன் படிப்பதற்கு லாயக்கற்றவன், அவனைத் திரும்ப அழைத்துக்கொள்ளுங்கள்" என்று எழுதியிருந்தது. அதைப் பார்த்த அந்த தாய், " என் மகன் ஒன்றும் முட்டாள் இல்லை. அவனுக்கு நானே கற்பிக்கிறேன்'' என்று சொல்லி தன் மகனுடன் கூடவே இருந்து பொறுமையாக சொல்லிக் கொடுத்து நல்ல அறிவாளியாக ஆக்கினாள்.

அந்த காது கேட்காத சிறுவன் தான் பின்னாளில் ஒரு உலகப் புகழ் பெற்ற விஞ்ஞானியாக ஆனான். அவன் தான் Thomas Alwa Edison.

தாய் என்பவள் தனது குழந்தைக்காக எதையும் சாதிப்பவள்.

- Provided by : சேது

* * *

# 23. அம்மாவுக்குச் சொல்ல வேண்டிய ஸ்ராத்த மந்திரம்

குஜராத்தில் ஒரு கயா உள்ளது. *இதை மாத்ரு கயா என்பார்கள். இது பெற்ற தாயாருக்கு மட்டும் ஸ்ராத்தம் செய்யும் இடம்.

அம்மாவுக்கு சொல்லும் ஸ்ராத்த மந்திரத்தின் விளக்கத்தை ஸ்ரீ ஜெயேந்திர சரஸ்வதி சுவாமிகள் அவர்கள் கூறுகின்றார்கள் :

"தாயே, என்னைக் கருவில் ஏற்றபோது நீ உடம்பு வேதனை பட்டிருப்பாயே....அதற்காக இந்த ஜலதர்ப்பணம் செய்கிறேன். நான் கருவில் உருவாகி வளர்ந்தபோது நீ வாந்தி எடுத்து உணவு செரிக்காமல் அவஸ்தைப் பட்டிருப்பாயே...... அதற்காக இந்த ஜலதர்ப்பணம் செய்கிறேன். தாயே, என்னை வளர்ப்பதற்காக நீ விரும்பாத எல்லா உணவையும் என் பொருட்டே எடுத்துக் கொண்டாயே..... அதற்காக இந்த ஜலதர்ப்பணம் செய்கிறேன். தாயே....நான் உன் வயிற்றில் வளர்ந்துவரும் நேரத்தில் உன்னால் சுமக்கமுடியாமல் பெருமூச்சுவிட்டு இங்கும் அங்கும் அலைந்தாயே....அந்த வேதனைக்காக ஜலதர்ப்பணம் செய்கிறேன். நீ போக வேண்டிய இடங்களுக்குப் போக விடாமல், நீ போனால் எனக்குக் கடினம் என்று சொல்லி, வீட்டிற்குள்ளேயே முடங்கிக் கிடந்து எல்லா ஆசைகளையும் துறந்துவிட்டு என் மீதே கவனமாக இருந்தாயே.....அதற்காக இந்த ஜலதர்ப்பணம் செய்கிறேன். நான் வெளியே உருவெடுத்து வந்தபோது உன்னுடைய உதிரம் பெருக்கெடுத்து ஓடியிருக்குமே..... அதற்காக நான் ஜலதர்ப்பணம் செய்கிறேன். பிரசவ வலியில் அலறி இருப்பாயே.... அதற்காக ஜலதர்ப்பணம் செய்கிறேன். நான் வாயால் கடித்து உறிஞ்சியபோது உன் மார்க்காம்புகள் வலித்திருக்குமே... அதற்காக இந்த ஜலதர்ப்பணம் செய்கிறேன். என் அழுகுரல் கேட்டதும் ஓடோடி வந்து தூக்கினாயே..... அதற்காக உனக்கு ஜலதர்ப்பணம் செய்கிறேன். நான் பிறந்த பிறகு எனக்கு பால் கொடுக்க வேண்டு மென்பதற்காக வேண்டாததை விலக்கி, வேண்டியதை மட்டும் உண்டாயே.....அதற்காக நான் ஜலதர்ப்பணம் செய்கிறேன். நான் உன் மடியில் மல மூத்திரம் செய்தேனே.....அந்த துர்வாசனை வேதனைகளை பொறுத்துக் கொண்டாயே..... நான் இரவிலே அழுது, மற்றவர்கள் ஏச, நீ எழுந்து என்னைச் சமாதானப்படுத்தி மற்றவர்கள் ஏச்சைப் பொறுத்துக் கொண்டாயே.... இப்படியாக ஐம்பத்தைந்து விதமான அவஸ்தைகளை பொறுமையோடு ஏற்றுக்கொண்டாயே....அதற்காக ஜலதர்ப்பணம் செய்கிறேன்".

**அம்மா**

அம்மா என்பது உடம்பல்ல. அம்மா என்பது இந்த உலகத்தை அரவணைத்துக் கொண்டிருக்கிற ஒரு உணர்ச்சி. அம்மா என்பது உலகத்திலுள்ள எல்லாப் பெண்களிடமும் இருக்கின்ற ஒரு சக்தி. அம்மா என்பது மழை பொழிய காத்திருக்கும் குளிர்மேகம். அம்மா என்பது உலகை குளிர்வித்துக் கொண்டிருக்கிற தாவர சக்தி. அம்மா என்பது உலகிலுள்ள அத்தனை உயிர்களையும் தாங்கிக் கொண்டிருக்கிற பூமியின் பலம்.

*பெற்ற தாயை வணங்குவோம்!*
*இறந்தாலும் வணங்குவோம்!*
*இருந்தாலும் வணங்குவோம்!*

# * மாத்ரு கயா மற்றும் சிராத்தம் செய்ய வேண்டியவை பற்றிய விபரங்கள்

ஸ்ரீ சரஸ்வதி நதி தீரத்தை – மாத்ரு கயா என்பார்கள். அதில் விசேஷமாக கருதப்படுவது "**பிந்து ஸரோவர்**" என்ற ஸரஸ்வதி நதி தீரத்தின் கட்டம்.

இந்த பிந்து ஸரோவர் குஜராத் மாநிலத்தில் ஸித்பூர் (Siddhpur) என்ற இடத்தில் உள்ளது. கீழ்க்கண்ட விலாசத்தில் ஹிந்தியிலோ / குஜராத்தியிலோ பேசி கர்மா செய்ய வேண்டிய தேதியையும் குறிப்பிட்டு டெலிபோனிலோ, தபால் மூலமாகவோ முன் ஏற்பாடுகள் செய்து கொள்ளலாம். அஹமதாபாத்திலிருந்து ஸித்பூர் 110 கி.மீ. (SH41) தொலைவில் உள்ளது. 3 மணி நேரம் பஸ்ஸில் பிரயாணம். அஹமதாபாத்திலிருந்து அபுரோடு போகும் ரயில்வண்டியில் ஏறி பாலன்பூரில் இறங்கி ஸித்பூர் போகலாம். ( பாலன்பூரிலிருந்து ஸித்பூர் 22 கிலோ மீட்டர் ). ஸித்பூரிலும் ரயில்நிலையம் உள்ளது. இங்கு பாசஞ்சர் ரயில் நிற்கும்.

SIDDHPUR CONTACT ADDRESS :

SHRI. VINU BHAI MODI (MANAGER) CELL : 092281 -10469
SIDHPUR SRI GOPALKRISHNA SAMASKRITHA MAHAVIDHYALAYA
NEAR THE BRIDGE
BINDU SAROVAR MARG. SIDHPUR - 384 151
( NORTH GUJARAT )
TELEPHONE : 02767- 223277

இவர்கள் மூலம் வைதீக கர்மாக்களுக்கான புரோகிதர்களை நியமனம் செய்து கொள்ளலாம். நேராகவும் போகலாம்.

1. சிராத்தம் அல்லது விதி ஒன்றுக்கு – இரண்டு 8 முழம் வேஷ்டி, அங்கவஸ்திரம்
2. சுமங்கலி பிரார்த்தனைக்காக – ஒரு 6 கெஜம் புடவை / வேஷ்டி, புடவை கொண்டு செல்ல வேண்டும்.

இதுதவிர பிராமணர்கள் சாப்பாடு & கட்டணம் ஆகியவை ரூ. 190ம் தட்சணை சுமார் ரூ. 1000/– வரையும் ( as on 2013 ) செலவாகலாம்.

- Provided by : **K. அருண்**
திருச்சிராப்பள்ளி

❋ ❋ ❋

# 24. கயா : மாத்ரு ஷோடஸி

## ஸ்லோகமும் அர்த்தமும்

அக்ஷய வடம் என்பது ஆல மரமாகும். இதன் நிழலில் நாம் பிண்ட பிரதானம் செய்வது மிகவும் விசேஷம். 64 பிண்டங்களில் அம்மாவிற்கு மட்டும் 16 பிண்டங்களை வைக்கிறோம். இதற்கு "மாத்ரு ஷோடஸி" என்றும் கூறுவர்.

இந்த 16 ஸ்லோகங்களைச் சொல்லி தனது தாயாருக்கு 16 பிண்ட பிரதானம செய்ய வேண்டும். அந்த ஸ்லோகங்களையும், அதன் அர்த்தங்களையும் இப்போது இங்கு பார்ப்போம்.

1. கர்பஸ்ய உத்கமநே துகம் விஷமே பூமி வர்த்மநி ।
   தஸ்ய நிஷ்க்ரமணார்தய மாத்ருபிண்டம் ததாம்யஹம் ।

   என்னைக் கர்ப்பத்தில் தாங்கிய படி, மேடு பள்ளங்களில் ஏறி இறங்கும்போது என் தாய் வேதனைகளை அனுபவித்தாளே, அதனால் எனக்கு விளைந்த பாவத்திற்குப் பரிகாரமாக இந்தப் பிண்டத்தைத் தருகின்றேன்.

2. மாஸி மாஸி க்ருதம் கஷ்டம் வேதநா ப்ரஸவே ததா ।
   தஸ்ய நிஷ்க்ரமணார்தய மாத்ருபிண்டம் ததாம்யஹம் ।

   ஒவ்வொரு மாதத்திலும், பிரசவத்தின் போதும் என் தாய்க்கு என்னால் ஏற்பட்ட வேதனைகளை உண்டாக்கிய பாவத்திற்குப் பரிகாரமாக இப்பிண்டத்தைத் தருகிறேன்.

3. பத்ப்யாம் ப்ரஜாயதே புத்ரோ ஜநந்யா; பரிவேதநம் ।
   தஸ்ய நிஷ்க்ரமணார்தய மாத்ருபிண்டம் ததாம்யஹம் ।

   என் தாயின் வயிற்றில் நான் கால்களால் உதைத்து உண்டாக்கிய வேதனை எனக்குச் சேர்த்த பாவமூட்டைக்குப் பரிகாரமாக இந்தப் பிண்டத்தைத் தருகின்றேன்.

4. ஸம்பூர்ணே தசமே மாஸி சாத்யந்தம் மாத்ருபீடநம் ।
   தஸ்ய நிஷ்க்ரமணார்தய மாத்ருபிண்டம் ததாம்யஹம் ।

   நிறை கர்ப்பிணியாக என் தாய் என்னைச் சுமந்தபோது அவளுக்கு உண்டான வேதனைகள் எனக்குச் சேர்த்த பாவத்தைப் போக்க இப்பிண்டத்தை தருகின்றேன்.

5. சைதில்யே ப்ரஸவே ப்ராப்தே மாத விந்ததி துஷ்க்ருதம் ।
   தஸ்ய நிஷ்க்ரமணார்தய மாத்ருபிண்டம் ததாம்யஹம் ।

   தாயின் கர்ப்ப காலத்தில் ஏற்பட்ட களைப்பு, மூர்ச்சை போன்றவற்றால் வந்த வேதனைகள் எனக்கு விளைவித்த பாவத்தைப் போக்க, பரிகாரமாக இப்பிண்டத்தை தருகிறேன்.

6. பிபேச்ச கடுத்ரவ்யாணி க்வாதாநி விவிதா நி ச ।
   தஸ்ய நிஷ்க்ரமணார்தய மாத்ருபிண்டம் ததாம்யஹம் ।

   என்னை வியாதிகள் தாக்காமல் இருக்க, கசப்பான மருந்துகளைச் சாப்பிட்டாளே என் தாய், அவளுக்கு நான் செய்த இந்தக் கொடுமைகளினால் எனக்கு உண்டான பாவத்தைப் போக்க, பரிகாரமாக இந்தப் பிண்டத்தை தருகின்றேன்.

7. அக்நிநா சோஷயேத்தேஹம் தரிராத்ரோ போஷணேந ।
   தஸ்ய நிஷ்க்ரமணார்தய மாத்ருபிண்டம் ததாம்யஹம் ।

   நான் பிறந்த போது மூன்று நாட்கள் அன்ன – ஆகாரமின்றி ஜடராக்னியின் ( பசி என்னும் பெரு நெருப்பு ) வெம்மையில் என் தாய் நொந்தாளே, அவளுக்கு என்னால் ஏற்பட்ட இந்த கொடுமை எனக்கு விளைவித்த பாவத்திற்குப் பரிகாரமாக இந்தப் பிண்டத்தை தருகின்றேன்.

8. ராத்ரௌ மூத்ரபுரீஷாப்யாம் க்லிந்ந; ஸ்யாந்மாத்ரு கர்பட ।
தஸ்ய நிஷ்க்ரமணார்தய மாத்ருபிண்டம் ததாம்யஹம் ।

இரவில் நான் என் தாயின் ஆடைகளை, மல மூத்திரத்தால் அசுத்தம் செய்த பாவத்திற்குப் பரிகாரமாக இந்தப் பிண்டத்தை தருகிறேன்.

9. க்ஷுதயா விஹ்வலே புத்ரே மாதா ஹ்யந்தம் ப்ரயச்ச தி ।
தஸ்ய நிஷ்க்ரமணார்தய மாத்ருபிண்டம் ததாம்யஹம் ।

எனது பசி, தாகம் தீர்க்க ( தனக்கு இல்லையென்றாலும் ) அவ்வப்போது உணவும் நீரும் எனக்குத் தந்தாளே என் தாய், அவளை வருத்திய பாவத்தை நீக்கப் பரிகாரமாக இப்பிண்டத்தைத் தருகிறேன்.

10. திவாராத்ரௌ ஸதா மாதா ததாதி நிர்பரம் ஸ்தநம் ।
தஸ்ய நிஷ்க்ரமணார்தய மாத்ருபிண்டம் ததாம்யஹம் ।

அல்லும், பகலும் என் தாயின் முலைப் பால் அருந்தும் போது அவளை நான் துன்புறுத்தினேனே, அதனால் விளைந்த பாவத்திற்குப் பரிகாரமாக இந்தப் பிண்டத்தைத் தருகிறேன்.

11. மாகே மாஸி நிதாகே சசிரேத்யந்த து கிதா ।
தஸ்ய நிஷ்க்ரமணார்தய மாத்ருபிண்டம் ததாம்யஹம் ।

மாக மாதத்தில் சிசிர ருதுவில் கோடையில் என்னைக் காக்கத் தன் உடலை வருத்திக் கொண்டாளே என் தாய், அவளுக்கு நான் தந்த இந்தத் துன்பங்களால் விளைந்த பாபங்களைப் போக்கிக் கொள்ளப் பரிகாரமாக இந்தப் பிண்டத்தைத் தருகின்றேன்.

12. புத்ரே வ்யாதி ஸமாயுக்தே மாதா ஹா க்ரந்த காரிணி ।
தஸ்ய நிஷ்க்ரமணார்தய மாத்ருபிண்டம் ததாம்யஹம் ।

மகன் நோய்வாய்ப்பட்டானே என்று கவலையால் வாடி இருந்தாளே என் தாய், அவளுக்கு விளைவித்த அந்த மனத்துயருக்குப் பரிகாரமாக இந்தப் பிண்டத்தைத் தருகின்றேன்.

13. யமத்வாரே மஹாகோரே மாதா சோசதி ஸந்ததம் ।
தஸ்ய நிஷ்க்ரமணார்தய மாத்ருபிண்டம் ததாம்யஹம் ।

யமலோகம் செல்லும் என் தாய் சோகமானவற்றை யெல்லாம் கடந்து செல்வதற்குத் துணை நிற்பதற்காக இந்தப் பிண்டத்தைத் தருகின்றேன்.

14. யாவத்புத்ரோ ந பவதி தாவந்மாதுச்ச சோசநம் ।
தஸ்ய நிஷ்க்ரமணார்தய மாத்ருபிண்டம் ததாம்யஹம் ।

என் தாய்க்கு நான் தந்த வேதனைகளுக்குப் பரிகாரமாக, அறிவுசால் புத்திரர்கள் அவர்களது தாய்க்குச் செய்வதை ஒப்ப, நானும் இப்பிண்டத்தைத் தருகின்றேன்.

15. ஸ்வல்ப ஆஹாரஸ்ய கரணீ யாவத் புத்ரச்ச பாலக ।
தஸ்ய நிஷ்க்ரமணார்தய மாத்ருபிண்டம் ததாம்யஹம் ।

நான் நன்கு வளர்வதற்காக, தனக்கு ஆகாரம் இல்லாமல் கூட கஷ்டப்பட்டாளே அந்தத் தாய்க்கு நான் தந்த வேதனைகளுக்குப் பரிகாரமாக இப்பிண்டத்தைத் தருகிறேன்.

16. காத்ரபங்கா பவேந்மாதா ம்ருத்யு ஏவ ந ஸம்சய ।
தஸ்ய நிஷ்க்ரமணார்தய மாத்ருபிண்டம் ததாம்யஹம் ।

கர்ப்பத்திலும், சிசுவாக இருந்த போதும் மரண வேதனையை ஒத்த பல கஷ்டங்களை நான் என் தாய்க்குத் தந்தமைக்குப் பரிகாரமாக இந்த பிண்டத்தைத் தருகின்றேன்.

* * *

## 25. அப்பாவாக வேண்டும்...

அப்பாவின்
வியர்வை விற்பனை
வீட்டுக்குத் தெரிவதில்லை....

அது அவருடைய
சட்டைகளை
சலவை செய்யும்
சோப்பு மட்டுமே
அறியும் ரகசியம்....

சட்டை மடிப்புகளுக்குள்
மறைந்துள்ளன
அவரின் தேய்மானங்கள்....

கடனைப் போர்த்திக்கொண்டு
அவர் இரவுகளில்
விழித்திருப்பது
உறங்கும் யாருக்கும்
தெரிவதில்லை....

வீட்டுக்குள் புன்னகைகளை
நிரப்ப அவர் சிந்தும்
கண்ணீர்த் துளிகள்
யாராலும் காண முடியாதது....

மகவுகளின்
எதிர்காலங்களுக்காக
தனது நிகழ் காலங்களை
புதிர் காலங்களாக்கிக் கொள்ளும்
அப்பாவின் கணக்கை
புரிந்து கொள்வது சிரமம்.
அதற்கு அப்பாவாக வேண்டும்....

- **V. விஷ்ணுகுமார்**
கிருஷ்ணகிரி

* * *

## 26. எப்போது பறிகொடுத்தேன் மகனே!

எதிர்படும்போது
ஹாய் டாட் என்கிறாய்
அலட்சியமாக.
உள்ளங்கை எலி
உருண்டு கொண்டே இருக்கிறது
உலக வலைகளில்.
காரும்
சிலிர்கிற செல்போனுமாக
தாமிர வார்த்தைகளிலேயே
தவழ்ந்து கொண்டிருக்கிறாய்.
உன் பிள்ளைகள்
உனைப் பார்த்து
ஒரு வாரமிருக்கும்.
தாத்தாவின்
பழங்கதைகளை
எத்தனை முறைதான்
கேட்பார்கள்?
காதல் மனைவியின்
பெயராவது ஞாபகமிருக்குமா
என்னவோ?
மூன்று வயதில்
அப்பா...அப்பா...
என்று எனை அழைத்துக்
கொண்டு போய்
என் ப்ரண்ட்ஸ் பாருப்பா
என்று
குருவிகளைக் காட்டிய உனை
எப்போது பறிகொடுத்தேன்
என்றே தெரியவில்லை மகனே...?

– ?

* * *

# 27. இப்படியும் ஒரு அப்பாவா?

ராதாகிருஷ்ணன் தன் மகன் சரவணனை உற்றுப் பார்த்தார். அவன் கண்கள் கலங்கி இருந்தன. அப்பாவைப் பார்க்க சங்கடப் பட்டான்.

ப்ளஸ் டூ-வில் 97 சதவிகிதம் எதிர்பார்த் திருந்தான். பிரச்சனை எதுவும் இல்லாமல், ஓப்பன் கோட்டாவில் மருத்துவம் படிக்க முடியும் என்று நினைத்திருந்தான். ஆனால் 3 சதவிகிதம் குறைவாகப் பெற்றதில், ஆடிப் போய்விட்டான். மருத்துவம் படிக்க முடியுமா, ஸீட் கிடைக்குமா என்கிற சந்தேகம் அவனுக்குள்!

ராதாகிருஷ்ணனுக்கும் வருத்தம்தான். ஆனால் அதை வெளிக்காட்டிக்கொள்ள முடியவில்லை. ஏற்கெனவே மன பாரத்தில் இருக்கும் மகனை மேலும் தண்டிப்பது போலாகும் என்று நினைத்தார்.

நன்றாகப் படிக்கக்கூடியவன்தான். பரீட்சைக்கும் சிறப்பாகத்தான் தயார் செய்துகொண்டு போயிருந்தான். ஆனாலும் எப்படியோ, மதிப்பெண்கள் குறைந்துவிட்டன.

“சரிப்பா! நான் இன்ஜினீயரிங் படிக்கிறேன். ஏரோநாட்டிக்கல் படிக்கிறேம்ப்பா..!”

ராதாகிருஷ்ணன் சிரித்தபடி தலையை ஆட்டினார். “இல்லைப்பா! நீ டாக்டருக்குப் படிக்கணும்கிறது இந்த கம்பவுண்டர் அப்பாவோட கனவு! உனக்குக் கண்டிப்பாக ஸீட் கிடைக்கும். அதுக்கு நான் கேரன்ட்டி! எம்.பி.பி.எஸ். படிக்கிறதுக்கு உன்னைத் தயார் படுத்திக்கோ!” என்றார் உறுதியான குரலில்.

மகனை டாக்டராக்கிப் பார்க்க வேண்டும் என்பது ராதாகிருஷ்ணனின் இருபது ஆண்டுக் கனவு. தன் துறையிலேயே மகனும் இருக்க வேண்டும் என்கிற எண்ணமோ, மகன் டாக்டராகி பங்களா, கார் என்று வசதியாக வாழ வேண்டும் என்கிற ஆசையோ அதற்குக் காரணம் அல்ல.

நாற்பதாண்டு கால காம்பவுண்டர் வேலைகளில் அவர் நிறையப் பார்த்து விட்டார். அரசாங்க சம்பளத்தைத் தாண்டி, கட்டு கட்டுவதற்கோ ஊசி போடுவதற்கோ அதிகமாக ஒரு ரூபாய்கூட வாங்கியது இல்லை. சைக்கிளில் தொடங்கிய அவரது காம்பவுண்டர் வாழ்க்கை, இப்போது மொபெட்டில் நிற்கிறது. ராதா சார் என்றால், சுற்றுப்பட்ட ஊர்களில் ரொம்ப மரியாதை. அவருக்குப் பங்களாவும் ஒன்றுதான்... தாழ்த்தப்பட்டவர்கள் வசிக்கும் குடிசைப் பகுதியும் ஒன்றுதான்.

அவர் கட்டுப்பாடாக இருந்தாலும், இந்தத் துறையில் நிறைய அத்து மீறல்களைப் பார்த்து விட்டார். ஆபரேஷன் தியேட்டரில் நோயாளியை சீரியஸான நிலையில் வைத்துக்கொண்டு பேரம் பேசிய டாக்டர்களைத் தெரியும். சுகப் பிரசவத்தை வேண்டுமென்றே தவிர்த்து, பணத்துக்காக சிசேரியன் நோக்கிப் பிரசவங்களைக் கொண்டு செல்லும் டாக்டர்களை அறிவார். கொஞ்சம்கூட மனசாட்சியோ, இரக்கமோ இன்றி ஐயாயிரம் கொடு, பத்தாயிரம் கொடு என்று ஏழைகளிடம் காசு பிடுங்கும் மருத்துவர்களையும் பார்த்திருக்கிறார். அந்த வெறுப்புதான், அவரை அப்படி ஒரு முடிவெடுக்கத் தூண்டிற்று. “என் மகனை

டாக்டருக்குப் படிக்க வைப்பேன். ஏழைகளுக்கு இலவசமாக வைத்தியம் செய்யச் சொல்வேன். **மருத்துவம் என்பது வியாபாரமல்ல,** சேவை என்பதை என் மகன் மூலமாகப் புரியவைப்பேன்!”

அவரின் அந்த சமூக சேவைக் கனவுக்கு தான் ஆபத்து வந்திருக்கிறது.

●

அந்த சுயநிதிக் கல்லூரியில் மருத்துவம் படிக்க ஸீட் கிடைத்ததை, காந்தியால் நம்ப முடியவில்ல.

பத்து நாட்கள் காணாமல் போய், திடுமென அட்மிஷன் கடிதத்தோடு வந்து நின்ற அப்பாவை வியப்பாகப் பார்த்தான்.

எப்படிப்பா...? இந்த காலேஜ்ல மெடிக்கல் படிக்கணும்னா, சுளையா 50 லட்சத்தை எடுத்து வைக்கணுமேப்பா...

சீச்சீ..! உன் அப்பா ஒரு பைசா கொடுக்கலை!

பின்னே எப்படி...?

இதோ பார் சரவணா, 40 வருஷம் கம்பவுண்டராக இருக்கேன். எத்தனை டாக்டர்களை எனக்குத் தெரியும்! இப்ப இருக்கிற சேர்மனோடு மூணு வருஷம் வேலை பார்த்திருக்கிறேன். அவர்கிட்டே நம்ம நிலைமையை எடுத்துச்சொன்னேன். உன் மார்க்கையும் சொன்னேன். கேப்பிடேஷன் ஃபீஸ் வேண்டாம், அட்மிஷன் ஃபீஸ் மட்டும் கட்டினா போதும்னுட்டாரு. அங்கே இங்கே அலைஞ்சு திரிஞ்சு, கிராமத்துல இருந்த நம்ம வீட்டை ஒரு நல்ல விலைக்கு வித்துட்டேன். சரி, ஸீட் கிடைச்சிடுச்சு! இனிமே, உன் கையிலதான் இருக்கு. கவனமா படிச்சு, நல்ல மார்க் எடுத்து, அப்பாவோட கனவை நனவாக்கணும் சரியா! உற்சாகமாகப் பேசிக் கொண்டே போனார் அப்பா.

அவர் சொன்னதை நம்ப முடியாமல் அவரையே பார்த்துக்கொண்டு இருந்தான் சரவணன்.

எம்.பி.பி.எஸ் சேர்ந்து இரண்டு மாதங்கள் ஓடின. கனவு மெய்ப்பட்டதில், சரவணனுக்கு ரொம்பவே சந்தோஷம். அப்பாவின் எதிர்பார்ப்பைப் பூர்த்தி செய்ய வேண்டும் என்பதில் தீர்மானமாக இருந்தான். பாடங்களில் கூடுதல் கவனம் செலுத்திப் படித்தான்.

சக மாணவர்கள் அனைவரும் நல்ல நெருக்கமாக இருந்தார்கள். கேப்பிடேஷன் பீஸ் இல்லாமல் ஸீட் கிடைத்தது என்பதை நம்ப மறுத்தார்கள்.

காந்தியோட அப்பா ஹெல்த் மினிஸ்டரில இருக்காரு. அவருக்காக அஞ்சு லட்சம் குறைச்சிட்டாரு சேர்மன், அவ்வளவுதான்! மத்தபடி இந்த காலேஜ்ல கேப்பிடேஷன் ஃபீஸ் இல்லாம ஸீட் கிடைக்கிறதுக்கு சான்ஸே இல்லை! என்று நண்பர்கள் அடித்துச் சொன்னார்கள்.

சரவணனுக்குக் குழப்பமாக இருந்தது. இவ்வளவு உறுதியாகச் சொல்கிறார்களே... பிறகு எப்படித் தனக்கு மட்டும் பணம் இல்லாமல் ஸீட் கிடைத்தது! சேர்மனோடு வேலை பார்த்தேன் என்றாரே, அப்பா! அதற்காக ஸீட் கொடுத்திருப்பாரா என்ன? அப்பா பொய் சொல்கிறாரா? பொய் இல்லை என்றால், அவ்வளவு பணம் அப்பாவுக்கு ஏது?

கல்லூரி நிர்வாகத்துக்கு வேண்டப்பட்டவர் களோடு பேசியபோது, 50 லட்சம் கொடுத்துதான் அப்பா ஸீட் வாங்கியிருக்கிறார் என்கிற உண்மை காந்திக்குத் தெரிந்தது.

இதை ஏன் தன்னிடம் மறைத்தார்? அத்தனை பணம் கொடுத்து ஸீட் வாங்கியது தெரிந்தால், மனசு கஷ்டப்படுவேன் என்றா? சரி, அவ்வளவு பணத்தை எப்படிப் புரட்டினார்?

அப்பாவிடம் எப்படி இதைக் கேட்பது என்று காந்தி யோசித்துக் கொண்டு இருக்க.... மூன்றாவது நாள் அப்பாவுக்குக் கடும் ஜுரம் வந்தது. எந்து மருந்துக்கும் மாத்திரைக்கும் ஜுரம் கட்டுப்பட மறுத்தது. ஆஸ்பத்திரியில் சேர்த்து, ஒரு வாரம் தாண்டியும் ஜுரம் நீடிக்கவும், காரணம் புரியாமல் சரவணன் கவலையோடு டாக்டர்களிடம் விசாரித்தான்.

கிட்னி டொனேட் பண்ணினா, ஒரு மாசம் ரெஸ்ட்ல இருக்கணும். அவர் ஒரு வாரம் கூட வீட்ல இல்லை. அதான், ஃபங்கஸ் அட்டாக் ஆகியிருக்கு!

துடிதுடித்துப் போனான் சரவணன்.

ஏம்ப்பா....?

படபடத்த மகனைப் பார்த்துப் புன்னகைத்தார் ராதாகிருஷ்ணன். அவன் கண்கள் கலங்கி இருந்ததைப் பார்த்து, உள்ளுக்குள் பதறினார். ஆறுதலாக அவனது கையைப் பிடித்துக் கொண்டார்.

நடுங்கும் குரலில் பேசினார்...

கடைசி வரைக்கும் உனக்குத் தெரியக் கூடாதுன்னு தான் நெனச்சேன். ரெண்டே மாசத்துல தெரிஞ்சுட்டுது. கிராமத்து வீட்டை வித்து, நாலு இடத்துல கடன் புரட்டியும் கூட நாற்பது லட்சம்தான் தேறிச்சு. அப்பதான் ஒரு பணக்காரருக்குக் கிட்னி வேணும்னு பேப்பர்ல விளம்பரம் படிச்சேன். உடனே ஓடினேன். என்னோட ப்ளட் குரூப்பும், கிட்னியும் அவருக்குப் பொருந்தும்னு டெஸ்ட் ரிப்போர்ட் சொல்லுச்சு. என் சூழ்நிலையை அந்தப் பணக்காரர்கிட்டே விளக்கமா எடுத்துச் சொன்னேன். பத்து லட்சம் கொடுத்தாரு.

அப்படி எதுக்குப்பா எனக்கு இந்த மெடிக்கல் ஸீட்? இதை ஏம்ப்பா என்கிட்ட சொல்லலே?

காரணமாதான்ப்பா! பணம் கொடுத்து ஸீட் வாங்கி டாக்டருக்கு படிச்சோம்கிற எண்ணம் உனக்குள்ளே பதியக் கூடாது.அப்படிப் பதிஞ்சா, போட்ட 50 லட்சத்தை எவ்வளவு சீக்கிரம் திருப்பி எடுக்கலாம்னு தான் மனசு அலைபாயும். என் லட்சியம், கனவு உனக்குத் தெரிஞ்சிருந்தாலும், நூறு கொடு, இருநூறு கொடுன்னு ஏழைங்ககிட்ட காசு பிடுங்கத் தோணும். அதை என்னால நினைச்சுக்கூடப் பார்க்க முடியலைப்பா! அதனாலதான் இந்த விஷயம் உனக்குத் தெரியவே கூடாதுன்னு நெனச்சேன். நான் குணமாகி வரேன், வரலே...இப்ப அது இல்லே பிரச்னை. நான் பணம் கொடுத்து ஸீட் வாங்கினேன்கிறதை இந்த நிமிஷத்தோடு மறந்துடு. உன் டாக்டர் படிப்பு ஏழை மக்களுக்குப் பயன்படணும். **இதை ஒரு சேவையாதான் நீ** நினைக்கணும். செய்வியாப்பா?

ராதாகிருஷ்ணன் மகனை நோக்கிக் கையை நீட்டினார். அப்பாவின் முகத்தையே பார்த்தான் சரவணன். **இப்படியும் ஒரு அப்பாவா?** அப்பா குறித்து அவனுக்குப் பெருமையாக இருந்தது.

நீட்டிய அவரது கையில் தன் கையைப் பதித்தான். தம்முடைய கனவை தன் அன்பு மகன் மெய்படச் செய்வான் என்ற நம்பிக்கையில் திருப்தியாகக் கண்களை மூடிக் கொண்டார் அப்பா.

– திருவாரூர் **பாபு**
விகடன் – 23.1.2008

❋ ❋ ❋

# 28. நீ நல்லா இருக்கணும்பா

இலேசாகப் பசியெடுக்க ஆரம்பித்தது கேசவனுக்கு. காலையில் பதினொரு மணிக்கு வீட்டை விட்டுக் கிளம்பியபோது சாப்பிட்டது. இப்போது மணி மூன்று. அட்மிஷன் முடிந்து இப்பொழுதுதான் ரூம் ஒதுக்கித் தந்திருக்கிறார்கள். தனக்குப் பசித்த போது அப்பாவுக்கும் பசிக்குமே என்ற எண்ணம் உரைத்தது.

பசிக்கிறதாப்பா? ஏதாவது வாங்கிட்டு வரட்டுமா?

இப்ப வேண்டாம்பா, காயத்ரியே காஃபி எடுத்துகிட்டு வரேன்னு சொல்லி இருக்கா.

இதற்கு கேசவன் பதில் சொல்லவில்லை. காஃபியின் மீது அப்பா உயிரையே வைத்திருக்கிறார் என்றும், கேன்டீன் காஃபி நிச்சயம் அவருக்கு பிடிக்காதென்றும் தெளிவாக அறிந்துதான் மருமகள் காயத்ரி இந்த ஏற்பாட்டைச் செய்திருந்தாள்.

அப்பா, அந்த நாளிலிருந்தே, தன் விருப்பத்துக்காக யாரையுமே வற்புறுத்த மாட்டார். ஆனால், அம்மாவுக்கு எப்படித்தான் தெரியுமோ தெரியாது! அப்பாவின் விருப்பங்களை இம்மியும் பிசகாமல் நிறைவேற்றி விடுவாள். அம்மா போன பிறகு அப்பா ரொம்பவும் ஒடுங்கித்தான் போய்விட்டார். என்னதான் காயத்ரி மகளைப் போல் கவனித்துக் கொண்டாலும் அம்மா இல்லாத வெறுமை அவரை தாக்கத்தான் செய்தது.

அது ஒரு பெரிய தனியார் கண் மருத்துவமனை. அப்பாவுக்கு கண்புரை வந்து இரண்டு கண்களிலும் பார்வை மங்கிவிட்டது. பாவம், கிட்டத்தட்ட ஏழு மாதங்களாக சிரமப்பட்டு வந்தாலும், வாயைத் திறந்து, ஆபரேஷனுக்கு ஏற்பாடு செய்றியா? என்று ஒரு வார்த்தை கூட கேட்கவில்லை. கேசவனும் என்னதான் செய்வான்? ஒற்றைச் சம்பளம். மாதாந்திர செலவே மென்னியைப் பிடிக்கும் வேளையில் கண் ஆபரேஷனுக்குப் பணம் ஒதுக்குவது பெரும்பாடாக இருந்தது.

நான்கு மாதங்களுக்கு முன்பு வாக்கிங் போனவர் பார்வை தெரியாமல் எங்கேயோ இடித்துக்கொண்டு வந்ததிலிருந்து, காயத்ரி வாக்கிங் போகக்கூடாது என்று தடைவிதித்து விட்டாள். 'கொட்டு கொட்டு' என்று மோட்டு வளையைப் பார்த்துக் கொண்டே உட்கார்ந்திருந்ததைப் பார்க்கவே பாவமாக இருந்தது. இந்தத் தடவை காயத்ரி மிகவும் சத்தம் போட்டவுடன் தான் ரோஷத்தில் கடன் ஏற்பாடு செய்தான்.

அவனது மன ஓட்டம் புரிந்தாற் போல அப்பா திடீரென்று கேட்டார்.

பணத்துக்கு எப்படி ஏற்பாடு செஞ்ச கேசவா?

என்னத்த பெரிய ஏற்பாடு? வழக்கம்போல கடன்தான். சொஸைட்டியில் லோன் போட்டதுல பத்தாயிரத்து சொச்சம் கிடைத்தது. ஹாஸ்பிடல் செலவு எட்டு ஒன்பது ஆயிடும்னு நினைக்கிறேன். மீதியை ஸ்வேதாவுக்கு ஸ்கூல் ஃபீஸ் கட்டிட வேண்டியதுதான் என்று சற்றே சலிப்புடன் பதிலளித்தவன், சட்டென்று நிறுத்திக் கொண்டான்.

அப்பா பதில் எதுவும் சொல்லவில்லை. ஆனால், மிகவும் வருத்தத்துடன் இருக்கிறார் என்பது மட்டும் புரிந்தது. எதுக்கு இந்தக் கதையெல்லாம் சொன்னேன்? ஏதோ ஏற்பாடு பண்ணினேன்னு சொல்லி இருக்கலாமே என்று எண்ணிக் கொண்டான்.

●

ஆபரேஷன் வெற்றிகரமாய் முடிந்து கண்ணைத் திறந்தபோது கேசவனும் காயத்ரியும் மிகுந்த பரபரப்புடன் நின்றிருந்தனர். மிகுந்த சந்தோஷத்துடன், கண் மிகவும் பளிச் என்று தெரிவதாக அப்பா கூறியபோது கேசவனுக்கு மிகுந்த சந்தோஷமும் நிம்மதியும் ஏற்பட்டது.

குழந்தைக் கையிலிருந்து பிடுங்கப்பட்ட பொம்மையை மீண்டும் அதன் கையில் கொடுத்தால் எப்படி சந்தோஷப்படும்? அப்படித்தான் இருந்தது அப்பாவைப் பார்க்க. அவர் இவ்வளவு சந்தோஷப்பட்டு, முகமெல்லாம் பூரிப்பாய் இருந்ததை இதுவரை கேசவன் பார்த்தது இல்லை. அப்பாவை பலகோணங்களில் அவன் பார்த்திருக்கிறான்; அமைதி, கவலை, துக்கம், பொறுப்பு, வேதனை! எல்லாம் இப்படித்தான். ஆனால், இன்றுள்ள சந்தோஷத்தைப் பார்க்கும் போது, இந்த ஆபரேஷனை இன்னும் முன்னாலேயே ஏற்பாடு செய்திருக்கணும் என்று தோன்றியது கேசவனுக்கு.

அன்றைக்கு சாயங்காலமே வீட்டுக்குப் போகலாம் என்று சொல்லி விட்டார்கள். டிஸ்சார்ஜ் நியதிகள் முடிவதற்காக காத்திருந்தபோதுதான் அது நடந்தது!

அப்பா கட்டிலை விட்டு இறங்கி, தட்டுத் தடுமாறி கேசவன் உட்கார்ந்திருந்த இடத்துக்கு வந்துவிட்டார்.

என்னப்பா வேணும்? நீங்க ஏன் இறங்கினீங்க? என்று கேசவன் பதறினான். அதற்குள் அவர் அருகில் வந்து அவன் கைகள் இரண்டையும் பிடித்துக் கொண்டார்.

பார்வை இருந்து இழந்தவங்களுக்கு தான், அது திரும்ப கிடைக்கிறது எவ்வளவு அருமைன்னு தெரியும். நிறைஞ்ச மனசோட சொல்றேன், **நீ நல்லா இருக்கணும்** என்று அப்பா தழுதழுத்த குரலில் சொன்னார்.

ஆடிப் போய்விட்டான் கேசவன்.

ஐயோ? என்னப்பா இது? ஏன் இப்படியெல்லாம் பேசறீங்க? இது எங்க கடமைப்பா! என்று கூறி அப்பாவை ஆசுவாசப்படுத்தினான்.

பில் கவுண்டருக்குப் பக்கத்தில் ஒரு போர்டு வைக்கப்பட்டிருந்தது.

நீங்கள் ஆயிரம் ரூபாய் நன்கொடை கொடுத்தால் உங்கள் பெயரால் ஒரு முதியவருக்கு இலவசமாக கண்புரை ஆபரேஷன் செய்யப்படும்.

சொஸைட்டி கடன், ஸ்வேதாவின் ஃபீஸ் எல்லாவற்றையும் மறந்து, மிகவும் தெளிவான மனத்துடன், கேசவன் விளம்பரத்தின் அருகில் இருந்த கவுண்டரில் ஆயிரம் ரூபாய் பணத்தைக் கட்டிவிட்டு வந்தான்.

**- உமா சுந்தர்**

மங்கையர் மலர் - அக்டோபர் 2008

* * *

# 29. நீ கற்றுக் கொடுக்கிறாய்...உறவுகள் இதுதானென்று

வசதியாகத்தான் இருக்கிறது
மகனே....
நீ என்னைக் கொண்டு வந்து
சேர்த்த
முதியோர் இல்லம்.

பொறுப்பாய் என்னை
ஒப்படைத்துவிட்டுச்
சலனமின்றி நீ
வெளியேறிய போது,
முன்பு நானும் இதுபோல்
உன்னை வகுப்பில்
விட்டு விட்டு
என் முதுகுக்குப் பின்னால்
நீ கதறக் கதறக்
கண்ணீரை மறைத்தபடி
புறப்பட்ட காட்சி
ஞாபகத்தில் எழுகிறது!

முதல் தரமிக்க
இந்த இல்லத்தை
தேடித் திரிந்து
நீ தேர்ந்தெடுத்ததை
அறிகையில்....
அன்று உனக்காக நானும்
பொருத்தமான பள்ளி
எதுவென்று.....
ஓடி அலைந்ததை
ஒப்பீடு செய்கிறேன்.

இதுவரையில்
ஒருமுறையேனும்
என் முகம் பார்க்க
நீ வராமல் போனாலும்,
என் பராமரிப்பிற்கான
மாதத் தொகையை
மறக்காமல் அனுப்பி
வைப்பதற்காக
மகிழ்கிறேன்!

நீ விடுதியில் தங்கிப்
படித்த காலத்தில்
உன்னைப் பார்க்க
ஆவல் இருந்தாலும்,
படிப்பை நினைத்து
உன்னைச் சந்திக்க மறுத்ததன்
எதிர்வினையே
இதுவென்று
இப்போது அறிகிறேன்!

இளம் வயதினில்
நீ சிறுகச் சிறுகச்
சேமித்த அனுபவத்தை
என் முதுமையில்
மொத்தமாக எனக்கே
செலவு செய்கிறாய்.

ஆயினும்....
உனக்கும் எனக்கும்
ஒரு சிறு வேறுபாடு.

நான் கற்றுக் கொடுத்தேன்
உனக்கு......
வாழ்க்கை இதுதானென்று!
**நீ கற்றுக் கொடுக்கிறாய்**
எனக்கு.....
**உறவுகள் இதுதானென்று...!**

- **G. ஜெயலட்சுமி** (க.திரு)
சென்னை

* * *

## 30. நிழலும் நிஜமும்

நிழற்படத்துக்கு வலிக்காமல்
சுத்தமாய் துடைத்து
பொட்டிட்டு
பூ வைத்து
அலங்கார விளக்குகளை
அழகழகாய் எரியவிட்டு
அவருக்குப் பிடித்த
அனைத்துப் பண்டங்களையும்
அடுக்கடுக்காய் பரப்பி
தீப தூபம் காட்டி
அவரது ஆன்மாவை
சாந்தியடையச் செய்வதாய்
நினைத்து
வழிபட்டான் தந்தையை
உயிரோடிருக்கும் போது
ஒருவேளை சோறு போட
யோசித்த அன்பு மகன்!

– ?

* * *

## 31. தவமாய் தவமிருந்து

தவமிருந்து
என்னைப் பெற்றதையும்
கைப் பிடித்து
பள்ளிக்கு அழைத்துச் சென்றதையும்
தேர்த் திருவிழாவில்
கேட்டவற்றை வாங்கித் தந்ததையும்
பால்யம் மாறினாலும்
சிநேகிதனாய் அரவணைத்ததையும்
இலக்கியம் முதல்
விளையாட்டு, காதல் வரை
வரம்பு மீறாமல் பேசி மகிழ்ந்ததையும்
நினைத்து, நினைத்து அழ
ஏராளமிருந்தும்,
பாழாய் போன நாகரிகம் கருதி
பொங்கி வரும் அழுகையை
விசும்பல்களுக்கிடையே
அடக்கினேன்..
அப்பாவின் சடலம் பார்த்தபடி..!

**- இரா. கமலக்கண்ணன்**
சித்தோடு

* * *

# 32. அப்பா என்னை மன்னிப்பீர்களா?

1. ஒவ்வொரு அமாவாசையன்று திதி கொடுக்கும் போதெல்லாம் மனம் கூசுகின்றது. வெட்கத்தால் தலை குனிகிறேன். காரணம், தங்களின் முதுமைக் காலத்தில் என்னுடைய கடமையை மிகவும் சரியாகச் செய்ய வில்லையோ என்ற குற்ற உணர்ச்சி தான்.

2. தங்களுக்கு வசதி செய்து கொடுத்தேன், ஆஸ்பத்திரி செலவுகளை ஏற்றேன், நோய் களுக்குப் பணம் செலவழிக்கத் தயங்கவில்லை. ஆனால் சற்றே கூடுதல் கனிவுடன் செய்திருக்கலாமோ என்று மனம் குறுகுறுக்கின்றது. இப்போது ஆதங்கமாக உள்ளதே!

3. தாங்கள் ஆசைப்பட்டவைகளை கடமையென வாங்கிக் கொடுத்தேன். சற்றே கூடுதல் மகிழ்ச்சியுடன் செய்திருக்கலாமோ என இப்போது மனம் நினைக்கின்றதே!

4. இறுதி நாட்களில் உங்களின் பழைய நண்பர்களைக் காணவேண்டும், பேச வேண்டும், என எண்ணி என்னை அவர்களுக்குக் கடிதம் எழுதச் சொன்னீர்கள். " உங்களுக்கு வேறு வேலையே இல்லையா, அமைதியாக இருங்கள்" எனச் சொல்லி தங்களது ஆசையை அலட்சியப் படுத்தினேன். தங்கள் மனம் என்ன பாடுபட்டிருக்கும்? எவ்வளவு கேவலமாக என்னை நினைத்திருப்பீர்கள்? அதை எண்ணி இப்போது வெட்கப்படுகின்றேனே!

5. ஒவ்வொரு தடவை தபால்காரர் வரும்போது "எனக்கு ஏதாவது லெட்டர் வந்திருக்கின்றதா என்று பார்" என்று கேட்ட போதெல்லாம், "இந்த வயதில் உங்களுக்கு யார் கடிதம் எழுதப் போகிறார்கள்" என்று நகையாடினேன். உங்களுடைய உணர்ச்சிகளைப் புரிந்து கொள்ளாமல், அப்படி ஏளனமாகக் கூறியது எவ்வளவு மடமையென்று இப்போது நினைத்துப் பார்க்கின்றேனே வேதனையோடு!

6. உங்கள் பழைய காலத்து நிகழ்ச்சிகளை அவ்வப்போது நினைவு கூறும்போது, "உங்களுக்கு வேறு வேலையே இல்லையா, பழைய புராணங்களைக் கூறி எங்களை போரடிப்பதைத் தவிர" என்று கூறி உதாசீனப் படுத்தியதை நினைத்துப் பார்த்து என் தவறை இப்போது உணர்கிறேனே!

7. சாப்பிடும்போது கீழே சிந்தியதைப் பார்த்து, " என்ன சிறு குழந்தைபோல சோற்றை இறைக்கின்றீர்களே என நகையாடினேனே! வயதானவர் களையும் சிறுகுழந்தை போல்

பேணவேண்டும் என ஏன் அன்றைக்கு எனக்குத் தோன்றவில்லை! மன முதிர்ச்சி இல்லாத காரணத்திலா! அல்லது அலட்சியமா! சற்றே நாவடக்கத்துடன் நடந்து கொண்டிருக்கலாமோ - மனம் இப்போது வருத்தப்படுகின்றதே!

8. தாங்கள் சாப்பிட்ட தட்டையும், டம்ளரையும் இடதுகையால் தூக்கி வைத்த அநாகரிகத்தை நினைத்துப் பார்த்தால் எனக்கே அவமானமாக இருக்கின்றது. நானா இப்படிச் செய்தேன் என இப்போது வருத்தப் படுகிறேனே!

9. முதுகு அரிக்கின்றது சொரிந்து விடப்பா என்றீர்கள். சொரிந்து விட்டு கை அழுக்காகி விட்டது என்று ஒவ்வொரு தடவையும் கையை சோப்பு போட்டு கழுவியதை இன்று நினைத்தால் என்மேல் எனக்கே இப்போது கோபம் வருகிறதே!

10. முதுமையின் காரணமாக மறதி ஏற்படுவது சகஜம் என மறந்தேன். ஒரே கேள்வியை திருப்பித் திருப்பி பல தடவைக் கேட்டபோது இன்னும் சற்றே கூடுதல் பொறுமையாக பதில் அளித்திருக்கலாமோ என்று இப்போது தோன்றுகின்றதே!

11. நடு இரவில் தாங்கள் இருமும்போது இடையூறாக உள்ளதே என்று சலித்துக் கொண்டதைத் தவறு என்று அப்போது தோன்றவில்லையே! தூக்கத்தை விட அப்பா பெரிது என்று இப்போது நினைக்கின்றேனே!

12. வீட்டிலே வேறு யாரும் இல்லாத ஒரு நாள், கோயிலுக்குச் செல்ல விரும்பிய நான் வீட்டினுள்ளே உங்களைத் தனியே விட்டுவிட்டு வெளியே பூட்டி விட்டுச் சென்றேனே! கோயிலினுள்ளே இருக்கும் தெய்வம் கூட மன்னித்திருக்காது என்னை! தங்கள் மனம் என்ன வேதனைப்பட்டிருக்கும் என இப்போது உணர்கின்றேனே!

13. இயலாமை காரணமாக தாங்கள் படுக்கையிலேயே அசுத்தம் செய்த போது சுத்தம் செய்தேன். அதிகம் அலுத்துக் கொள்ளாமல் செய்திருக்க லாமோ என்று இப்போது தோன்றுகிறதே!

14. நடக்க முடியாத நிலையில் இரவில் அடிக்கடி பாத்ரூம் செல்ல என்னை அழைத்தபோது, தூக்கம் கலைகிறதே என்று கோபப்பட்டு அலுத்துக் கொண்டேனே - இன்னும் சற்று பொறுமையாக என்னுடைய பணிவிடைகளை செய்திருக்கலாமோ என இப்போது தோன்றுகின்றதே!

15. தங்களது சிறுநீர் குடுவையை சுத்தம் செய்யும்போது அசிங்கம் என்று சற்றும் எண்ணாமல் கூடுதல் பொறுமையாக முகம் சுளிக்காமல் செய்திருக்கலாமோ என்று இப்போது தோன்றுகின்றதே!

16. தங்களது இறுதி ஊர்வலத்தில் "எனக்கு மன உறுதி அதிகம். ஆண்கள் அழக்கூடாது. இறப்பு என்னைப் பாதிக்காது, என் மனம் பக்குவப்பட்டது" என இறுமாப்புடன் இருந்தேனே! வெட்கத்தை விட்டு வாய் விட்டு அழுதிருந்தால் இன்று எனது மனப்பாரம் குறைந்திருக்குமோ என்னவோ! தாமதமான ஞானோதயமோ! இப்போது ஆதங்கப் படுகின்றேனே!

17. கொள்ளி வைத்துவிட்டு தலை மொட்டை அடிக்க வேண்டும் என்று உறவினர் வலியுறுத்திய போது, அந்த சம்பிரதாயங்கள் எல்லாம் மிக போலியானது, அவசியம் இல்லாதவை என்று அலட்சியப் படுத்தினேனே, பிறகு மற்றொரு சமயம் எனக்கு உடல்நிலை சரியில்லாத சமயம் பிரார்த்தனை என்ற பெயரில் முடி இறக்கினேனே... அப்போது உணர்ந்தேனே அதற்குச் சரியான பரிகாரம் இதுதானோ என்று. அப்பாவை விட தலைமுடிதான் பெரிது என மடத்தனமாக எண்ணியதை இப்போது நினைத்து வருத்தப்படுகிறேனே!

18. எனக்கும் வயதாகிக் கொண்டு வருகின்றதே. என்னுடைய குழந்தைகளும் நான் செய்ததைப் போலவே திருப்பிச் செய்வார்களோ என்பதை எண்ணும்போது சற்றே பயமாகத்தான் உள்ளது. கூடுதலாக அவர்கள் பணிவிடை செய்வார்கள் என எதிர்பார்ப்பதில் தான் என்ன நியாயம்? முன்வினை தானே பின்னே விளையும். இது தொடர்கதை தானோ? தினை விதைத்தால் தினையைத்தானே அறுக்க முடியும். அந்த தத்துவத்தை இப்போது நான் உணர்கின்றேனே!

19. கண்ணை மூடும்போது என்னுடைய கடமையைக் கூடுதல் பொறுப்புடன் செய்யாத என்னைப்பற்றி நினைத்தீர்களோ? சரியாக வளர்க்கவில்லையோ என கவலைப் பட்டீர்களோ! நிச்சயம் சபித்திருக்க மாட்டீர்கள்! ஆனால் என்மனம் கலங்குகிறதே !

20. பணம் செலவழித்தேன், கடமையைச் செய்துவிட்டேன் என நினைத்தேன். கூடுதலாக அன்பாக, ஆதரவாக, கனிவாக, கரிசனமாக பணிவிடை செய்திருக்கலாமோ என இப்போது தோன்றுகிறதே! பாவ மன்னிப்பாக இதை ஏற்பீர்களா! என்னை மன்னிப்பீர்களா! இனிமேலாவது அமாவாசையில் திதி கொடுக்கும்போது என் மனம் சஞ்சலப்படாமல் இருக்க ஆசி கூறுவீர்களா!

**- சிதம்பர நாதன்**

* * *

# 33. மா மரமும், நாமும்

ஒரு பெரிய மா மரம் இருந்தது. ஒரு சிறுவன் அந்த மரத்தடியில் விளையாடுவான்; ஓய்வெடுப்பான்; மகிழ்ந்து மேலே ஏறுவான்.

பையன் பெரியவனான். ஒருநாள் அந்த மரத்தடியில் வருத்தமாக வந்து நின்றான். என்னோடு விளையாடு என்றது மரம். பையனோ, உன்னோடு நான் விளையாட முடியாது. பொம்மைகள் வேண்டும் ; வாங்கப் பணம் வேண்டும் என்றான். மரமோ, என் பழங்களை எடுத்துச் சென்று விற்றுப் பணம் பெற்றுக் கொள் என்றது. அப்படியே பையனும் செய்தான்.

சிலகாலம் சென்றது. மீண்டும் மரத்திடம் வந்தான் அந்தப் பையன்; இல்லை வாலிபன்! விளையாட அழைத்த மரத்திடம், எனக்கு குடும்பம் உள்ளது. தங்குவதற்கு வீடு தேவை. உதவுவாயா? என்றான். என் கிளைகளை வெட்டி எடுத்து வீடு கட்டிக் கொள் என்று அன்புடன் கூறியது மா மரம். வீடும் கட்டிக் கொண்டான் அந்த வாலிபன்.

நாட்கள் கடந்தன. மீண்டும் மரத்திடம் வந்தான் அந்த வயதானவன். மரத்திடம், ஓய்வெடுக்க விரும்புகிறேன். கட்டில் தருவாயா? என்றான். என் அடிப்பாகத்தை வெட்டிக் கட்டில் செய்து ஓய்வெடுத்துக் கொள் என்று உதவியது மரம்.

வருடங்கள் கடந்தன. மிகவும் களைப்பாக வந்தார் அந்த முதியவர், மரத்தின் அருகே. என்னிடம் வாடிக்கிடக்கும் வேரைத் தவிர வேறொன்றுமில்லையே! என்று கண்ணீர் வடித்தது மா மரம். எனக்கும் அமைதியாகப் படுக்க ஓர் இடம்தான் தேவை, என்றார் முதியவர். அடிவேரின் மத்தியில் அமைதியாகப் படுத்தார். மரமோ ஆனந்தக் கண்ணீர் வடித்தது.

இதுதான் நம் கதையும். மரம்தான் நமது பெற்றோர். நாம் இளையவராக இருக்கையில் அம்மா, அப்பாவுடன் விளையாடி மகிழ்கிறோம். வளர்ந்ததும் அவர்களை விட்டு விலகுகிறோம். நமக்குத் தேவை என்று வரும்போது நெருங்குகிறோம். ஆனால் பெற்றோர்களோ என்றும் அன்பாக இருக்கிறார்கள்; நம்மை மகிழ்விக்க என்றும் தயாராக இருக்கிறார்கள்! பையன் மா மரத்திடம் கொடுமையாக இருந்தான் என்று நினைக்கிறோமே! நாம்............நம் பெற்றோரிடம் எப்படி இருக்கிறோம்!

Provided by: **மணிவாசகம்**

* * *

# 34. அவர்கள் யாசிப்பது மனித உறவை

ஈரோட்டில் உள்ள முதியோர் காப்பகம் ஒன்றுக்குப் பார்வையாளராகச் சென்றிருந்தேன். நகரை விலக்கிய சிறிய கிராமம் ஒன்றின் மரங்கள் அடர்ந்த பகுதியில் தனித்திருந்தது. உள்ளே நுழைகையில் இலைகளுக்குள் ஒளிந்து கொண்டு பறவைகள் சப்தமிடுகின்றன. ஐம்பதுக்கும் மேற்பட்ட முதியவர்கள் தங்கி இருந்தார்கள். காப்பகத்துக்குள் நுழைந்தபோது, அது மாலை பிரார்த்தனை நேரம்.

பனிச் சிற்பங்களைப் போல உறைந்துபோன நிசப்தத்தில் முதியவர்கள் வணங்கியபடி நின்றிருந்தனர். உதடுகள்கூட அசைய வில்லை. பிரார்த்தனைப் பாடலைப் பாடும் பெண்ணின் குரல் நடுங்கிக்கொண்டே இருந்தது. பிரார்த்தனை முடிந்து வெளியேறும் பலரது கண்கள் கசிந்திருந்தன. அழுதிருக்கிறார்கள். அதைத் துடைத்துக் கொள்ளக் கூட மனதற்று நெற்றி நிறைய திருநீறும் வேதனையை அடக்கிய முகமுமாக அவர்கள் மரத்தடிக்கு வந்து சேர்ந்தார்கள்.

அநேகமாக அவர்களைத் தேடிப் பார்வையாளர்கள் வருவது வெகு அபூர்வம் என்பது புரிந்தது. குழந்தைகள் ஒருவரையொருவர் இடித்துக் கொண்டு உட்காருவதுபோல நெருக்கமாக உட்கார்ந்திருந்தார்கள். ஒவ்வொருவராக அறிமுகப்படுத்திக் கொண்டபோது, ஒன்றிரண்டு முகங்களில் வயதை மீறி கூச்சமும், வெட்கமும் கலந்து வெளிப்பட்டது.

என்ன பேசுவது என்று தெரியவில்லை. மாலை வெயில் மரங்களுக்கிடையில் கசிந்துகொண்டு இருந்தது. இமைக்காத கண்களும், சலனமுற்ற முகமுமாக என் முன் அமர்ந்திருப்பவர்களைப் பார்த்தேன். பெரும்பான்மையான முதியவர்களின் கண்கள் உலர்ந்து போயிருந்தன.

பேச்சை எங்கிருந்து துவங்குவது என்று யாருக்கும் தெரியவில்லை. எதையோ மறந்துபோனவரைப் போல ஒரு முதியவர் தன் அறைக்குள் சென்று, கண்ணில் விடும் சொட்டு மருந்தை எடுத்து வந்து இன்னொரு வயோதிகரிடம் தந்தார். அவரும் பாட்டிலைத் திறந்து சொட்டு மருந்து போட்டுவிட்டார்.

எங்கிருந்தோ ஒரு மயில் அகவும் ஓசை கேட்டது. முதல்முறையாக ஒரு பாட்டி லேசான புன்னகையோடு சொன்னார்..... ‘‘மயிலு சார்!’’ மற்றவர்களும் தலையாட்டிக் கொண்டார்கள். ஆனால், பேச்சு துளிர்க்கவே இல்லை. தண்ணீர் வற்றிப்போன கிணற்றைப் போல சொற்களும் மனதில் வற்றிப் போய் விட்டனவா?

மரத்தடியில் அமர்ந்திருந்த பெண்களில் ஒரேயொருவர் மட்டும் நெற்றியில் ஒரு ரூபாய் நாணயமளவு குங்குமம் வைத்திருந்தார். அவர் யாரையும் நிமிர்ந்து பார்க்காமல் குனிந்தபடியே இருந்தார். அவரது பெயரைக் கேட்டபோதும் தரை பார்த்தபடியே பதில் சொன்னார்.

நரைத்த தலையும் சாந்தமான முகமுமாயிருந்த ஒரு பெண்மணி மட்டும் எழுந்து நின்று, பாதி மலையாளம் கலந்த தமிழில் சொன்னார்..... “நான் சர்க்கஸில் வேலை செய்தவளாக்கும். எங்க சர்க்கஸ் பல நாடுகள் சுற்றி வந்திருக்கு. எந்தெந்த தேசம் என்று பெயர் மறந்து போச்சு... பார் விளையாடுறதுல நான் எக்ஸ்பர்ட். பன்னிரண்டு வயதிலே சர்க்கஸ்ல சேர்ந்தது. இருபத்தஞ்சு வருசம் அதில இருந்தாச்சி.....இப்பவும் கயிற்றிலே நல்லா ஆடுவேன். ஆனா, வயசாகி தலை நரைச்சவள் பார் ஆடுறதை யார் பாக்கிறது சொல்லுங்கோ...அதான் என்னை வீட்டுக்கு அனுப்பி வச்சிட்டாங்க. சர்க்கஸ்ல இருந்துட்டதால சொந்தம் பந்தம் எல்லாம் விட்டுப் போயாச்சு. அதுனால, வெளியே வந்தப்புறம் எங்கே போறதுன்னு தெரியலை. சர்க்கஸ் கயிற்றிலே ஊஞ்சலாடினப்பக்கூட பயமா இல்லை. ஆனா, அங்கிருந்து வெளியே வந்தப்புறம்தான் பயம்னா என்னன்னு தெரிய ஆரம்பிச்சது. யார் வீட்லயும் இருக்க முடியலை. எங்கே போறதுன்னும் தெரியலை. அதான் இங்கே வந்து சேர்ந்துட்டேன். சர்க்கஸ்ல ட்ரெயினிங் எடுத்தவளாக்கும்! ஒரு நோய்நொடி கிடையாது. ஆயிரம் தடவை கைத் தட்டு வாங்கியிருக்கிறேன். இப்போ எனக்குன்னு யாருமில்லை. தனியா என் கையை நானே தட்டிக்கிட வேண்டியதுதான்'' பேச்சைப் பாதியில் நிறுத்திக்கொண்டு, அமைதியாக விட்டார். மிருகங்களுக்குக்கூட அடைந்து கிடைக்க ஒரு கூண்டு இருக்கிறது. ஆனால், சர்க்கஸில் வேலை செய்து வெளியேற்றப்பட்டவளுக்கு போக்கிடமில்லை என்பது மனதை உறுத்துவதாக இருந்தது. இருட்டு ஒரு புகையைப் போல எங்கும் பரவத் துவங்கியது. அவர்கள் மரத்தடியிலிருந்து கலைந்து போகத் துவங்கினார்கள்.

காப்பகத்தின் நிர்வாகி அனைவரையும் சாப்பிட அழைத்தார். நிழல்களைப் போல அவர்கள் நடந்து போகிறார்கள். உணவருந்தும் சப்தம் கூட கேட்கவில்லை. பின் மெதுவாக உறங்குவதற்காகத் திரும்புகிறார்கள்.

உள்ளே வரிசையாக படுக்கைகள் போடப்பட்டு இருந்தன. சிறிய மரக் கட்டில், அதன் ஓரத்தில் சிறிய மர அலமாரி. அதில் துவைத்து மடித்துவைத்த துணிகள். ஒரு மெழுகுவர்த்தி, தீப்பெட்டி, கொசுவத்திச் சுருள். நாலைந்து பழைய கடிதங்கள். அழுகைக் கறை படிந்த தலையணைகள், விட்டத்தை வெறித்துப் பார்த்தபடி அவரவர் கட்டிலில் ஏறிப் படுத்துக்கொண்டார்கள்.

இன்றைய நாள் முடியப்போகிறது. ஒவ்வொரு நாளையும் அவர்கள் மனதுக்குள்ளாகக் கணக்கெடுத்துக் கொள்கிறார்கள். உறக்கமும் விழிப்புமற்ற ஒரு சயன நிலையில் அவர்கள் கண்கள் சொருகியிருக்கின்றன.

ப்ளாக்போர்டில் ஈரத் துணியை வைத்து அழித்தபடியே நிர்வாகி சில பெயர்களை எழுதுகிறார். அது என்னவென்று கேட்டபோது, "ஒவ்வொரு நாளும் சிலர் மௌன விரதம் இருக்க வேண்டும் என்பது எழுதப்படாத விதி. அதன்படி, நாளைக்கு மௌன விரதம் இருப்பவர்களின் பெயர்கள் இவை " என்று சொன்னார்.

ஏற்கனவே மௌனத்தின் தாழிக்குள் வீழ்ந்து கிடப்பவர்கள்தானே, இனி எதற்காக தனியே ஒரு நாள் மௌன விரதம் என்று கேட்க நினைத்தேன். பார்த்துக் கொண்டே இருந்தபோது நாள் முடிந்து இரவின் நீண்ட பொழுதுக்குள் யாவரும் ஒடுங்கிக் கொண்டு விட்டார்கள். உறக்கத்தில் அவர்களுக்குக் கனவுகள் வருமா? நிச்சயமாகத் தெரியவில்லை.

பிரார்த்தனைகளும் மௌன விரதமும் அவர்களுக்கு என்ன தந்துவிட முடியும்? **அவர்கள் யாசிப்பது** சாப்பாட்டை அல்ல, **மனித உறவை!** அதுவும் ஒரே ஒரு ஆள் தன்னைப் புரிந்தவர் இருந்தால்கூடப் போதும், சமாதானமாகி விடுவார்கள். ஆனால், அதுகூடச் சாத்தியமாவதில்லை.

ஒரு மனிதனைப் புறக்கணிப்பதும், தனிமைப் படுத்திவிடுவதும்தான் அவனுக்குத் தரும் மாபெரும் தண்டனை.

– **எஸ். ராமகிருஷ்ணன்**

❋ ❋ ❋

## *கண்ணா....*

அம்மா : மகனே, எனக்குத் திடீரென கண்பார்வை போய்விட்டால், நீ என்ன செய்வாய்....சொல் பார்க்கலாம்.

மகன் : உடனே உங்களை நல்ல கண் ஆஸ்பத்திரிக்கு அழைத்துச் சென்று சிகிச்சை அளிப்பேன் அம்மா.

அம்மா : அங்கே எனக்கு கண் பார்வையை மீட்டுத்தர முடியாமல் போனால் என்ன செய்வாய்?

மகன் : உலகிலேயே மிகச்சிறந்த கண் ஆஸ்பத்திரிக்கு உங்களை அழைத்துச் செல்வேன்.

அம்மா : அவர்கள் சிகிச்சையும் பலன் தராவிட்டால் என்ன செய்வாய்?

மகன் : ஆயுள் முழுவதும் என்னுடன் உங்களை வைத்துக்கொண்டு கண்ணுக்குக் கண்ணாகக் காப்பாற்றுவேன்!

அம்மா : மிக்க நன்றி மகனே!

மகன் : அம்மா....எனக்குக் கண்பார்வை திடீரென பறிபோனால் நீங்கள் என்ன செய்வீர்கள்... சொல்லுங்கள்.

அம்மா : என் கண்களை உனக்கு உடனே தருவேன் கண்ணா...!

- Provided by : **N. ரகோத்தமன்**

# 35. அப்பாவின் சோகங்கள் வெளிவருவதில்லை

1. முன்சீப் தேர்விற்கு வந்த ஒரு பெண்ணிடம் "நீங்கள் தேர்வு செய்யப்பட்டு முன்சீப் பதவி ஏற்கிறீர்கள் என்று வைத்துக் கொள்வோம். நீதிமன்றத்தில் அமர்கிறீர்கள். ஒரு பெரிய வழக்கறிஞர், கப்பல் போல ஒரு காரில் வருகிறார். சுற்றி அவருடைய இளையோர் படை. உங்களுக்குத் தெரியும் உங்கள் ஒரு மாதச் சம்பளத்தைவிட ஒரே நாளில் அவர் வாங்கும் தொகை அதிகம் என்று. அப்பொழுது உங்களுக்கு என்ன தோன்றும்? இந்த வேலைக்குப்போய் வந்துவிட்டோமே என்றா?"

அந்தப் பெண்ணின் கண்களில் கோபம் கலந்த கண்ணீர் மின்னியது.

மேடம், என் அப்பா நான் நீதித்துறைக்கு வந்து சிறப்பாகப் பணியாற்ற வேண்டும் என்று ஆசைப்பட்டார். அவர் ஒரு போலீஸ் கான்ஸ்டபிள். அரசாங்க சம்பளத்திற்கு மேலே ஒரு ரூபாயை அவர் கை தொட்டது கிடையாது. என்னையும், என் சகோதரிகளையும் நன்றாகப் படிக்க வைத்தார். எனக்கு எப்படி மேடம் அப்படியெல்லாம் தவறான எண்ணம் தோன்றும்? என் அப்பா அப்படி என்னை வளர்க்கவில்லை !

*சபாஷ் அப்பா! இந்த அப்பா நன்னெறியை வாழ்ந்து காட்டியுள்ளார்.*

2. இன்னொரு பெண், இன்னொரு தேர்வு. இன்னொரு கேள்வி.

"உங்களுக்கு ஆதர்ச ஆணோ, பெண்ணோ யார்?" இவர் மாதிரி தான் வாழ வேண்டும். இவர் அறிவுரைதான் என் மந்திரம்– இப்படி...?

ம்ம். என் அப்பா மேடம் !

"வெரிகுட்."

"அவர் ஒரு தொழிற்சாலையில் வேலை செய்கிறார்."

"ம்ம்"

என் அப்பா, தன் வேலையைக் கவனத்துடன் கருத்தாய் செய்வார். என்னிடம், இங்கு வருவதற்கு முன் சொன்னார் : உனக்கு இந்த வேலை கிடைக்க என் வாழ்த்துக்கள். அப்படிக் கிடைக்கவில்லை என்று வைத்துக் கொள். கார்ப்பரேஷனில் தெரு கூட்டும் வேலை கிடைத்தால் உன்னைவிட சிறப்பாக யாரும் அந்த வேலையைச் செய்ய முடியாத அளவிற்கு நீ செய்ய வேண்டும் என்று. இதை நீ மறக்கக் கூடாது.

*சபாஷ் அப்பா. நெ.2 செய்யும் தொழிலே தெய்வம் என்று பெண்ணுக்கு உணர்த்தி விட்டீர்கள்.*

3. அம்மா அன்பைக் காட்டுவது போல அப்பாவால் முடியாமல் போகலாம். அதற்குப் பல காரணங்கள், உடல் ரீதியாக, மனோதத்துவ ரீதியாக இருக்கலாம். இதனாலேயே பெற்றோர்கள் போட்டியில் அம்மாக்கள் சூப்பர் ஸ்டார் கோப்பையைப் பெற்று விடுகிறார்கள். அப்பாக்கள் குறைந்தவர்கள் இல்லை என்பதைக் காட்டத்தான் திருச்சிராப்பள்ளியில் ஒரு அப்பா பெண்ணுக்குப் பிரசவம் பார்த்தார். அவர் நான் தந்தை மட்டுமல்ல தாயுமானேன் என்று உலகத்திற்குக் காட்டினார்.

எவ்வளவு தந்தைகள் நிலத்தை விற்று குழந்தைகள் படிக்க வேண்டுமென்று தங்கள் வாழ்க்கை அந்தஸ்தைக் குறைத்துக் கொள்கின்றனர். இந்த வாழ்க்கையின் குரூர நெரிசலில் கசங்கி குனிந்து ஒடுங்கிப் போகிறார்கள். ஆண்கள் அழுவதில்லை. அதனாலேயே அவர்களுடைய **சோகங்கள் வெளி வருவதில்லை.**

– **பிரபா ஸ்ரீதேவன்**
தினமணி – 21.9.2013

* * *

## அப்பா சொன்னது ஆயுளுக்கும் மறக்காது

குடும்ப வேலையாக பக்கத்து ஊருக்குப் போய் வரச் சொன்னார் அப்பா. “நாளைக்குப் போகிறேனே!” என்றேன். “இன்றைக்கு என்ன தடை?” என்ற அப்பாவின் குரலில் கடுமை. மறு பேச்சின்றி புறப்பட்டேன். திரும்பி வந்ததும் அப்பா சொன்னது ஆயுள் வரை மறக்காது.

ஒருநாள் தாமதத்தை லேசாக நினைக்காதே! எனக்கும் என் நண்பருக்கும் ஒரே நாளில் அப்பாயின்ட்மெண்ட் ஆர்டர் வந்தது. அன்று ஜூன் 30. சரியான மழை. மழையைப் பொருட்படுத்தாமல் 60 கி.மீ. தொலைவில் இருந்த அலுவலகத்துக்குப் போய் அன்றே வேலையில் சேர்ந்து விட்டேன் நான். நண்பர் மறுநாள் வந்து சேர்ந்தார். அடுத்த ஆண்டு எனக்கு ஏப்ரல் முதல் தேதி ஊதிய உயர்வு. அவருக்கு ஜூலை முதல் தேதி! ஒருநாள் தாமதத்தால் ஊதிய உயர்வு மூன்று மாதம் தள்ளிப் போனது. ஜனவரி, ஏப்ரல், ஜூலை மற்றும் அக்டோபர் முதல் தேதிகள்தான் ஊதிய உயர்வுக்கான நான்கு நாட்கள் என்று நடைமுறைச் சட்டம்.

இப்படி நண்பருக்கு 26 ஆண்டுகளாக தண்டனை தொடர்கிறது. ஆண்டுதோறும் அவரை விட மூன்று மாதம் முன்பு நான் வாங்கும் ஊதிய உயர்வைக் கணக்கிட்டால் லட்சத்தைத் தாண்டும்! அதுமட்டுமல்ல, நான் ஊதிய உயர்வு வாங்கிக் கொண்டு ரிட்டையரானால் எனக்கு பென்ஷன் அதிகம். அவர் ஊதிய உயர்வு வாங்காமலே ரிட்டையர் ஆவதால் பென்ஷனும் குறைவு. நஷ்டம் அதோடு முடியாமல் அவரது மனைவி வரை பாதிக்கும் என்று அப்பாவின் லெக்சர் நீள... **அப்பா**டா என்று வியந்தேன் நான்.

– **மு. அகமதுஷா**
திருத்துறைப்பூண்டி

# 36. அனுசரணை வேண்டும் மகனே !

**அன்பு மகனே!**

இன்று என்னை முதியவனாகப் பார்க்கும் உன்னை அன்போடு வேண்டுகிறேன். அன்பு கூர்ந்து என்னைப் புரிந்துகொள்!

சற்றே அழுக்கான ஆடை உடுத்தினாலோ அல்லது சாப்பிடும்போது பருக்கைகள் கீழே சிந்தினாலோ அருவருப்பு அடைகின்றாயே, தூய்மையைப்பற்றி சிறுவயதில் உனக்கு சொல்லிக் கொடுத்ததே நான்தானே!

எந்த ஒரு விஷயத்தையும் ஆயிரம் தடவை சொல்லி வெறுப்பேற்றுவதாகக் கூறுகின்றாயே. ஒரே கதையை எத்தனை முறை சொல்லி உன்னை அன்று தூங்க வைத்திருப்பேன் என்பதை சற்றே ஞாபகப்படுத்திப்பாரேன்!

உடல் தளர்ந்து களைப்பினால் ஒருநாள் குளிக்காவிட்டால் கூட கோபிக்கின்றாயே இன்று. விடாமல் உன்னைத் துரத்தி வந்து அழுக்குபோக குளிக்க வைத்தேனே அன்று ! யோசித்துப் பார்க்க மாட்டாயா?

வளர்ந்துவரும் தொழில்நுட்பம் பற்றி எனக்கு ஒன்றும் தெரியவில்லைதான். புரிந்துகொள்ள சற்றே அவகாசம் கேட்டால் அநாவசியமாக சினம் வருவது நியாயமா ?

எனது கால்கள் தள்ளாடும் போது சற்றே கைப்பிடித்து அழைத்துச்செல்லேன். அன்று உன்னை நான் கைப்பிடித்து நடை பழக்கியதைப் போல !

உன்னிடம் உரையாடிக் கொண்டிருக்கும் தருணங்களில் ஞாபகமறதியால் சிலசமயம் குழம்பிப்போவது உண்மைதான். அதற்காக எடுத்தெறிந்து பேசவேண்டாமே! அளவளாவும் செய்திகள் எனக்கு முக்கியமல்ல ! எனது அருகாமையில் நீ சற்றுநேரம் இருக்க வேண்டும் என்பதே முக்கியம் என்று நீ உணர வேண்டாமா மகனே !

முடியாத நிலையில் நான் சற்றே தளர்ந்து உள்ளேன். என்னிடம் அலுத்துக்கொள்ளாதே அடிக்கடி. ஆத்திரப்படாதே அவசியமில்லாமல். உதவிசெய். அன்றுநான் உனக்கு எனது கடமையைத் தவறாமல் செய்யவில்லையா? – சொல்லிக் காண்பிக்கின்றேன் என்று தயவு செய்து நினைக்காதே.

"கடவுளே! போதும் இந்த வாழ்க்கை. உன்னிடம் அழைத்துக் கொள் சீக்கிரமே என்னை," இப்படி எப்போதாவது நான் கூறினால் கோபப்படாதே, என்னைப் புரிந்துகொள். என்றாவது நீயும் அப்படிச் சொல்லக்கூடும் பின்னாளில்.

தவமாய் தவமிருந்து பெற்ற உன்னை ஆளாக்கிட நான் எவ்வளவு பாடுபட்டிருப்பேன். இதுவரை கைமாறு ஏதாவது கேட்டிருப்பேனா ? இப்போது கேட்கிறேன் மகனே !

*என் உடலும், உள்ளமும் சோர்ந்த நிலையில் என்னிடம் அன்பாக இரு ! **அனுசரணையாக** நடந்து கொள்! அதுபோதும் எனக்கு !*

***உன்னிடம் எப்போதும் அன்பு மாறாத***

**"அப்பா"**

- Provided by : **V.S. ராஜா**
திருச்சிராப்பள்ளி

* * *

# 37. அப்பா, இன்று நீங்கள் இல்லையே!

அப்பா காலமாகி 5 வருடங்கள் உருண்டோடி விட்டன. ஆனால் இன்றுதான் முதல் முறையாக அவரைப்பற்றி எழுதுகிறேன். அவர் ஒரு முக்கிய பிரமுகர் என்று நினைக்க வில்லையா அல்லது அவர் பற்றி எழுதுவதற்குப் பெரிதாக ஏதுமில்லை என்ற எண்ணமா என்றெல்லாம் கேட்கலாம். அப்பா மறைந்து விட்டார் என்ற எண்ணமே எனக்கு ஏற்படவில்லை. விண்ணப்பங்கள் பூர்த்தி செய்கையில் தந்தை பெயர் கேட்டிருப்பார்கள். அப்பா பெயருக்கு முன்னால் அமரர் என்று எழுத மனம் வரவில்லையே!

அப்பாவின் மன உறுதியும், திடமும் உன்னத மானவை. வாழ்க்கையின் கஷ்டமான அல்லது சோதனையான காலகட்டங்களில் சவால்களை எதிர்த்துப் போராடி வெற்றி பெற்றவர்.

எளிமையான வாழ்க்கை, நேர்மை தவறாத போக்கு, தியாக உணர்வு ஆகியனவற்றை பின்பற்றியவர். காந்தி அடிகளை நேரில் பார்க்கும் வாய்ப்பும், அவரது சொற் பொழிவைக் கேட்கும் சந்தர்ப்பமும் கிடைத்ததைச் சொல்லிக்கொண்டே இருப்பார். ஆகஸ்ட் 15, ஜனவரி 26 ஆகிய நாட்களில் எங்கள் தெருமுனையில் ஆட்டோ ஓட்டுனர்களின் உதவியோடு தேசியக் கொடியை ஏற்றி வைப்பார்.

அவர் உயிரோடு இருந்த காலத்தில் அவரை ஒரு பொருட்டாக மதிக்கவில்லையோ என்ற குற்றவுணர்வு நெருடிக்கொண்டே இருக்கிறது. பெரிய குடும்பத்தில் பிறந்து வளர்ந்த அப்பா தன் இளமையில் பட்ட கஷ்டங்களையும், அனுபவங்களையும் கேட்டிருக்கலாமோ!

அப்பா அவ்வப்போது சொல்லும் ஆங்கிலப் பாடல்களையும், அலுவலகத்தில் அவருக்கு கிடைத்த அனுபவங்களையும், சோதனை களையும் முழுமையாக கேட்காமல் இருந்து விட்டேனே என்ற வருத்தம் இன்றும் எனக்கு உண்டு.

என்னுடன் பிறந்த ஐந்து சகோதரர்களையும் கல்லூரியில் படிக்க வைத்தார். சுமாரான குடும்பத்தை சேர்ந்த நாங்கள் அனைவரும் இன்று நல்ல நிலையில் இருக்கிறோம்.

இந்த மனிதர் பிள்ளைகளின் படிப்புக்காக இப்படியா செலவு செய்வார் என்று அம்மா சொல்லிச் சொல்லி மாய்ந்து போவார். தன்னுடைய சம்பளம் அதிகமாக இல்லாவிட்டாலும், என் தமக்கையை நர்சரி பள்ளியில் சேர்த்தார்.

தன் வாழ்நாள் முழுவதும் சிக்கனத்தை அப்பா கடைபிடித்தார். நான் பள்ளியில் படிக்கும்போது அண்ணனின் புத்தகங்களைச் சீரமைத்து அட்டை போட்டுத் தருவார். தேவையில்லாத பேப்பர்களை சேகரித்து ரஃப் நோட்டு தைத்துக் கொடுப்பார். நாங்கள் பயன்படுத்தாமல் இருக்கும் சட்டை, பேன்ட்களை மகிழ்ச்சியோடு அணிந்து கொள்வார்.

படிப்பு விஷயத்தில் எப்படி தாராளமாக செலவு செய்தாரோ அதேபோல் சாப்பாடு விஷயத்திலும் செலவு செய்தார். சீசனுக்கு ஏற்றார்போல், மாம்பழம், சீத்தாப்பழம் என்று வாங்கித்தருவார். பப்பாளிப் பழத்தை நேர்த்தியாக நறுக்கி, ஐஸ் சேர்த்து ஐஸ்கிரீம் தயாரித்துத் தருவார். நினைத்தாலே இன்றும் இனிக்கிறது.

**அப்பா, இன்று நீங்கள் இல்லையே.** நாங்கள் நல்ல நிலையில் இருக்கிறோம். உங்களை நன்றியோடு நினைத்துப் பார்க்கிறோம்.

எங்களுக்காக நீங்கள் பட்ட கஷ்டங்களை எண்ணிப் பார்க்கிறோம். எங்கள் தவறுகளை பொறுத்தருளுங்கள்.

உங்களைப் போல், தங்கள் பிள்ளைகளை உருவாக்கி வருகின்ற அப்பாக்கள் பலர் இருப்பினும், உங்களைப்போல் எங்களுக்கு யார் இருக்க முடியும்?

- Provided by : **V.S. ராஜா**
திருச்சிராப்பள்ளி

* * *

# 38. அன்பு அப்பாவுக்கு ஓர் மகளின் அர்ப்பணிப்பு

ஆயிரக்கணக்கான மாணவர்கள் படிக்கும் அந்தப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த கல்லூரிகளுக் கிடையே பலவிதமான போட்டிகள் நடந்து கொண்டிருந்தன. அன்று, "மிகச் சிறந்த மாணவி யார்?" என்று நிர்ணயிக்கும் போட்டி. பலவிதமான போட்டிகளிலிருந்து தேர்ச்சி பெற்று இறுதிச் சுற்றுக்கு 12 பேர் தேர்வாயினர். தேர்ந்தெடுக்கப்பட்ட அந்த 12 பேர்களுமே மிகச்சிறந்த தகுதி படைத்தவர்களாக இருந்தார்கள். ஒருவொருக் கொருவர் சளைத்தவர்கள் இல்லை. இவர்களில் ஒருவரை மட்டுமே தேர்வு செய்வது நடுவர்களுக்கு மிகப்பெரிய சவாலாக இருந்தது. இறுதி கேள்விகளை நீதிபதி ஒவ்வொருவரிடமும் கேட்க ஆரம்பித்தார். எல்லா விதமான கேள்விகளுக்கும் அந்த 12 பேரும் பதிலளித்தார்கள். ஒரு குறிப்பிட்ட கேள்விக்கு பதில் அளித்த மாணவி மட்டும் எல்லோருடைய பாராட்டுகளையும் பெற்றார். அந்த கேள்வி,

"இந்த நாள் உன் வாழ்க்கையின் கடைசிநாளாக இருந்தால் அந்த நாளை யாருடன் கழிப்பாய் ? ஏன்? எதற்கு ? "

கொஞ்சம் கூட யோசிக்காமல் உடனே வந்தது பதில்.

*"ஒரு அப்பா தன் மகளின் வாழ்க்கையில் முக்கியமான பகுதியை வகிக்கிறார். அவர்தான் அவள் சந்திக்கின்ற முதல் ஆண். அதனால் அவரையே தனது முன்னுதாரணமாகக் கொள்கிறாள். இவ்வுலகில் உள்ள பிற ஆண்களை தன் தந்தையின் மூலம் பிரதிபலிப்பதும், அவர்கள் தன் தந்தையைப் போல இருக்க வேண்டும் என்றும் எதிர்ப்பார்க்கிறாள்.*

*அவளது எல்லா பருவங்களிலும் அவளது தந்தையே சிறந்த தூண்டுகோலாக இருக்கிறார். அவர்தான் அவளின் வழிக்காட்டியாக, பாதுகாப்பாளராக, நண்பனாக மட்டும் இல்லாமல் சிறந்த நலன் கருதியாகவும் இருந்து தனது அன்பையும், பாசத்தையும் அவளைச் சுற்றி ஏற்படுத்துகிறார்.*

*எனது ஒவ்வொரு பருவத்திலும் என் தந்தையின் பன்முகங்களையும் கண்டு நான் வளர்ந்ததால் அவர்தான் எனது வாழ்க்கையின் முன்னேற்றத்திற்குக் காரணம் என்று நம்புகிறேன். அதனால் என் வாழ்க்கையின் கடைசி நாளை என் அப்பாவிற்கு அர்ப்பணித்து அந்த 24 மணி நேரத்தையும் என் அன்பு அப்பாவுடன் கழிக்க விரும்புகிறேன்."*

இந்தப் பதிலைத் தொடர்ந்து வந்தன பலத்த கரகோஷங்கள். அந்த நிகழச்சித் தொகுப்பாளர் அவளது பதிலில் மெய்சிலிர்த்து விட்டார். அவர் "இத்தகைய பெருமைக்குரிய இந்த மாணவியின் அப்பா இங்கு இருந்தால் எழுந்து நிற்குமாறு பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்" என்றார்.

அந்தப் பெருமைக்குரிய தந்தை எழுந்து நின்று தன் கைகளை அசைத்தார். ஆயிரக்கணக்கான கண்கள் அவரையே நோக்கின. எல்லா வீடியோ கேமராக்களும் அவரை நோக்கித் திரும்பின. அங்கு அமர்ந்திருந்த பேராசிரியர்களுக்கும் பெற்றோர்களுக்கும் கண்களில் நீர் தளும்பியது. இதைக்கண்ட அவளது தந்தை தனது மகளின் உரையினால் மெய் சிலிர்த்து மிகவும் நெகிழ்ச்சியடைந்து புளகாங்கிதம் அடைந்தார். அவர் இருகரங்களையும் கூப்பி அந்த மக்கள் வெள்ளத்தின் கரகோஷங்களை பணிவுடன் ஏற்றுக்கொண்டார். கண்களிலிருந்து வழிந்த ஆனந்தக் கண்ணீரை அவரால் என்ன முயன்றும் அடக்க முடியவில்லை. அவரது வாழ்க்கையில் மிகச் சிறந்த பரிசினை தனது மகளின் மூலம் அன்று பெற்றதாகக் கருதி மிகப் பெருமிதம் கொண்டார். இது ஒரு மகள், தனது தந்தையின் மீது காட்டும் உண்மையான அன்பு, பாசம் மற்றும் **அர்ப்பணிப்பாகும்.**

Provided by: **B.K. அருணா**
திருச்சிராப்பள்ளி-1

* * *

## நீ தரவேண்டியது ஏதுமில்லை....மகனே!

ஒருநாள் மாலை சமையலறையில் வேலை செய்து கொண்டிருந்த தன் அம்மாவைத் தேடி மகன் வந்தான். தன் கையில் வைத்திருந்த தாள் ஒன்றைக் கொடுத்து அம்மாவைப் படிக்கச் சொன்னான்.

நம் வீட்டுத் தோட்டத்தில் புல் வெட்டச் சொன்னாயே. அதற்கு நீ தர வேண்டியது ரூபாய் 100/-

எனது அறையை சுத்தம் செய்ததற்கு எனக்குத் தர வேண்டியது ரூபாய் 75 /-

அவ்வப்போது கடைக்குப் போய் வந்த வகையில் தர வேண்டியது ரூபாய் 30/-

குப்பைத் தொட்டியையும் கொல்லைப் புரத்தையும் சுத்தம் செய்ததற்கு தர வேண்டியது ரூபாய் 75 /-

ஆக மொத்தம் ரூபாய் 280/- நீ தர வேண்டும்.

இந்தக் கணக்கைப் படித்த அம்மா, சிரித்துக் கொண்டே மகன் கொடுத்த தாளின் பின்புறம் இப்படி எழுதினாள்.

உன்னை பத்து மாதங்கள் சுமந்து பெற்றதற்கு நீ தர வேண்டியது ஏதுமில்லை.

உனக்கு உடம்பு சரியில்லாத போது, இரவெல்லாம் கண் விழித்து பிரார்த்தனை செய்ததற்கு நீ தர வேண்டியது ஏதுமில்லை.

உன்னை நல்ல படியாக வளர்த்தெடுக்க நான் பட்ட கஷ்டங்களுக்கும், சிந்திய கண்ணீருக்கும் நீ தர வேண்டியது ஏதுமில்லை.... ஏதுமில்லை மகனே!

- Provided by : **N. ரகோத்தமன்**

# 39. பெற்றோர்களைக் கவனித்தல் மகன் கடமையா அல்லது மகள் கடமையா?

ஒரு மகளின் கேள்வி :

*எனக்கு வயது 40. எனக்கு 2 குழந்தைகள். ஒரு ஆண், ஒரு பெண். இருவரும் படிக்கிறார்கள். சமீபத்தில் என் கணவர் இறந்துவிட்டார். இப்பொழுது அம்மா வீட்டில் இருக்கிறேன். அம்மா, அப்பா இருவரும் வயதானவர்கள். இருவரும் படுக்கையிலே இருக்கிறார்கள். எல்லா வேலையையும் நான்தான் செய்யனும். எனக்கு ஒரு அண்ணன் இருக்கிறார். ஆனால் அவரோ, அவர் மனைவியோ இவர்களை கவனித்துக் கொள்வதில்லை. என்னால் இவர்களை கவனித்துக் கொள்ள முடியவில்லை. தாய் தந்தையை கவனித்துக் கொள்வது மகன் கடமையா, மகள் கடமையா? எனக்குச் சுமாராக எழுதப் படிக்கத் தெரியும். ஏதாவது வேலை செய்து பிழைத்துக் கொள்ளலாம் என்று பார்த்தால் இவர்களை யார் கவனிப்பது? எனது பிள்ளைகளை நன்றாக படிக்க வைக்க வேண்டும் என்பது என் ஆசை. எனக்கு நல்ல தீர்வை கூறுங்கள்.*

பதில் :

நாம் பிறந்ததும், இந்தக் குழந்தையை வளர்க்க வேண்டியது தாயின் கடமையா, தந்தையின் கடமையா என எந்த தாயோ, தந்தையோ சண்டையிடுவதில்லை. மாறாக இருவரும் ஒன்று சேர்ந்து கொஞ்சிக் குலவி தங்கள் மார்பிலும், தோளிலும் போட்டு குழந்தைகளை வளர்க்கிறார்கள். காலை உணவு நீ கொடு, மாலை உணவு நான் கொடுக்கிறேன் என்று பிரித்துக் கொள்வதில்லை. தாலாட்டி, சீராட்டி, பள்ளிக்கு அனுப்பி கல்லூரி என எதிலும் குறையின்றி நடத்துகிறார்கள். தங்கள் தகுதிக்கு மீறி கஷ்டப்பட்டு திருமணம் செய்து வைக்கிறார்கள். அதன் பின்னரே அந்தப் பெற்றவர்கள் புறக்கணிக்கப் படுகிறார்கள், அனாதைகளாகிறார்கள்.

மகளே! பெற்றவர்களைக் கவனித்து கொள்வது மகன் கடமையா, உங்கள் கடமையா என்று நீங்கள் கேட்கிறீர்களே..... பெற்ற உங்களையும், உங்கள் அண்ணனையும் வளர்க்க வேண்டியது தாயின் கடமையா, தந்தையின் கடமையா என அவர்கள் கேட்டார்களா என்ன? உங்கள் இருவரையும் கூறு போட்டார்களா என்ன? உங்கள் அண்ணனும், நீங்களும் மட்டும் ஏன் இவ்வாறு செய்கிறீர்கள். உங்களுக்கும் மகன், மகள் இருக்கிறார்கள் அல்லவா? அவர்கள் நீங்கள் பெற்றவர்களை ஏலம் விடுவதை பார்த்துக் கொண்டிருக்கிறார்கள் அல்லவா? நாளைக்கு உங்களுக்கு வயதாகும் போது, பெற்றவர்களுக்கு நீங்கள் செய்ததைத்தான் அவர்கள் உங்களுக்குச் செய்வார்கள் என்பதை ஏன் மறந்து போகிறீர்கள்?

படுக்கையில் கிடக்கும் பெற்றவர்களைக் கவனிப்பது சிரமம்தான். அதைவிட சிரமம் குழந்தைகளான உங்களை அவர்கள் வளர்த்தது. தாய் தந்தையான பின்னரே தாயின் அருமையும், தந்தையின் அருமையும் தெரியும் என்பார்கள். அப்படியும் தெரியாதவர்களை என்ன செய்ய?

மகளே! மனது வலிக்கிறது. நாளுக்கு நாள் வளர்ந்து வரும் முதியோர் இல்லங்கள் மருட்டுகின்றன. நமக்கு வயதாகிக் கொண்டே போகிறது எனும் போது நாளை என்பதே மிரட்சியாக உள்ளது. முதியோர் இல்லங்களில் சேரப் பணம் வேண்டும். பெற்ற பிள்ளைகளின் நல்வாழ்விற்காக தங்கள் வாழ்நாள் மட்டுமின்றி உழைத்து சம்பாதித்த அனைத்தையும் தொலைத்து விட்ட பெற்றவர்களை நினைத்து நெஞ்சம் குமுறுகிறது. அவர்களை நினைத்தால் கவலையாக உள்ளது.

**– ஒரு வாசகியின் கேள்வியும்**
**திருமதி. இந்துமதி அவர்களின் பதிலும்**
தினமலர் – வாரமலர் 24.6.2012

* * *

# 40. அசட்டுத்தனம்

வீட்டுக்குள் நுழையும்போதே நடுஹாலில் பெரிய கடிகாரம் நின்றிருந்தது. ரோஸ்வுட் சட்டத்துக்குள் ரோமன் லெட்டர் எண்களும் பித்தளை நிற கடிகார முட்களும் அமைந்த கடிகாரம்.

இரண்டு ஆட்கள் அதைச் சீரமைக்கும் பணியில் இருந்தார்கள்.

"வாப்பா சந்தானம்" – மணி என்னை உற்சாகமாக வரவேற்றான்.

"இதென்ன புதுக்கடிகாரம்?" என்றேன்.

"நேத்து ஏலத்துல எடுத்தேன். ராபர்ட் கிளைவ் காலத்துல கோட்டையில இருந்த கடிகாரம்" – பெருமைத் ததும்பியது மணியின் குரலில்.

மணிக்குப் பழங்கால பொருட்களைச் சேகரிப்பதில் அதிக ஆர்வம். தனி ரூமில் கலைப்பொருட்களை அடுக்கி வைத்திருந் தான். ராஜா காலத்துக் கோப்பைகள், மரச் சாமான்கள், ஓவியங்கள், ஜாடிகள், சோழர் – பாண்டியர் கால நாணயங்கள், ஓரணா, ரெண்டணா, ஓட்டைக் காலணா நாணயங்கள், பாரதியார், காந்திஜியின் கையெழுத்து என நிறைய சேர்த்திருந்தான்.

கிட்டத்தட்ட லட்சக்கணக்கான ரூபாய் மதிப்புள்ள பொருட்கள் அவனிடம் இருந்தன. அரிய பழமையானப் பொருட்களைச் சேகரித்து, அவற்றைப் பாதுகாக்க அவன் எடுக்கும் முயற்சி, அக்கறை, கவனிப்பு ஆச்சர்யமாக இருக்கும். நண்பர்கள் மத்தியில் அவனுக்கு அபார மதிப்பு.

"பழம்பொருட்கள், கலைச்சின்னங்களை நாமதாம்பா பாதுகாக்கனும். அவை எல்லாம் அரிய பொக்கிஷங்கள். நம்ம உயிர் மாதிரி அவை. நமது சந்ததிகளுக்கு நாமதான் அவற்றின் சிறப்பை, பெருமையை எடுத்துக்காட்டி உணர வைக்கணும்" என்பான்.

"என் வீட்டில் பாண்டியர் கால முத்திரை மோதிரமும், ஓலைச்சுவடிகளும் வெச்சிருக்கேன். வந்து பார்" என்று எனக்கு முன்னமையே அழைப்பு விடுத்திருந்தான். வீட்டிலே போதிய இடம் இல்லை என்று சொல்லி அம்மா அப்பாவை முதியோர் இல்லத்தில் Paying guest–ஆக சேர்த்திருந்தான்.

மனைவிக்கு இன்று ஸ்கூல் லீவு, "நான் பார்த்துக்கொள்கிறேன்'' என்று அவள் சொன்னதால் நான் கிளம்பி வந்திருக்கிறேன் என்றேன்.

"சரி போகட்டும்...நீ என் கலெக்ஷன்ஸ் பத்தி எதுவும் சொல்லலையே!" என்றான் ஆர்வமாக.

அப்பா, அம்மாங்கற வீட்டிலிருக்கிற விலை மதிக்க முடியாத பொக்கிஷங்களை வெளியே வீசி எறிஞ்சுட்டு, வேண்டாத குப்பைகளை விலை கொடுத்து வாங்கி வீடு முழுக்க நிரப்பி வெச்சிருக்கே! உன்னோட இந்த அசட்டுத்தனத்தைப்பற்றி நான் என்ன சொல்றது? என்று சொல்லி விட்டு வெளியேறினேன்.

**– ஜி. ஏ. பிரபா**

ஆனந்த விகடன் 21.7.2002

❋ ❋ ❋

குழந்தைகள் சிறுவயதிலிருந்தே பெற்றோருக்கு தினமும் நமஸ்காரம் செய்வது வங்கியில் டெப்பாசிட் செய்வது போல. அவர்கள் வாழ்த்த வாழ்த்த அவை அப்படியே சேர்ந்து, அந்த அருள், வளரும் தலைமுறையை ஒரு கவசம் போல எப்போதும் காத்து நிற்கும்.

# 41. இரண்டு தேவதைகள்

ஒரு குழந்தை பிறக்கத் தயாராகிக் கொண்டிருந்தது. அதற்கு முன் அது கடவுளைக் கேட்டது.

குழந்தை : இறைவா! நீ என்னை பூமிக்கு அனுப்பப் போவதாகச் சொல்கிறார்கள். நான் இவ்வளவு சிறியவனாகவும், உதவியற்றவனாகவும் இருக்கிறேன். நான் அங்கு எப்படி வாழப் போகிறேன்?

கடவுள் : பல தேவதைகளில் உனக்கென்று இரண்டு தேவதைகளை தேர்ந்தெடுத்து இருக்கின்றேன். அவர்கள் உனக்காகக் காத்திருப்பார்கள். உன்னை நன்கு கவனித்துக் கொள்வார்கள்.

குழந்தை : ஆனால், இங்கே சொர்க்கத்தில் நான் பாடுவதையும், சிரிப்பதையும் தவிர வேறெதுவும் செய்வதில்லை. நான் மகிழ்ச்சியாக இருக்க எனக்கு அதுதான் வேண்டும்.

கடவுள் : உனது தேவதைகள் தினந்தோறும் உனக்காகப் பாடுவார்கள். அவர்களது அன்பை உன்னால் உணரமுடியும். நீ மகிழ்ச்சியாக இருப்பாய்.

குழந்தை : எனக்கு மனிதர்கள் பேசும் மொழி தெரியாது. அவர்கள் பேசுவதை எப்படி புரிந்து கொள்ள முடியும்.?

கடவுள் : அது மிகவும் சுலபம். உனது தேவதைகள் நீ கேட்டறியாத இனிய வார்த்தைகளைச் சொல்லித் தருவார்கள். மிகவும் பொறுமையுடனும், அக்கறையுடனும் உனக்கு பேசுவது எப்படி எனக் கற்றுத்தருவார்கள்.

குழந்தை : ( கடவுளை ஏறிட்டுப்பார்த்து ஆவலுடன் கேட்டது ) நான் உன்னுடன் பேச விரும்பினால் என்ன செய்வது?

கடவுள் : ( புன்னகைத்துக் கொண்டே கூறினார் ) உனது இரண்டு கரங்களை சேர்த்து வைத்து எப்படி பிரார்த்தனை செய்வது என்று கற்றுத் தருவார்கள்.

குழந்தை : (மிகவும் வருத்தத்துடன் கூறியது) ஆனால் நான் இனிமேல் உன்னைக் காண முடியாது. ஆகையால் எப்போதும் வருத்தமாகவே இருப்பேன்.

கடவுள் : (குழந்தையை அணைத்துக் கொண்டு கூறினார்) நான் எப்போதும் உன்னுடன் இருப்பேன். உனது தேவதைகள் என்னைப் பற்றிப் பேசுவார்கள். பின்னர் என்னைக் காணும் வழியையும் உனக்குக் கற்றுத் தருவார்கள். ( அந்த விநாடியில், சொர்க்கத்தில் மிகுந்த அமைதி நிலவியது. ஆனால் பூமியிலிருந்து குரல்கள் மிக நெருக்கத்தில் கேட்டது).

குழந்தை : (மிக அவசர அவசரமாக கேட்டது) ஓ! இறைவா, நான் இந்த இடத்தைவிட்டு நீங்கப் போகிறேன் என்றால் எனது தேவதைகளின் பெயர்களைச் சொல்லுங்கள்.

கடவுள் : உனது தேவதைகளின் பெயர்கள் முக்கியமல்ல, ஆனால் நீ அவர்களை **அம்மா, அப்பா** என்று கூப்பிடுவாய்.

— ?

* * *

# 42. நிலையான வாழ்வு தரும் நீத்தார் வழிபாடு

தன்னைப் பெற்று வளர்த்து ஆளாக்கிய தாய் தந்தையரைப் போற்றிப் பாதுகாக்க வேண்டியது பிள்ளைகளின் கடமை. பெற்றோர் வாழும் காலத்தில் உணவிட்டு, உடையளித்து அவர்களைக் காப்பாற்ற வேண்டும். தாய் தந்தையர் இறந்த பின் அவர்களுக்குச் சிராத்தம் செய்ய வேண்டும். ஒவ்வொரு மாதமும் அவர்களை நினைவு கூர்ந்து எள்ளும், நீரும் அளிக்க வேண்டும் என்று தர்ம சாஸ்திரங்களில் சொல்லப் பட்டுள்ளது. இது " திலதர்ப்பணம்" எனப்படும்.

முன்னோர்களை வழிபட வேண்டும் என்பதைத் திருக்குறள் வலியுறுத்தியுள்ளது. இது, வேதங்கள் கூறும் வைதீக நெறியாகும். முன்னோர் வழிபாட்டை விருப்பத்துடன் சிரத்தையாகச் செய்ய வேண்டும. அதனால் தான் திவசத்தை சிராத்தம் என்கிறார்கள். வருடத்துக்கு ஒருமுறை மும்மூன்று தலைமுறை (தந்தை, பாட்டன், முப்பாட்டன்) க்கு சிராத்தம் தர வேண்டும்.

சிராத்தம் தருபவர்களும், ஏதோ சில காரணங்களால் சிராத்தம் தராமல் இருப்பவர்களும் மாளய பட்சத்தில் தம் முன்னோர்களுக்குத் தர்ப்பணம் செய்ய வேண்டும். புரோகிதருக்குப் பணம் தந்து, ஹிரண்ய சிரார்த்தம் செய்ய வேண்டும்.

மாளய பட்சம் என்பது முன்னோர் வழிபாட்டுக்கு உள்ள விசேஷமான 15 நாட்களாகும். கன்யா ராசியில் சூரியன் நுழையும் போது வரும் கிருஷ்ண பட்சம் (தேய்பிறை) 'மஹாளய பட்சம்' எனப்படும். இந்த நாட்கள் புரட்டாசி மாதத்தில் வரும். இந்த நாட்கள் புராண ரீதியாகவும் விசேஷமானவை. முன்னோர்கள் வாழும் இடத்தைப் 'பிதுர் லோகம்' என்று புராணங்கள் கூறுகின்றன. இது தெற்கே உள்ளதால் தென் புலம் என்றும் அழைக்கப்படுகிறது. முன்னோர்களுக்கு அவர்கள் வசித்த ஊரைப் பார்க்க வேண்டும் என்ற ஆசை இருக்கும் அல்லவா? இந்தப் பதினைந்து நாட்களில் முன்னோர்களை பூலோகத்தைச் சுற்றிப் பார்க்க அனுப்புகிறான் எமன். வந்த விருந்தாளிகளை உபசரிக்கும் நாம், பூலோகம் வரும் முன்னோர்களை மகிழ்விக்காமல் இருக்கலாமா? அதனால் தான் இந்தக் காலகட்டத்தில் பிதுர் தர்ப்பணம், பிதுர் சிராத்தம் ஆகியவற்றைக் கட்டாயம் செய்ய வேண்டும் என்று தர்ம சாஸ்திரங்கள் சொல்கின்றன.

எல்லா நாட்களிலும் தவறாமல் முன்னோருக்கு வழிபாடு செய்ய வேண்டும். அது முடியாத நிலையில்.... 1) மஹாளய பட்சத்தில் வரும் மக நட்சத்திரமும், திரயோதசியும் கூடிய கஜச்சாயை புண்யகாலம் 2) பரணி நட்சத்திரத்துடன் கூடிய மகாபரணி நாள் 3) எட்டாவது திதி நாளான மகாஷ்டமி ஆகிய மூன்று நாட்களிலும், மகாளய அமாவாசையன்றும் தவறாமல் தர்ப்பணம் செய்ய வேண்டும்.

தர்ப்பணத்தில் பயன்படுத்தப்படும் எள், முன்னோர்களுக்குச் சந்தோஷத்தைக் கொடுக்கும் என்று சொல்லப்படுகிறது. தர்ப்பணத்தைக் காசி, ராமேஸ்வரம் முதலான இடங்களில் செய்தால்தான் புண்ணியம் கிடைக்கும் என்பதில்லை; அவரவர் ஊர்களில் குளக்கரை, ஆற்றங்கரை அல்லது வீட்டில் கூடச் செய்யலாம். தர்ப்பணம் செய்வதுதான் முக்கியம். முன்னோர்களை முறைப்படி மகிழ்வித்தால் துன்பங்கள் எல்லாம் நீங்கி வளமான வாழ்வு கிடைக்கும் என்பது நிச்சயம்.

* * *

சிரார்த்தம் செய்ய உகந்த இடங்கள் :
திலதர்ப்பணபுரி (சிதலைப்பதி), திருவெண்காடு, பவானி, கயா, காசி, திருப்பூவணம், ராமேஸ்வரம், பூவாளூர் (லால்குடி அருகில்) ஸித்பூர் (அம்மாவுக்கு)

# 43. DEAR DAD

I seldom take the time to tell you
    All the things I feel.
I want to tell you that my love
    For you is very real.

I'll long appreciate your many
    Kind and thoughtful deeds
You've always been so sensitive
    Responding to my needs.

I feel that you are special;
    Let me thank you from my heart
For all your treasured wisdom
    And the warmth that you impart.

I always will respect you for
    The ways in which you care.
It's reassuring knowing that
    Your love is always there.

# 44. Who is a Father?

A father is someone who
wants to catch you before you fall
but instead picks you up,
brushes you off,
and lets you try again.

A father is someone who
wants to keep you from making mistakes
but instead lets you find your own way,
even though his heart breaks in silence
when you get hurt.

A father is someone who
holds you when you cry,
scolds you when you break the rules,
shines with pride when you succeed,
and has faith in you even when you fail.

**தன்னுடைய கடைசி காலத்தில்**

**மனம் சற்றே ஆதங்கப்படுகின்றது குற்ற உணர்ச்சியால்,**

**அம்மா அப்பாவுக்குத் தன்னுடைய கடமையை**

**இன்னும் சற்று கூடுதலாகச் செய்திருக்கலாமோ என்று.**

அன்னையர் தினம் : மே மாதத்தில் வரும் 2-ஆம் ஞாயிறு

தந்தையர் தினம் : ஜூன் மாதத்தில் வரும் 3-ஆம் ஞாயிறு